யுவந்துகும்மி யடியுங்கடி. (௯௧)

மூலவித்தில் முளைத்தெழுந்தே
முத்திதரும்பர சித்திதனை
நாலும்போதுஞ் சுகூது செய்து
நன்றாகக்கும்மி யடியுங்கடி. (௯௨)

ஷறகுநான்கு தர்க்கத்திலுஞ்
சகியாய்க்கும்மிக் கவிதைசெய்தேன்
மறைவல்லார்பிழை தீர்த்துக்கொள்வாரென
வரிசைக்கும்மி யடியுங்கடி. (௯௩)

லாயிலாகஇல் லல்லாகு
முகம்மதுற்றசூலுல் லாகியென்று
வாய்மனமொத்த தீனோர்க்குச்சொர்க்க
வாழ்வென்றுகும்மி யடியுங்கடி. (௧௪)

நற்கருத்தாக பக்கீறுதுமான்மெய்ஞ்
ஞானக்கும்மி படித்ததையும்
எக்கின்கொண்டதி னவர்க்குநிதம்
இலாகிதிருவுள மாகஆமீன். (௧௫)

மெய்ஞ்ஞானக்கும்மி - முற்றிற்று.

---

பதம்-இராகம், சுருட்டி ஆதிதாளம்.

பல்லவி.

சித்தமுமேயென் மனதிலேபிரமிக்குது
மேசப்பிரகாசத்திலே-இதயம்.

அநுபல்லவி.

கத்தனெனுகிவரப் புகழ்ந்து அருள்புரிந்த
கருணையாலநபி சரணமேபரவ. (சித்த)

சரணங்கள்.

(௧) ஆலமதைத்தேனுகவுண்டு-நூருடனே
ஆயிரமலை லாவைவிண்டு
நாலுமறைப்பொரு ளாகக்கண்டு-சுபிரசர்
நபுதுலாலீ மானுங்கொண்டு-நலப்பெருகச்
சாலிகநனருணமு மேதமுஞ் சுவடு
தானில்லாதஇரு பாதமும்-வசந்த
சிலசற்குணநற் போதமும்-கருணை
சேருமன்புப்பிர சாதமும்
வாலமாமதி யக்கரமீதினில்
வந்துசேனை செயக்கவிமாவுரை
மேலும்புகலுமிக லாய்விளங்கவொளி
விசைசெறிந்த சரணபங்கயங்கொழு. (சித்த)

(௨) கல்லையுளம்புரிவோரை வென்று-நபிமாருக்குக்
காட்சிகொடித்திமமாய் நின்று
வல்லமையாய்மிகுறுஜிற் சென்று-அறுஷதைக்கடந்து
வசனங்களொன்றுபிர முப்பயின்று-குதாயுடனே

சொல்லவே நம்பிரசாரமும்
சோபனந்தருவிஸ்தாரமும்-நேமம்.
அல்லும்பகலு மைந்தரோமும்-தொழ
அறிக்கைசெய்யுமுபகாரமும்
புல்லினிடத்தினிலாழி பொருத்தியே
பூரவோ ரிரவாகவந்
நில்லிலே யவதரித்துப் பஜிர்தொழு
மிங்கிதபொற்பத சேவடிதுதிசெய. (கித்த)

(௩) அங்கநறுங்கஸ்தூரி வாசம் பதினென்
ணாயிரம் ஆலமெல்லாம்புகழும்ப்ர காசம்
இங்கிதமாகக் கலிமாவுபதேசம்-பெருந்திரேனை
இரட்சிக்கும் விருத்திகுணநேசம்-படிமாவாலாயிரந்
துங்கரன்புடனருந்தவே-குபிர்
துரத்திநன்னெறிபொருந்தவே-அடிந்த
வங்கரமதுபொருந்தவே-மன
மகிழ்ந்தயர்ந்தவன் பொருந்தவே
இங்கிடாமதவேதநல்லாகிய
சிந்தைகூரப்துல் லாதருபுத்திரர்
சங்குளவாருதி மதில்வள்ளல்நபி
சல்லல்லாகு அலைகிவசல்லமே. (கித்த)

பத - முற்றிற்று.

---

பதம்-இராகம் நாதநாமக்கிரிகை-ஆதிதாளம்.

பல்லவி.

வரக்காணேனே-என்சாமியை-வரக்காணேனே
நபியுல்லாவை-வரக்காணேனே

அநுபல்லவி.

ஒருக்கா லிருக்கால் மூக்காலமு மல்ல
வுள்ளநாள் வரையும் விள்ளுமாசைதீர
பெருக்காகுதவே யொருக்காலேவரப்
பேசப்படுமோ அபுல் காசிமுகம்பதனை (வரக்கா)

சரணங்கள்.

(௧) பாசமான்வலை வீசிமாந்தரைய
பாயமாகவேயு பாயஞ்செய்திருது
பேசம்வஞ்சனிபு லீசவங்கணனும்
பிடித்துவன்னியில் விடுத்திடாமல்வரும்

பிறவியைநீக்கி-யடியவனைத்-துறவியுள்ளாக்கி-லிக்காவினில

ஆசிக்கான திரு வாசலிற்புகுத
வாகத்தொண்டுசெய்து றாருகண்டுதொழ
நேசம்வைத்தவுடன் பேசுஞ்சொற்கிரங்கி
நினைவுவைத்திறகு லெனப்புகழ்ந்திடவே. (வரக்கா)

(௨) ஞானப்பாமுதல்வடிவைப் போலமைத்துருக்
கொண்டுசுருதினில் ரண்டுதரம்விழ
அப்போதாதமெனப் பெயருங்கொடுத்
தந்தநாள்முத லிந்தநாள்வரையும்

ஆதரவிந்து தன்பாவினிற்-போதரவிந்து-நலன்கள்பெற

இப்போமனது குருப்பாதம்பிடித்
திச்சைகொண்டருளை யுச்சரிக்கும்போது
திற்போதனை யைம்பு லப்பாதகர்வந்து
தோற்கைகொள்ளுமந்த வேட்கையைநீக்கவே. (வரக்கா)

(௩) இருபோதற்றிட வொருநேமத்துடன்
எண்ணிஞலியக் கண்ணிஞல்வருடி
ஒருநேமத்துடன் பரமோகித்திடு
மொல்லைதன்னில்மிகு வல்லடியாகவே

யொட்டிக்கொண்டே தான்-கபாலத்தை.
யெட்டிக்கொண்டே தான்-நடந்தேறி

வருமாயைத்திர ளிருளாய்மொய்த்தென்னை
வாதுசெய்யுமந்தப் போதுள்ளந்தடுமாறி
பொருமூச்சானற் கருவாடப்படும்
போதத்திலேதிருப் பாதவடிவுகா (வரக்கா)

பத - முற்றிற்று.

பதம், இராகம், காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி.

திருப்பாதத்தெரிசனை கண்டேனே-அடியேன்
சென்மசாபல்யம்பெற்றுக்கொண்டேனே.

அநுபல்லவி.

அருட்பார்வைதந் திணங்கி-யாண்டெனைரட்சைசெய்யும்
வரப்பிரசாதரான வள்ளல்மசூதுசாகிபே. (திருப்பாத)

சரணங்கள்.

(௧) முன்மதக்குரோதமேக முகத்தொளிகாட்டி
முன்செய்தகன்மவினை மூடறவோட்டி
நன்மைதரும்நசீஹத் துறைதனில்நாட்டி
நட்பானபொற்பாதமென்னயனத்திற்பூட்டி

பொன்மலர்க்கமலத் தருமதுரையுறவு-புரியவே யிதயங்குளிரவே
இம்மைமறுமையிலு முண்மைகொண்டவனாந்
தேகபோகமாய்வருவோரே. (திருப்பாத)

(௨) அறிவென்னுஞ்சட்டைபூண் டைங்கதி மாவிற் சென்று
அல்லும்பகலுமற்ற மைதானில் நின்று
வெறிகொடுக்கும்புலாதி வினைகளை வென்று
மேல்றுஷாங்கடந்து மெய்கலந் தொன்று

பெறநலன்கள்பெற வரிசைகண்ட தீக-பிரபலன்களிரு பதியெல்லாம்
நிறையஅன்புகொடு வரவெழுந்தருளி-நினைவிலெனை யடிமைபுரியவே

(௩) மோனவழிநடப்போர்க்கென்று மிகுராஜா
மூவுலகுட்சிறக்க இலங்கும் சுராஜா
ஞானத்தலைவருள்ளம் ஒளிரும் சிராஜா
நம்பினபேர்முடிக்குங் கனகப்பொற் றாஜா

நீணிசைந்த ஜெயிலானி செய்யிதுசாதாத்து-செல்வமெனவந்தபீர்
ஆனபீர் மசூதுசாகிபை யகங்கண்ணால்நிதம் வணங்கவே. (திருப்)

பத - முற்றிற்று.

## பதம்-இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

### பல்லவி.

அடங்காத மையல்தந்த ராஜகளியே - என்மீது
ஆவலைத் தீர்க்கவந்து மேவாய்மின்னே

### அநுபல்லவி.

முடங்காத நாட்டமான மூன்றுதத்தொருபொருளே
மோகமேபெருகுதாகமேயுருகு தேகபோகசையோகமதாக. அ

### சரணங்கள்.

(௧) அல்லும்பகலுமொன்றாய்க் காதல்பெரி தாச்சு
அடியேன்படுந்துயர மவரவர்க் கேச்சு
சொல்லும் வசனத்தாலே தொலைவழி போச்சு
தொலையாத திக்குறிலே நிலையாச்சென் மூச்சு
வெல்லும் புலாதிகளு - மெள்ளவே தான்கடந்து
மேலாயில்நிறந் தாலயந்தொழுது
நாலுபோதுமய லாய்வருந்தவனே. (அடங்காத)

(௨) குந்தகன்சன் மருபியான அக் காலம்
குன்றிரண் டெழுத்திறற் கூட்டமே ஆலம்
அந்தர்ந்த வகுப்பால் அவன்றலை விசாலம்
அழகான மருளாக்கில் ஆகமித் தோலம்
வந்து நிசம்பெறவேபி - சைந்தமுசம்மதர்முன்
மதியம்போலவெழு மதியருபமெனத்
தழியன் அபுநிலாய்த் - துதியெனப் பெறவே. (அடங்காத)

(௩) திருவணங்கு முகியித்தின் அவுலர்தா
சிறக்குங்குல் பறக்காதகர் மகவூதா
பரவெளி யேருடந்து பரிவா மருழுதாப்
பதியிலிருந்து பாதவிக்கு தெலயாதா
இருவினை யற்றதா ஒருவினையாகவே
எண்ணி யெண்ணிமனம் புண்ணை தாளுமே
கண்ணின் மணியேயான் விண்ணப்பஞ்செய்கிறேன். (அடங்)

பத - முற்றிற்று.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இஃது

# துஆயிரப்பு.

காழிலாகிய ஷெய்குதுமான் லெப்பை சாகிபவர்கள் பாடிய
துஆயிரப்பு இந்த துஆயிரப்பை யாவராயினும் வெள்ளி
திங்களி லொழுவுட னிருந்து படித்து வருகிறவர்
களுக்கு அவரவர்களுடைய ஹாஜத்துகள்
கூடேறுமென்றறிக.

## ஷாகுல்ஹமீதுப் புலவரவர்கள்பாடிய

### கலித்துறை.

இறையோன் திருத்தூத ராகவிப் பூதலத் தேய்கியின்
மறையோது மார்க்க நெறிபிசகா துயர் மாட்சியுறுந்
துறையான தேசங் கடைய நல்லூர்வந்த தாட்டிகராந்
துறைஞான ஷெய்குது மானெனிசொல் துஆயிரப்பே. (௧)

இரந்திரந் தாதி யிடத்தினிற் கேட்டிடு மெண்ணமதின்
வரந்தருநாயன் திருவயிர் மெய்ஞ்ஞான வாருதியைப்
பரந்தருஞ் ஷெய்குது மான்லெப்பையாமொழி பாடுந்துஆ
விரந்தனை யாரு மவந்தோத வெற்றிவிளங்கிடுமே. (௨)

### பஃறொடை வெண்பா.

படைப்பெவைக்கு மன்னம் பகுத்தளிக்க வேண்டி
வடித்த புகழமைத்த வல்லானே - பிடித்தான
கண்ணன்றிக் காண்பவனே காதன்றிக் கேட்பவனே
என்னையன்றி நின்ற விறையோனே - முன்னன்றி
லாயிலாக இல்லல்லா வேறில்லை நாயனென்று
ஆய்திருநாம மளித்தானே - நேயமுடன்
தனதருத் தத்தாமிலா தன்பார்வை - பார்க்க
உனது திருவிளாவிலோர் நாறு - கனதியுட

ஹுன்றன் திருப்பே ருரைக்குரு கம்மதென்றும்
விந்தையுடன் பேரியம்பு மேலவனே - அந்தரத்தில்

வானேருந் தான்றுதிப்பர் மாதவருந்தான்றுதிப்பார்
தீனேர்க் குதவிசெய்யுஞ் சீமானே - மானிலத்தில்

எல்லாம் படைத்து மிசுலாம் நெறிவளர்த்தும்
வல்லோன் புகழை வளரவித்து - கல்லான

காபிர்களை வெட்டிக் கலிமாப் பயிர்விளைத்து
தாபரமாய்க்காத்த தவநபியே - சோபனமாய்

ஏழிரவு மோரிரவா யேகனிடத் தேகஅங்கன்
ஆளும் அறுஷேறும் ஆலநபி பாழான

கன்னுசு தன்னைக் கடத்தவழிகாட்டி
நன்னேர் முறையை நடத்துநபி - பன்னளும் (ம)

பாதமலர் தோயாத பாத்திபரென்று சொல்லி
வேதமுறை நடத்தும் வேதநபி - நீதமுடன்

அலிபு லாமீம்கேதால் அவ்வலமுதாய்
ஒலிமுகம்ம தாகவெங்கு முள்ளநபி - வலியான

தூதாங்க ரானச் சுவன விளக்காக
வேதபர னைவந்த வேதநபி - யாதார

மெல்லா அமரருக்கும் ஏத்தமுள்ள முர்சலீன்
வல்லார்க்கும்வல்ல வரிசைநபி - வல்லாகு

வெயரீமத்து நாளையிலே கேள்விப் படுவார்மேல்
தயாமத்தால் மண்டாடுந் தக்க - கியாமத்தால்

எங்கள் முகம்மதிற சூல்மகீரிக்குரிசில்
பொங்கு மலர்ப்பாதம் போற்றினேன் - எங்கும்

அருள்சே யூபக்க ரனைவுமறு
பொருளுதுமா னேடலியாம் போதர் - வரிசையுள

ஹஉசனே டுசனையு மான்முஹம்பித்தீனை
நிசமாகப் போற்றிமிக நிற்பேன்-வசமாக

ஆதமுதலுள்ள வலியானோர் தங்களுடன்
பாதமலர் போற்றியான் பாடுகிறேன் - வேதத்தின்

நாலிமாமாரையும் நாற்பத்திராயிரவர்
சீலமலர்ப் பாதந் தினம்போற்றி - ஆலமதில் (உய)

ஆய்யூகன் தன்னை அர்சேக்கு மென்பிரே
செய்பிது மன்வூது தனைப்போற்றி - பையல்நான்

கிருபை தாஆனை கிவமயக்கங்கொண்டு
அஇலைஷ படைத்திடு மல்லாவே - கிருபைசெய்

என்றுமுள்ள அல்லாவே ஏக பெரியோனே
ஒன்றி லடங்கா வுடையோனே - வென்றியுடன்

ஆதமலை கிஸ்லாம் ஹவ்வாசொற் கேட்டதினால்
நீதி சொர்க்கம்விட்டு நெடுநாளாய்ப் - பூதலத்திற்

கூட்டு தனிசெய்த கோமானே சீமானே
நாட்டமதைத் தந்தருளும் நாயகனே - தேட்டமுடன்

ரூயில்லா வண்ணந் தவசிதைக் கூசாவின்
வாயால் படைத்தபெரும் வல்லவனே - சாயாமல்

பொங்கும் பெருநீதி புகழ்நூறு நன்னபிக்குத்
தங்குமலர்க் கல்ங்களைத் தான்காத்தாய் - திங்களொடு

மூசா நபிதமக்கு முத்திதவு ருத்தீந்து
கூசா வருள்கொடுத்த கோமானே - வாசாலம்

தாவூது நந்நபிக்குத் தக்கஸ பூர்வேதம்
பூவுலகி லேயளித்த புண்ணியனே - மேவு

மறியமகன் ஈசா மன்னவருக் கிஞ்சீல்
சிறியபுவி யுள்ளளித்த சித்தை - நெறியமர்ந்த

மக்கத் திறசூல் முகம்மதெங்கள் மாதவருக்கு
மிக்கபுர்க் கானருளும் வேந்தனே - ஒக்கும்

இபுறாஹீம் நந்நபிக்கன் கேய்நெருப்பை நீராய்ப்
புவியீதிற் கொடுத்துவந்த பூபா - ஹபீபாம்

இசுமாயீல் நந்நபிக் கின்னல்செயும் வாளை
வசமாகக் காத்தருளும் வல்லாய் - நிசமாக

லக்கரியா நந்நபியைச் சார்மரத்தி னுள்வைத்து
முக்கியமாய்க் காத்த முதலோனே - பக்குவஞ்சேர்

ஏகுயா நந்நபியை யின்பமாய்ச் சொர்கத்துள்
வாருபெற வைத்தாளும் வல்லவனே - மாகம்புகழ்

ஹூது நபிசொல்லை யுண்மைகொள்ளா மாந்தர்தம்மை
மாற்றி அடிக்கவைத்த வல்லவனே - சீர்த்தி

சுலையுமான் நந்நபியின் றாய்தவிசைப் போக்கி
நிலைபெறக் கட்டிவைத்த நேசா - கலைகள்சேர்

அய்யூபு நந்நபிக் காம்பிணியைத் தீர்த்துமிகச்
செய்ய வரங்கொடுத்த சீமானே - வையம்புகழ்

யூசுபு நந்நபியை யோகை யுடன்காத்து
வாச மருள்கொடுத்த வல்லவனே - தோசமற

இல்யாசு நந்நபிக்கந் தெல்லா விலங்கினமுந்
சொற்கேட்க வைத்தவெங்கள் சோதியே - நல்ல

இதுரீசு றசூ லிறக்காமற் சொர்க்கப்
பதியில்வைத் தாளுகின்ற பண்பா - கதிமோட்சந்

காட்டிவரு மெங்கள் ஹபீபிறசூல் நந்நபிக்கு
வாட்டமி லாக்கலிமா வாறளித்தாய் - தாட்டிகனே

இந்த வரிசையெல்லாம் யார்க்குங் கொடுக்காமல்
எந்தநபிக் கென்றே யியம்பிறு - மந்தரத்தில்

வானோருந் தான்றுதிப்பார் மாதவருந் தான்றுதிப்பார்
நீனோர்க் குதவிசெயுஞ் சீமானே - மானிலத்தில்

எளை மிசுக்கின் பிறப்பைக்கரூலாத் தென்னை
ஆளப் படைத்தவந்த ஆண்டவனே - மூளை

கொதித்துருகும் வேளை குதாயுனையே யன்றி
கதித்தென்னையும் காப்பவரைக் காணேன் - துதித்தறியேன்

பொய்யன் கசடனறு புல்லன் மிகக்கொடியேன்
ஐயோ பொல்லாத அரும்பாவி - செய்யும்

பணிவிடைகள் தானறியாப் பாவியிலும் பாவி
துணிவுடனே கெட்ட தோஷி - அனியாயம்

நல்லோ ரிருக்கு மிடமன்றி பெக்கரும்
புல்ல ரிடத்துறையும் பொல்லவனே - எல்லாநாள்

குண்டணிகள் பொய்களவு கூறுக்கொடு முடிகள்
தெண்டமுண்டு செய்யுஞ் செயல்கேடன் - வண்டணிசேர்

கும்பமுலைமாதர் கொடியவலைக் குள்ளாகி
வம்புகளவு வசமாகி - சம்ப்ரமாய்

பூச்சுகளும் பேச்சுகளும் பொல்லாத வம்பிணிக்கு
கூச்சமகன் றேற்குங் கொடும்பாவி - பாச்சாய்

மலக்கல் மவுத்தென்று மவர்வந்து பிடிக்கக்
கலக்க முடனிறந்த காலத்தில் - வலக்காறர்

என்னைப் பிடித்து மெரியிலிடவே பிணத்தாற்
பின்னையெனக் காருண்டோ பெரியோனே - மன்னுங்

கொடியோன் பிழைபொறுப்பாய்க் கோமானே சீமான்
அடியேன் பிழைபொறுப்பா யல்லா - படிமீதில்

நல்லோ ரிடந்தேடு நட்பை யறியாத
புல்லன் பிழைபொறுப்பாய் புண்ணியனே - எல்லாநாள்

தின்மைதனிற் சாடுஞ் சிறியேன் பிழைபொறுத்து
நன்மைதனி லாக்குவாய் நாயனே - என்மீதில்

வாக்கினாற் கண்ணால் மனதினாற் செய்பாவம்
நீக்குவா யென்றுமுள்ள நேசனே - ஆக்கையதில்

விட்டுயிர் போம்போது மிடறில்வருங் கசப்பை
வெட்டறவாய்த் தூராக்கும் வல்லவனே - தட்டாய்

நினைவு கலங்காமல் நின்று கலிமாவை
கனதிபெற ஓதவருள் ஹக்கனே - சினமாய்

வரிசை யிசுறயீல் வாட்டத்தி லின்றிப்
பிரிசமுட னென்னுயிரைப் பேணி - துரிதமுடன்

வெண்ணெ தனிற்முடியை விட்டெடுத்த வாறுபோல்
வண்ணமொடு மென்னுயிரை வாங்கவருள் - புண்ணியனே

மையகத்தி லென்னைத்தான் மையமெனும்போக்கி
செய்ய ஷறகொழுங்கு செய்ததின்பின் - மையலை

மிக்கபணிட்டு விளக்குறமாத்திட்டி
தாக்கமுட னேகொழுது குழ்ந்தபின் - மக்கள்

பிடிமண்ணும் போட்டு பெரிய கபுறீட்டி
அடிமையெல்லா மெட்டடிபோ யங்கே - தடியின்

துடியாக முங்கர்நக்கீற் குழுவரப்போது
அடியேன் றனக்குதவுவா யல்லா-படிமீதில்

அஞ்சுந் தொழுதறியே னாரப் பாவமதா
மிஞ்சவிருந்த வினைகேடன்-தஞ்சமெனுஞ்

ஸக்காத் தளித்தறியேன் றன்மமில்லாச் சண்டாளன்
பக்கத் துறைந்திருக்கு மாபாவி - எக்காலம்

நோன்புபிடித்தறியேன் னேன்னென்றார் தங்கள்முகந்
தான்பாத் துரையாத சாஸ்திரியேன் - தீனிலுள்ளோர்

மிக்கஹஜ்ஜு செய்யும்வகை மீதுவிரும்பாப் பாவி
தக்கதவமில்லா சருவசண்டி - துக்கமுடன்

மென்னாளும் பொல்லா வெளியேனேன் - செய்தபிழை
சொன்னாலுஞ் சொல்லத் தொலையாது - மன்னவனீ

தெல்லாம் பொறுக்கவெனக் கென்னமோசலி புண்டோ
அல்லா குறைப்புள்ள றஹ்மானே - பொல்லாத

கன்னாக மென்னை கலக்காமனீ காத்து
மன்றவுன் தீதார் கொடுக்கி - மன்னவனுந்

தூய்யவனைத் தானறியாத் தோஷிதனக்கிரங்கி
உய்யப்படுத்து முதவிசெய்தை - ஐயா

உயிரால் வதையா துடையோய்நீ காத்து
ஜெயமா யருளாய்சீமானே - உயர்வாம்

வறுமை தனிலாக்காயல் வல்லவனே காத்து
பெருமைதனில் வையாதே பெரியோயசா விறியேனன்

பாலம் கடக்கப் பகருமற் காத்தருள்வாய்
பாலைப் படைத்தானும் அல்லாவே - வேலெனவும்

சூரியனும் வந்து சுடும்போ தருஷை னிழல்
வீரியமாய்த் தந்தருள்வாய் வேந்தனே - காரியமாய்

செய்த பிழையெல்லாஞ் சிதறுமெ னத்தனைய
மெய்முடனே ஞீதிமே னுனிடத்தில் - பொய்யாகப்

பட்டோலை யங்கவர்கை பார்க்கக்கொடுக்கையிலே
திட்டமுடன் வலக்கையருள் சீமானே - பட்டிக்கா

நபிமார்களோ ரோரும் நாயகன்றனைப் போற்ற
ஒருபெருபாலத்திற் கரையாக்காய் - புவியீதிற்
றுய்த்தகைமை யெங்கிளையார் தான்செய்த குற்றமெல்லாம்
நாயனே நீபொறுப்பாய் றஹ்மானே - தூயவனே
என்பிழையு நீபொறுத்தே யெற்குதவி செய்தவர்கள்
தன்பிழையுந் தான்பொறுப்பாய் தானவனே - நாசமெனும்
நாட்டத்தை நீக்கிமிக நான்செய்த பிழைநீக்கி
கூட்டுதவி செய்குவாய் கோமானே - தாட்டிகனார்
ஆலநபி தம்மை யடியேனுங் காண
சீலமுடன் றுணைதவாய் சீமானே - கோலத்
திருவிருந்திற் கூட்டுவாய் செய்பிழையை நீக்காய்
பெருந்தவத்தா லாக்காய் பெரியோய் - அருந்தவஞ்சேர்
குத்துபு முஹ்யித்தீன் கொடியின்கீ ழடியேற்குத்
தத்திரமா யுன்சமூகந் தந்தருள்வாய் - சித்தி முத்தி
காட்டியென துகலக்கமெல்லாந் தீர்த்தருள்வாய்
வாட்டமற்ற சோதியே வல்லவனே - நாட்டு
முகம்மதுற்ற ரூஹை விற்கணவின் முன்காண
அகமியத்தா லெற்குதவா யாமீன்.

பஃறொடை வெண்பா - முற்றிற்று.

---

பதம்-இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

கண்டா லொழிய மனக்கவலை தீராது
கருத்துக் கேற்குமோ தெரியாது - உந்தன்
கருத்துக் கேற்குமோ தெரியாது

அநுபல்லவி.

(க) பண்டே பழகியங் கொண்டபயல் வருத்தம்
யாருங் கேட்டவாங் - தாருமின்றுமயல்
தீரும் நம்பினேனென் பிரேமசலூதே (கண்ட)

சரணங்கள்.

(உ) அஞ்சு வகைபொதிந்த தழகான காயம்
அடுத்த பேருக்குத்தலைமை கொடுக்குஞ் சகாயங்
கிஞ்சுகம் போல்வசனங் கேட்போர்க்கு நேயங்
கிரை யகற்றி நன்மை தருஞ் சம்ப்ர தாயம்
நெஞ்சி னில்லாய்நின்று மிஞ்சவிரகங் கொண்டு

மினைக்குப்போ துடலம் பனிக்குதே தினமுந்
தொனிக்கு தாசையனு மனிக்குதென் பீரே (கண்டா)

(௩) வருவீர் வருவி ரென்று வழிதனைப் பார்த்து
வருடிச்சி ரம்பணிந்து மணிக்கரங் கோத்து
இரவுப்ப கலுமாக விருக்கிறேன் காத்து
ஏங்கத் தொழிலெடுத் தீதுநல்ல கூத்து
திருநட மாடுகிறீ ரொருவர்க்குந் தெரியாமற்

றேகமே யெடுத்து - மோக மேகொடுத்த
மாய்கை தனிலேதனு வாகம்ப்ர மிக்க (கண்டா)

(௪) நம்பின பேர்க ளுள்ளம் நாடோறுந் தேற
நடத்தை பார்வை தந்து நல்லுரை கூற
செம்பதத் திற்சிர வைத்து ளிளைப்பாற
சிந்தை பெருகுவதே யேழையீடேற
தம்பமேநீ ரல்லாம லம்புவி லாரு முண்டோ

தங்கமே விசைய - சிங்கமே யுயர்ந்த
தங்க மேருவெனும் - எங்கள் மசவூதீதே. (கண்டா)

பத-முற்றிற்று.

---

பதம்-இராகம்-தன்யாசு-ஆதிதாளம்.

பல்லவி.

பேசிக்கொண் டிருபேரு மிருக்க
ப்ரமிக்குது மானே,

அநுபல்லவி.

ஆசாரத் துடனேநல மேறும்பரி பூரணரே
ஆரண மேதிருக் காரண மானயென் ப்ராணனேடு (பேசிக்)

சரணங்கள்.

(க) அந்தமறை யொழுகிவரும் பேர்க்கும்
அறையிலி ருந்தெட்டித் தான்பார்க்கும்
சிந்தனைசெய் வதையுள் ளாக்குந்
தித்திக்கும் புதுமதுரித வாக்குந்
தேடரி தாகிய நாடுணே யாமலர்
வாடைகு பிரெனச் சாடுது மானே (பேசிக்

(உ) ஓரெழுத்தான் மூவுலகம் விரிய
உதைய மதியமத்தவி இடமுந் தெரிய
நேரிடு மடியவ ருள்ளம் புரிய
நிருமத்தும் றகுமத்து மிக்கச்சொரிய
நீதயவாகவென் மீதிலனுக் கிரகம்
போதர வாய்த்திரு மாதர சேநான் (பேசிக்)

(௩) போதர வாகிய துணையேவும்
பூசக்கிர வாழ்ந்திலுளயாவும்
மாதவத் தாற்றுநி செயுமியாவும்
வருடி யிருப்பவன் றணேமேவு
மையல் தவிர்த்தருள் செய்வதே பரஞ்
செய்து மசுவூது மையலல் லோநான் (பேசிக்)

பத - முற்றிற்று.

---

பதம்-இராகம்-அசாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

வருவீர் வருவீ ரென்றுதா னிப்போதே
வழிபார்த் திருந்தே னின்றுதான்

அநுபல்லவி.

தருமக்குண சீலரே மருமபுய சாலரே
சையிது முகியித் தீனேயென் பீரே (வருவீர்)

சரணங்கள்.

(௧) பலநாளுங் கொண்டகாத லாலேவாய் மெழுகது
போல்பரதாப மெடுக்குதே
புலனதிகள் வருமித்துக் கலைவா யென்றும்
போராடிம் பூசல்மிகத் தொடுக்குதே
குலைகுலைந்தென துள்ள மிலைபோல வேபதறிக்
கொடுகி உடல்கடுக்குதே
நல்லாகிய பொற் பாதத்தைச் சூடவருடி
நட்பு மிகத் தொடுக்குதே (வருவீர்)

(௨) உடலு முயிருமொன்றாய் நெடிய தயரங்கொண்
டும்பதத்தை வாழ்த்துதே
வடிவி னொளிப்பிரகாசச் சுடரொளி யிருகண்ணில்
வந்துவந்துதா னேத்துதே
அடியேனை வல்லீரவே ஆகங்குளிர வந்து
ஆதரிக்க வேமனம் போத்துதே
கொடிய னாகிலுஞ் சொந்த அடிமையைக்கைக் கொள்ள
குணமு மனமும் போந்துதே (வருவீர்)

(௩) ஈரேழு லோகத்துக்கு மோரர செலுத்திய
யாமுஹியித்தின் சாகிபே
கார்குடை யிறசூல் பேரரென உதித்த
கவுதுமுஹி யித்தீன் சாகிபே
சீரணி புங்கையி லானூரபு ஸாலிகு
ஜெய முஹியித்தீன் சாகிபே
பாருல கிலெனக் காரிருந் துமென்முகம்
பாரார்முஹி யித்தீன் சாகிபே. (வருவீர்)

பத - முற்றிற்று.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

# இஃது

# வண்ணம்.

வண்ணம்-இராகம்-நாதநாமக்கிரிகை-ஆதிதாளம்.

தனதன தந்தன தானதந்தன - தனதனதந்தன தானதந்தன
தானதத்ததானன-தானதத்ததானன - தானதத்ததானன-
தானதானன, தனதான தந்ததன தானன

அருவுருவென் றுரை யாதிருந்தவ-னொளிவினி னின்றொளிவா
ய்வருந்திற, லாணிமுத் தாருபம தாகிவஸ் துவாய்வடி-வாயுதித்துமேக
ய மாகிபோரொளி, மருவுதல்கொண்டுமெ கின்மரந்தனில்- வளன்ம
பெறுங்கலி மாமொழிந்தனர், வியுதித்தவேர்வைய - தேமிகுத்த
போதிற - காலுதித்த நீர் துளியானதாலுய, ஈறுசுவிணம்புவி மே
ரொடுங்கடல்-விடநாகப்பல ஜீவஜெந்துவி, ராகமிச்ச ஆதம்-ஸபிவ
ருத்தநாபி-மார்தமக்கு மேலர - சானநாயகர்.

மனுநீதி கொண்டு மறை யேவினோர். க

அறிவிலெழுந்தே கனுமென்றறி-வுடன்மொழியுஞ்சிபு நீள்முய
ங்கிமுன், ஹலிறக்கலாலுமிழ் - நீர்கொடுக்கமீளவு-மாவிபெற்றும்வா
னிட - மாகமோதிட, மறைபதையும்பட ருய்வினைந்தவர்-விழிகெட
வும்பெரிதாயிருண்டிட, மாநிலத்திலேமதி-தானழைத்துமேபிற கீர்
பிளப்பதாயது-கூடவும்ஹபி, பரசூதவுந்தசை மோகவஞ்சிபி- னுயரு
ருவம்பெற வேயெழுந்துச, லாமுரைக்கவேயிச லாம்கிலக்கவேபல
பேரிலக்கமாய்வர- மேவுநாயகர்.

மறைமீழ வின்கவிதை மேவினோர். உ

வாமுறவென் றுட மாரமூர்கொனி-தாவிநதும்பல டால்நெருங்
கிட,வாரணப்பதாதிக-பேர்பரிக்குளாமறு-சேனைவட்டவாருதி-போ
லவேவரு, நிருபருடைந்திட வேபொருந்துலு-தலின்மிசைகொண்ட
வி வாளீரிந்திட,நீணிறப்பசாசுக-ளுய்நபிக்கெலாமுனை-வேகொடுத்து
வீறம - ராடும்வீரியர், வலிமையிழந்திரு தாள்பணிந்தரு - கிதிதிறை
கொண்டிசு லாமெனுங்கலி, மாவுரைக்கபாமறை - தீனடத்திமாகில
மோராக்கநாயக-மானவானர்,

சினமே தவிர்ந்தகுண சாதுவாம். ங

வனசமிகுந்த தடாகமும்பல - வளமூமிறைந்துப லாமரங்களும்,
வாழையிக்குமாமர-மேபெருத்த சோலைகள்-சூழுமக்கமாநக-ராளுமா
நிதி, யகமுயிரின்பொருள் போலிலங்கிய, துணைவரொடும் புடைசூ
ழநம்புத, லானசித்திகாமும-ரூடமிக்கதீனுது - மானவிக்குநேயம-
தானகாரணர், மருவளர் குங்கும மாலையைந்தரு புயமிசைதங்கியஹா
ஷிம்வங்கிஷ, வாசரப்துல்லாமகிழ்-வானபுத்ர[illegible]னஹ- மீபுமுஸ்தபா
நபி-யாறருலருள்.

இயல்பே தருஞ்சுவன மீதிலே. ௪

விருதுபகர்ந்திடு வாய்மையுந்திரு-வதனமுமிங்கித-காவியங்க
ணை, வீசிவெட்டிடுமெலம ஞருமிற்பரோபகாபாசமுற்றமோகசி - னே
கதாகமு-மிடைதுவளுந்தன பாரபங்கய-மிருகைவசம்பெற வோதக்
கணை, யேநடத்துவார்கணை - யேதிருத்துவார்சம, ராரினைக்கமேலுற
வாடியேகொள, வெகுதயவும்புரி வார்மகிழ்ந்திதழ் - பருகிடவுந்தரு
வாரணைந்தித, மேகொடுத்திலாகிரி-யாலடுத்துமோகன மாகமுத்து
வாருப சாரமாகுவர்.

அதிரூப வஞ்சியிழை யாடையார். ௫

விரைவளரும்புர மீதிலங்கிய மரகதகம்பமும் வீதியந்தமு, மே
ன்முகப்புமாடவி - தானவுப்பரிகையு - மாடகக்கபாடவி - சாலகூட
மு, நவமணிகொண்டொளி வீசுகும்பமும் - வளிமிகவந்துறு சாளா
ங்களு, நாணம்விட்டுவீசிய-தூளிமெத்தைமீதரு, கேசிறக்கமேல்வெ
ளி-யாடைபூட்டியும், விதுவினிளஞ்சுட ராய்கிரம்பிய, மணவரைகொ
ண்டர சாருமங்கையர், மேனிபொற்ப்ரகாசம- ஜெகரப்ரகாரவ-ஜீக
ரத்திகைல்மத மீறுமோகினி.

யவர்பால் மிகுப்பெரிய வாசையால். ௬

கரிகரவிந்தையி லேயருப்பித - மூலரவருந்திடு வாரயர்த்திரு,
காதகைக்குமாபர - ஜோதிவிற்ப்ரகாசமி - ரேழுகட்டுமுமொளி-வாகி
வார்குழல், சரியவிழுந்துகொள் வார்மிர்ந்திரு-முலைகள் குலுங்கிட
மேகனிந்திட, சாரியிக்குமேவல-சாரியிக்குமேனைகயி - லாஞ்சுயிட்டு
மேலவ தானமாவர்கள், கவனநடப்புரி வார்சிலட்பொலி கவிலென
வும்பட வேபணிந்திரு. கால்மிதிக்கவேபணி யாடைவர்க்க பேரொ
ளி தாமெறிக்கவேணுதல் - வேர்வையூடெழல்.

தனமீதுறுங்கொடிய வாழியோ. ௭

கமலமுகந்தனை நாணியொருங்கிட - மலரணைசொன்ன டணைவார் விரும்பிய, காதலைப்பொருதட -னைதகைக்குதேயர சேயெனக்கை யால்மலர் - வாரிவீசுவர், புழுகிதவின்பம தாய்நடங்குவர் - மடியிலிருந்திதழேயருத்துவர், பூமலர்ப்பனீர்சொரி - வாருருக்கமாமுறை யெகடத்துவாரனு - போகமீறிடு, கலவியிலன்புடை யார்நலந்தரு கயிச்சறகின்படி யேதவஞ்செயில், காமுகர்ப்பிராணம - தாயிருப்பர் நாடொறும் - போகசத்தியாயுற-வாடிவாழுவர், அ

துயவான தென்றமற வாதுகாண்,

வண்ணம் - முற்றிற்று.

பதம் இராகம்-கமாசு-ஆதிதாளம்.

பல்லவி.

பிராணப்பிரமசுவூதுசாகிபைபின்செல்லாய் மனமே

அநுபல்லவி.

ஆராமுதுக் கடங்காத இலாகி
அனுக்கிரகஞ் செய்ய-மனக்கிருபை யுய்ய. (பிரான)

சரணங்கள்.

(௧) அருளும் நவீஹாத்தைத் திறக்கண்ணிற் றேற்றும்
ஹைவான் பிறவிதன்னைக் கசடற மாற்றும்
இருளை யகற்றிலா மக்கானி லீடேற்றும்
இதய மகிழவந்தே யென்னையுங் காப்பாற்றும் (பிரான)

(௨) நாலுவா சலுக்கும் நடுவேவழி தானம்
ராஜரீகர்செங்கோல் நடத்தும்ப்ர தானம்
மூலப்பொருளைக்கண்டு மோகிக்கும் ஞானம்
முத்திபெறக்கருத்தில் வைக்குமே மானம் (பிரான)

(௩) ஐம்புலா திக்குற்ற அவயவ மேழும்
ஆணவமா யைக்காமக் குரோதமூப் பாழும்
கமபத்திற் கட்டிலா மக்கானிலே வாழும்
ஹக்கைத் தெரிசித்திடக் கருத்தில்வைத் தாளும் (பிரான)

(௪) இருபதிக் குங்குது பானவர் கோத்திரம்
சமானிஸ் லாம்வளர்ந் தேறிய க்ஷேத்திரம்
நருபதி யொலிமார்கள் துதிசெய்யுந் தோத்திரம்
சையிது மசவூது சாகிபே நேத்திரம் (பிரான)

பத - முற்றிற்று.

---

பதம் இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

தண்டகா வனந்தனிற் - றெண்டனை விடுவது
தருணங்கண் டிதுதானே.

அநுபல்லவி.

கண்டகண் டதையெல்லாங் காட்சியென் றெண்ணுமற்
தொண்டன் மனதிலுற்ற துயரம் அகற்றும் பிரே (தண்ட)

சரணங்கள்.

(க) இன்றைக்கும் அன்றைக்கும் என்றைக்கும் உமைவிட்டு
இலகேனு மொருபோதும் - இனி
நின்றநிலை பிரிந்து நினைக்கவுந் துதிக்கவும்
நினைவினில் ஆகாது - இனி
வண்டத் தனங்கள்செய்து வழக்கெதி ராடவும்
வன்மங்கள் போகாது - இனி
சென்றெதிர் நின்றுங்கள் சேவடி பணிந்தப்பாற்
செல்லவுங் கூடாது - இனி
விந்தைய தாயுங்கள் சிந்தைதனி லுற்றருள்
சுந்த மலர்ப்பதந் தந்தெனைக் காத்தருள். (தண்ட)

(உ) தாமரைத் தடாகத்திற் றள்ளாட்டப் படுவதுந்
தங்களுக் கேச்சல்லவோ - இனி
நேயமுற் றிருப்பதும் நெஞ்சினிற் றுதிப்பதும்
நிசமில்லாப் பேச்சல்லவோ - இனி
மாமறை யோர்சொல்லை மறந்தநா னிருப்பதும்
மானிடர்க் கேச்சல்லவோ - இனி
நேமமுடனே யெந்தன் நினைவினி லுதித்ததை
நிறுத்தக்கூ டாதல்லவோ - இனி

தேட்ட முடனேயருள் - நாட்ட மறிந்தென்னைக்
கூட்டுற வாகவே - நாட்டிசர் மகலுதே. (தண்ட)

(௫) சிந்தை மனதிரங்கிச் சிறியனைக் கார்த்தாக்கால்
செகதலம் புகழாதோ - இனி
விந்தை புரிந்தமனம் வேதனைப் படுவதும்
வேந்தருக் கிரங்காதோ - இனி
சிந்தனை யாவேயின் றுமைந் தகிப்பதும்
திகைத்து தெரியாதோ - இனிச்
சந்தயங் கண்டுங்கள் சரணமே பணிவது
சாட்சிகண் டறியாதோ - இனி
நன்மன தெண்ணியே - வாயலி யில்வரும்
நாட்டம தாகிய - நாட்டிகர் மகலுதே. (தண்ட)

(௬) அல்லும் பகலுமடி யேனுன் றதிப்பதும்
ஆசங் குளிர்ந்தில்லையோ - இனிக்
கல்லு முருகுமிந்தக் காரணங் கண்டக்கால்
காதினிற் கேட்கில்லையோ - இனிச்
சொல்லுந் துதியறிந்து துணையெனக் காவதுஞ்
சோபனங் கேட்கில்லையோ - இனி
இல்லென் றெழுந்தொனி இருதய கமலத்தில்
இருப்பதும் பார்க்கில்லையோ - இனி
ஏகனுக் காகவே - பாவினை செய்தருள்
தாக முடனேயப்புல் - காதிர் முகியித்தினே. (தண்ட)

பத - முற்றிற்று.

---

ஷெய்குதுமான் லெப்பைசாகிபு அவர்கள்பாடிய

முனாஜாத்துகள்-பதங்கள்-வண்ணம்

முற்றிற்று.

இன்னம் அவர்கள் பாடிய தனேகமிருக்கிறது
அவைகளைப் பின்னால்போடப்படுகிற பதிப்
பிற் போடப்படுமென் றறிவீர்களாக.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

இஃது

மேலப்பாளையம், ஆசிபெனும் ஆமிதெனுங் காமிலாகிய தக்கடி

பவீர்லெப்பையென்று விளங்காநின்ற

முகியித்தீனசாகிபு சாகிறவர்கள்பாடிய

# மெய்ஞ்ஞானச்சதகம்.

## காப்பு - விருத்தம்.

சீர்வளர் மக்கமேவிச் செகமெலாம் புகழாய்நின்ற
கார்வளர் கவினிலேயோங்குங் காரண விரசூலுல்லா
பேர்வளர் சதகம்பாடப் பெருப்புவி ககனுமற்று
மேர்வளர் தீனுண்டாக்கு மிறையவன் காப்புத்தானே

மருப்பசும் பகருமேவதப் பார்த்திப ரிறசூலுல்லா
திருப்பதஞ் சென்னிசேர்த்திச் செப்பிவர் மதுறைக்கொண்டு
பொருத்தமார் சதகமாலை புந்தியிற் களித்துப்பாட
வொருப்பட்டு பொருளாய்நின்ற உடையவன் காப்புத்தானே.

பூமிரா டகியாய்லோகப் பூவையர்க் கரசாயுற்ற
ஆமினு ரகுட் போற்று மஹமூது நபியுல்லாதம்
பாமினு நவத்னைதப் போற்றிப் பைந்தொடைச் சதகம்பாட
ஏமிஞ் செங்குமுள்ள விறைவனே காப்புத்தானே.

அபுபக்க ருமறுகத்தா பருமறை யுதுமா ஞலி
தவமுற்ற விவர்கள்பாதந் தலையினிற் றரித்தெந்நாளு
நவமுற்ற முகம்மதெங்க ணபிபுகழ்ச் சதகம்பாடத்
திவமுற்ற திருஞானத்தின் சித்தவன் காப்புத்தானே.

அசனுசை னிவரைப்போற்றி யாகிறு சமானிற்பாவ
லசையறு மாதுபேர்கள் வரிசையின் மதுறைக்கொண்டு
திசைபுக ழிறசூலுல்லா திருப்புகழ்ச் சதகப்பாட
நசைமறை யுடையவேத நாயகன் காப்புத்தானே.

மார்க்கநன் னெறிவழாது வல்லவன் கருணைபோங்கிக்
காப்பணிந் தலகினுற்ற முஹம்மதின் னேழான
நாற்பத்தீ ராயிரம்பேர் நாமங்க டுதித்துப்போற்றி
நூற்படி சதகப்பாட னுவலிறை காப்புத்தானே. ௫

விட்டுப்போ னையத்திற்கா வினைவிடு மெழுப்பித்தாலி
கட்டிப்போ வென்றஅப் தல் காதிறைப் புகழ்ந்தேன் பாரி
விட்டுப்போ மப்புபட்ட விருதன்னை ராகக்கையாற்
றொட்டுப்போ வென்றதூதர் சதகம்பான் றுதிக்கவன்றே, ௭

அறபிக ளாகமுன்னு ளழுகினற் பதுபேர்வந்து
விறல்பெறு மங்கைநாட்டீ ரேலப்பா ளயத்தில்வாழு
முறவினன் றீனோர் கோத்ரந் தறுப்லெப்பை மானேபாலன்
மூன்றயிரு கண்ணுமற்றோன் முஹிபித்தீ னெனும்பேர் பெற்றோன்.

மேலினு முதமான்லெப்பை சாஹிபு விளம்புங் கேள்விக்
கேதுமன் சோஜலெப்பை முகம்மதுக் கிசைந்தசீடன்
நால்வழி யவர்சொற் கொண்டே நுவலருந் திறமையான
தாலமன் னபியைப்பாடிச் சதகமென் றுரைக்கலுற்றான். ௬

ஆடரவதற்குமுன்னே யாடுநான் குழைப்பாம்புற்றுக்
கூடுதல் போலவென்சொற் குணமிதைக் கவிஞர்கண்டா
லேடவிழ் மலர்த்தாமத்தா ரியல்நபி பறக்கத்தாலே
பாடுறும் பிழைகளீக்கிப் பரிவொடுங் கொள்வரென்றே. ௰

## நூன்முகம்.

அமலைப்பார்த்துச் சோதிக்குநா ளடிமைகந்த மடிமையெனச்
சமுலத்துடனே யெங்களின தாங்குஞ்சுமைதாங் கியாமோர்
விமலத்தினிற்பொற் சகியெழுந்து விரும்பிச்சேவை செயுமஹிபர்
கமலப்பதத்தார் முஹம்மதரைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௧௧

ஒருவொன் றறுத்துத் தகையினஞ்சை யொளித்தே நெய்விட்
டெழுப்பொரித்துத், திருமுன் கொணர்ந்து வைத்தவுடன் றின்னத்
தீண்டும் போதிலவ்வூன், தருநேராயச் சுவைக்கொல்லச் சமைத்தா
னென்றகாரணத்தின்; கருணைநபியை யெனதுகண்ணாற் காணுந்தி
ருநா ளெந்நாளோ. ௧௨

தவனம்பெருத்து ஹஜ்ஜாத்திற் றயங்குமசுஹா பிகளுக்கன்பாய்
நவபார்க்கரத்தி னுகிராலே நதியொன் றழைத்த மஹமூதரைச்
சுவனத்தலத்தி லிருக்குமிகு தங்கக்கலின வடல்வேகக்
கவனப்பரியார் முஹம்மதரைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௧௩

தின்னார்புயத்தா னபுறகிலுஞ் சேனையவருக் கரசாக
மன்னும்பொருத மல்ப்பாணி வரிசைக்கடவு ளானோரை
நண்ணார்துதிக்குங் குறைஷிக்குல காதரப்துல் லாவுக்கிரு
கண்ணார்முஹம்ம திரசூலைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௧௪

ஆதரபிக்கு மாதிமுத லானமுறுசலீன்களுக்குஞ்
சோதிநபிமா ரனைவருக்குந் தோன்றலாகப் பிறந்தோரைச்
சாதிஹாஷீம் குலக்கொழுந்தைத் தக்கோரன்பத் தல்லாவாழ்
ஹாதிமுஹம்ம திரசூலைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௧௫

தோமீதென்று வறிந்திணங்கச் சொல்லுஞ்செயலு நெறிநீதி
யாமீதென்று மறிந்தமனுற் றறியாதிருக்கு மன்னோனை
மூமீனவர்க ளோடுமவர் முறைமைக்கவுமென் றுதரிக்கும்
ஹாமீதஹம்ம திரசூலைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௧௬

பேசினகல வேடனுக்குப் பிணைக்குப் பிணையின் றுறுதினு
பேசினுமப் பிணைபிணங்க வியம்பவியம்பத் திதம்பேசி
பாசினடர்ந்த குபிரகற்றி மறைநேர்பெருக்கு முஹம்மதபுல்
காசிமுஸ்த பாநபியைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௧௭

சிவிகைத்துரையா மபுஜகிலுஞ் செழிப்பாய்விலைக்கு நெய்வாங்கிச்
சவிகைப்பொருளீ யாததினற் றுனுண்கலத்தி லரவமொன்றங்
அவிகைக்கடிக்கப் பொருளையவ னஞ்சியளிக்க வைத்தவர்கார்
கவிகைப்பெருமான் முஹம்மதனைக் காணுந்திருநா ளெந்நாளோ.

பண்டார்பிறை நயினாரைப் பண்பார்மயிலா யெக்கீன்மாதிற்
கொண்டார் வரிசை நயினாரைக் குயிலோர்குடையார் நயினாரை
யண்டார்துதிக்கு நயினாரை யமுதக்கதலிப் பழமுங்கலுக்
கண்டார்மொழியார் நயினாரைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௧௯

பரத்தைக்கடந்து தாளிலிட்ட பைம்பொற்கபுசோ டறுஷேதித்
தரத்தைத்தரும்ப ராசியமுஞ் சங்கைரகசி யமும்பேசி
வரத்தைப்பருக்கும் நபிறைரை மடங்கா நசாறு விடும்பிலற்ற
கரத்தைப்பொருத்து நபிறைரைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௨௰

நிம்பரணியிற் றுஹயமியான் சேராதகன்று நல்லநெறி
மேம்பரணியிற் றன்சேர்ந்து வினவுங்கேள்விக் கந்நாளி
லோம்பருரைக்கும் சவால்விளங்க வுதவிஷபாஹத் தருளும்பய
ஹாம்பரிறசூல் முஹம்மதரைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௨௧

கோவிச்சுடிகைச் சூழிகைமேற் குளக்காத்பாரப்பிற் சாலடிக்கு
ளோவிற்சிறந்த விழிச்சியர்கீ ரெடுக்குங்குடத்தின் மடைவாயின்.
றவிற்பதுமச் செம்பொகுட்டிற் றவிவன்றுத் தகுத்திடுமக்
காவிற்பிறந்தமு ஹம்மதரைக் காணுந்திருநா ளென்றுளோ. ௨௨

வேறு.

பகடார நண்பர்பரி பேரந்துவந்த பகைவோரை வென்றவா
ளாற், சுகடார வணக்குமதி வேந்தரெங்கள் திரையாளி தமக்குமா
துலராநேர், மகுடார வண்டர்துதி வாய்ந்தநண்பர் மகுமுதெழுந்
துமேவத், திகடாரை கண்டுகளி கூர்ந்திறைஞ்சுந் திருநாளு மெந்
நாளோ. ௨௩

தின்தீன மெம்மிலெளி தாகப்பரிருஞ் செயல்பாருமென்ற
ஹாமான், தின்தீன மெண்ணமகிழ் வாகக்கூறுந் திறமோதுமண்ட
லீகர், தின்தீன முண்ணவென வோதுந்தோன் றுஞ்சிதவேக வுண்
டநேரார், தின்தீன்மு ஹம்மதற்ற சூலைக்காணுந் திருநாளு மெந்த
நாளோ. ௨௪

பூமானு மம்மலிசை கூறக்கூறும் பெறைறயோத வண்டர்மே
வித், தோமான முன்னுவநெறி போகப்போதுஞ் சொலவேகி யண்
டமேகிப், பாமோன மன்னியமல் சாரப்பேசும் பலனே டிறைஞ்சி
மீண்டோர், சீமானம் முஹம்மதற்ற சூலைக்காணுந் திருநாளு மெந்த
நாளோ. ௨௫

பொங்கார நேயவடி வோரைக்காணும் புதுநாளு மெந்தநா
ளோ, புகழ்யார்கள் சூழவரு வோரைக்காணும் பொறைநாளு மெ

ந்தநாளோ, சங்கார நேயவொளி மேலைக்காணுங் கதிநாளு மெந்த
நாளோ,சமழ்காதம்வாசந்திகழ் மார்பைக்காணுங் சுதிநாளுமெந்தநா
ளோ,பங்காரை நேர்செய்நபி ஞுரைக்காணும் பரநாளுமெந்தநாளோ
பணிபோத வோதிவரு வோரைக்காணும் பலனாளுமெந்தநாளோ
சிங்கார வேதமஹ்மூதைக்காணுந் திருநாளு மெந்தநாளோ
தீன்தீன்மு கம்மதுற்ற ரூலைக்காணுஞ் ஜெயநாளுமெந்தநாளோ.

பாலோடு சீனிபழம் வாசத்தேனும் பரிவாகப் பருகுந்தீனோர்
காலோடு மானகலி மாவிற்பேசும் ஹூறுபோசை கொண்டநாமுத்
தாலோடு தூதரென வோதிச்சூழ்ந்த தவசீதர் சிங்கைதகூறச்
சேலோடு பேசுமகு மூதைக்காணுந் திருநாளுமெந்தநாளோ. ௨௮

கமுமால் மேனுமெழு காலைப்போதுங் கவுமேலை நம்பிறோரைக்
கெழுமால தாகமிடி யூாகத்தாவுங் கெடுநேரம் வந்துசேருங்
கொழுமாலம் மேரையகல் வாகக்கூறு குணபோத ரென்றுவாசச்
செழுமாலை யார்மின்மகு மூதைக்காணுந் திருநாளு மெந்தநாளோ.

திகந்தாழ வாரியுரு வேறிக்கோலுந் திசையேகி வண்டர்சேனைச்
சுகந்தாழ வேதமறைநேர்மைகாக்குந் துறவோதி வென்றுநேர்தீன்
பகர்ந்தாள மேவிமதி னைவைச்சேரும் பரிபாக மொன்றுமேபிச்
செகந்தா ளடாதமகு மூதைக்காணுந்திருநாளு மெந்தநாளோ. ௩௰

தாமுற்ற ரூபமில தாகச்சேருந் தசையான தந்தமேனிக்
காமுற்ற ரூபவடி வாகச்சேருங்கதிமேன்மை கொண்டமாலைப்
பூமுற்ற வாடைதனை நாடிச்சேரும் பொறிராக வண்டுபாடுந்
தேமுற்ற மாலைமகு மூதைக்காணுந் திருநாளு மெந்தநாளோ. ௩௧

பங்கேரு கத்தினனி லாவிக்காலின் பசும்வாளை யுந்திமோத
நங்கோ குலத்தின்மரை சாடத்தேனுஞ் ஞடைவாளைவிண்டுகிறுஞ்
சங்கோ விதமதி னைவைச்சூழுந் தரைவானு மெங்கு மாளச்
செங்கோல் செலுத்துமகு மூதைக்காணுந் திருநாளு மெந்தநாளோ

பார்சேரு மிக்கநடு வாசப்பேசும் பதியாகு மிக்குபானுங்
கூர்சேர விட்டுயிரு பாவிலேகுங் கொள்கையவை தங்கிவீசத்
தார்சேருஞ் சொர்க்கநறை வேய்கோலுந் தலம்வானர் வந்துசூழுஞ்
சீர்சேரு மக்கமகு மூதைக்காணுந் திருநாளு மெந்தநாளோ. ௩௩

வேறு.

பொருணயவுந் நயர் கூட ரெனவருளிப் பூணுங்கதிநபி யுல்லாவைப்
புகழ்ந்துச றவிதொழு ரவிவிணிலாகப் புகலும்சலவாத் தல்லாவைப்
பரவுபுபக்கருமர் திரியுலகறலைப் பருகென்றஹறபீ புல்லாவைப்
பதமினுமுதமான் சுவனமின்னுகைப் படுமென்றஹறபீ புல்லாவைத்
தரணியிவர்களி லிவர்கடருமக டணையின்புறமணமாலை
தயவுற்றிடவிரு பேர்க்கிருமகவைத் தாமெனன்றவரு ளிறகுலைக்
கருணைநந்நபிமுகம் மதுநபிஞரைக் காணுந்திருநா ளெந்நாளோ
காசிம்நபியிற குல்முஸ்தபாவைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௩௪

கொவெரிமுதுகண் டிடவீருவோரைக் கூடிடவருநா ளெந்நாளோ
குறைவுசீகள்மாபிற குனுக்கெனதுசொல்ஹறப்பாகிடுநா ளெந்நாளோ
படியுளியம்புக் கப்படுவோரைப் பரவவும்வருநா ளெந்நாளோ
பாழ்க்கிணறாறப் பரிசருளடிக்கவீற்பயலாகிடுநா ளெந்நாளோ
சடில்மொடுரைசெயு நபியெனயுங்கை தாங்கிடவருநா ளெந்நாளோ
சீஹுபுசாஹிபென் றேகட்டியபிணிச் சாற்றிடு நாளது மெந்நாளோ
கடிமுகையவிழுங் கமலமெல்லடியைக் காணுந்திருநா ளெந்நாளோ
கன்னன்மொழிப்பய ஹாம்பர் நந்நபியைக் காணுந்திருநா ளெந்நா
(ளோ

பூரணநாமங் காதிடுநேரம் புகல்கின்றனகா சலவாத்தைப்
புண்ணியர்வருநெறி தேடித்தேடிப் பூரிக்குதென் மனம்பாது
கூரணஷம்சு தாத்துக்கடிகடன் குறிமணம்வீசுதென் குமிழுக்கே
கோபானீமா னுக்குத்துணைசெயுங் கோமானுமேதாமானுற்
பாரணமானவிப் பாவிக்கன்பாய்ப் பரிசித்திடுவது மெந்நாளோ
பராக்குபராக்கென் றேகட்டியமும் புகர்ந்திடல்புலவர்க் கெந்நாளோ
காரணங்காணும்பூந்தீதயென் விழியார்காணுந்திருநாளெந்நாளோ
கதிஎண்பிருக்கிடு கதிபதிநபியைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௩௬

பாவத்தினைபெனை விட்டுப்போமோ பயஹாம்ப நுருகம்பாராட்டாத், பயஹாம்பர்க் கெனையடிமைஎன்றேயிப் படிமுழுதும் முறை செய்யாதோ, கோபத்தனமொடு நம்மையுமெத்தனை கொடியவர்பேசுமவ்வொசுபுக்கே, குணமனைத்திரதி இங்கேகேட்டாசைக் கொளவுங் கட னும்மத்தென்றே, மேலத்தனமிப் படியலவோவெனை மேவிப்புரப்பது மெந்நாளோ, வேந்தேபதுஞன் குலந்தரசேயெனவேண்டி.

ப்புரப்பதா ரெங்காளோ, கம்பத்தல்லா நிலைமைகத்திலைக் காணு
திருநா ளெந்நாளோ, காதமுடியெம்மணம் வீசும்வழியிடைக் காணுந்
திருநா ளெந்நாளோ. ௧

தவிசரசபுரத்தில் பல்லியுடைத்துச் சறுகுடாத்தியபொற்பாத
ங், காலத்தினிமேல சேடக்கிடையாச் சதுதளகமல மலர்ப்பாதம், ம
ஞ்சளவரசர்கள் மணிமுடிவைத்தப் பரவியசங்கிர மப்பாதம், பா
த்தினர்கா பல்லிபபெய்திப் பரிசிகள் பெறுமரு மைப்பாதம், கப
துபெறவடி மைக்கன்பாய்த்தானை யடிகரவருநா ளெந்நாளோ, தூ
ளியெயிற்றுப்பாந் தனும்வசனித்த நூலையடிகருநா ளெந்நாளோ
கடுசொடுமேறுசே ரியபொற்பாதங் காணுந்திருநா ளெந்நாளோ,
ண்டவர்துதிசெய் முண்டகச்சரணங் காணுந்திருநா ளெந்நாளோ

சாதிக்குறைவுக் குலவபுதால்லர் தர்மைதபுகச்சாறின்குலத், த
யாமெங்கட் குபிர்க்குபிராக் தாயாமாமி றைவருஞ், சோதிக்குற்
ள மாகவிருக்குந் தாணைவிழி மகபதியாறொரா, சதிலையம்பொறி
ஞ் சிறையவுசாற் சுரும்பார் மலர்த்தாரணிமார்பர், ஆதிக்கத்த இய்
யாத்தைத யனித்தைதப்பூகொருத் தைந்தொருந்தாக்கி, யவனியில்வா
ழம்ந் தோர்கொழுவணிமணி கம்பத்தல்லாவுக்கே, ஹாதித்தல
மைகத் திபுதமைத்தான் காணுந்திருநா ளெந்நாளோ, ஹாமிதுமுக
மது நபிபிறநூலைக் காணுந்திருநா ளெந்நாளோ. ௩௧

உள்ளாதாவுற வெளஷ்பாவுக் குற்றமுந்நா நீத்தங்கன், டோ
ம்பத்திருந்தை யாற்பதித்திட் டொல்லும்பொழுதோ ரசுஹாபி, செ
ள்ளாமக்கள் ளொன்றையுகட்டிச் சிதைபட்டிற்கன் றொன்றதனைச்,
செழுமைக்காய்கட் டினவாண்டுத் செதியப் பழவளமாயித்து, தன்
னாதெழுதாய் விலப்படியே தங்குறைநற்புதூ னக்கியா, தாளத்த
முதைக் கல்லதனிற் நடவித்தகை மலித்தோரை, கள்ளார்மரபத்
தொடைபிறநூலைக் காணுந்திருநா ளெந்நாளோ, காசிமதாசிம்யாசி
னபியைக் காணுந்திருநா ளெந்நாளோ. சூ

அலிமாவாட்டிற் குக்கோரு யன்றுட்டிற்குக் கண்பார்த்தி, ர
வைகளிலுங்கோ டாமியநா ளாருணும்மடிக்கா ளாயெனவே, நபிமாது
ன்யா வுக்காள ளாயிமாயி யனி ளோருளிறுல், நபிமெய்த்திர்க்க நபி
மாய்ப்பேச நாவிலத்துக்கே யருளையா, பனியாவெறிகொண் டே
சொன்னேன் பழமைகாணும் பார்க்கையா, யபறும்பரோறும்மு

ம்மதத்தென்றே பகர்ந்தாலஃது போதுமையா, கவிமாப்பொருளுக்
கருள்நபியே காணுந்திருநா ளெந்நாளோ, காத்திமுல்முறுசலன்பி
யாநபியே காணுந்திருநா ளெந்நாளோ. ௪௧

ஒத்தாசைக்கெனைக் காட்டவும்வேண்டா போகோவையா நம்மா
ணை, யூராரென்றே தளவேண்டா போகோவையா நம்மாணை, தத்
தாசுக்கடி மைப்பட்டோர்க டாமெனைத்தனை யே ராளுவர், தங்கச்சம
திராஜென்றீரது தன்னினைத்கா ணையுமிட்டேன், பத்தாசென்றிபு
லீசைவெருட்டிப் பாவையின்மீள விடுந்தோமே, பையற்கெசற்றே
மனம்வைத்துப் பாதக்குறுவது மெந்நாளோ, கத்தீசைச்சில நாட்
டொழுநபியே காணுந்திருநா ளெந்நாளோ, கதிராவக்கும ஞுளவு
ல்லாஹ்ரே காணுந்திருநா ளெந்நாளோ. ௪௨

பூவளமேவிய பொழிலிடைநாவற் பூங்கரும்பழுக்குலை யைப்பா
ர்த்தே, புடைபடவெறியச் சொரியுமக்கனியோர் பூவையுங்கையிற்
லெடுத்துத், தாவளமேவிச் செலுமதிற்கையைத் தானேப்ரத்தடியம்
மம்மா, தருவளக்கனியோ விஃதனப்பேசவென்று தாவியகரத்தை
த்தாவுதற், மாவளமங்கையர் மனத்திகிலுறலாய் வரிவண்டடியிஃ
தாமென்றே, வவ்விக்காந்துட் டிளமல்லவாய்ப்பின் வாங்கிச்செல்லு
மருவளையைக், காவளமதினத் தேடளநபியைக் காணுந்திருநா ளெந்
நாளோ, கன்கப்பதிமக் கிசுறுக்கானைக் காணுந்திருநா ளெந்நாளோ.

வேறு.

சுகப்பதிக்குமேயினும்பொன் னகப்பதிக்கும்வேண்டல்லைத்
தத் துன்பவீட்டி, லகப்பதித்தா நீசொலென வன்றுமுகம்மதிய்யா
வா யறுப்பலாமெ, முகம்மதிசுபெறவெனக்குச்சஷ மகுடத்தையுங்கா
ட்ட முதலைப்போலும், இகப்பரத்தாக் கம்பெறுநர் நபிநீங்கள் வரக்
காண்ப தெந்தநாளோ. ௪௪

திருபதியென் றுதித்தநவ நபியாதம் வையுல்லாதந் தாதையாக
வருபதிநன் னபிமார்க்கு முறுசலன்பி யாக்களுக்கும் பறக்கத்தாள
குருபதி ஜலால்ஜமால் ஜலுவள்ளாதம் வழியாய்க் குதாதன்றாதர
யிருபதிக்கும் வரபதிநக் நபிநீங்கள் வரக்காண்ப தெந்தநாளோ. ௪௫

## ஞானோதகப்புஞ்சம்.

கோடேற்ற விகடதந்திக் கணமேற்ற குரகதத்தின் குழுக்கொ
ண்டேற்ற, பாடேற்ற வடல்படைஞர் வானேற்ற வுயிர்பறித்து மடி
யபூபன், காடேற்றப் பரிநடவிட் பொருமுவனி யவிமாமன் கடை
நாளென்னை, யீடேற்றக் கரமேற்ற வெம்பிறுகூல் வரக்காண்ப தெந்
நாளோ. ௪௬

திங்களுடு ரவியவனி யெழுககன திதியுலகுஞ் சேர்த்தயாவு, மு
ங்களைக்கொண் டலமத்தெனையும் வெளிப்படுத்த வுங்களையுண்டாக்
கினேனென், றங்குமுற மருமுதென் றம்மநுந்தையும் காமீதென் று
தியோதுங், திங்களிற குல்முகம்ம தெழுப்பவனி யான்காண்ப தெந்
நாளோ. ௪௭

நண்படுத்த மொழிஞுமலி றம்பதத்திற் கபடமென நவிற்றக்
கேட்டே, யொண்படுத்த வுளமிரங்கிக காத்துக்கொள்ளவந்தோனு
க்கன்புற்றோதும், பண்படுத்த மொழியுடையீ ரென்னைமவுத் தெய்
திடுமுன் கண்பார்க்கநேர்செய், தெண்படுத்த வன்புதா வெங்களு
முகம்மதைக் காண்ப தெந்நாளோ. ௪௮

உடும்போடப் பின்றொடைப் பிடித்தவேட் டுவனைப்பார்த் துடும்
புதானேன், கெடும்போட விவர்கலிமாத் தன்னைநன் றாய்க் கிளத்தி
த்திதுக், கடும்போடேன் றன்குபிரை யுடும்போ தவிப்படிச்சென்
றன்புற்றீரென், றிடும்போடப் போக்குநபி யெநீங்கள் வரக்காண்ப
தெந்நாளோ. ௪௯

வல்லலா பூங்களுறு கலிமாவி னபியுமிது பாத்தென்றோதி, நல்
லலா பத்திடுடு மறிலாயி லாதுவென் பதுநபியுமாகுஞ், சொல்ல
லா பத்தொகுதி யுறாஜா நருஞ லாகின்ற தொண்மைவடிவாம், இல்
லல்லாகு முகம்மதுற்ற குலேகான் காண்பதுவு மெந்நாளோ. ௫0

அம்பரா வியவம் பகத்தரிவை யர்க்கரசி ஆயிஷாவாம்
நம்பிராட் டியருசித் தமர்தெரிந்து சரடேற்ற நகைத்தகோமான்
தம்பிரான் றிருக்கரத்தி லெழுத மறுவேஷரித்தா லுண்டேதும்
எம்பிரா னெங்கணபி யிறசூலே நான்காண்ப தெந்நாளோ. (௫௧)

அன்னை பெய்ன்மத் தாவென்று மென்மகனெங்.கேயென்று ம
டுக்கவிக்கு, பின்னையெனம் பாரென்று மன்னவனுக் குபிர்மீட்டிப்

புறமேசென்றோர், முன்னுஹம்மத் தேதந்த சுன்னத்நஜமாஅத்
தெனு முறைமைக் காக்கி, யென்னை யும்மத் தென்றுரைமெய்க் கண்மணி
யரைக்காண்ப தெந்தநாளோ. (௫௨)

தூன்றுமறை யப்பொருட்டன் றாரவுண்டே வண்டுதூங்கு மிசையா
லென்றுமலர் வாரியறு கைக்குதட்டா தெருமை நின்றுறங்கும்
நின்றுபறை வளர்மக்க மதினவு மருளோடு நீடூழி வாழியாக
என்றுபர செங்கண்மணி யுல்லாவை நான்காண்ப தெந்தநாளோ. ௫௩

வேறு.

சமானுக் காயீனென் றேர்க்கறகுமானீ, யென்னும்மத்துக் கா
யீனென் றேற்றமருமறைதச், சிமானப் பாற்காணிற் செய்திருநாம
ஞ், சேர்க்குபபூ பக்கருக்குத் தீர்க்கமுறுகோரீ, மூமானிலப் புகழு
முறுசலன்பியானை, மூங்கையுரை பேசவைத்த முத்திமுஸ் தபா
வை, நாமான தீனடாத்து நக்நபியுல்லாவை, நான்காண வேண்டுந்
திருநாளெந்தநாளோ. ௫௪

மைநாறும் வெங்குபிரை மாற்றுமதிவேந்தை, மங்கும் விழிக்
கம்பொனடி மண்ணிற்பிரைவை விட்டோரை, வெயினுறு பருவனிற்
து மேன்மைக் கலிமாவை, விள்ளும்படி தீனடாத்தும் வேதாம்பர்
தம்மைக், கைநாறும் பொன்மலையைக் கடக்கச்செல்லென்றோரைக்,
கைமிறன்றோஹுக் கேமவுலி கைமிறன் றிடுவோரை, நபினர் முகம்ம
தூற்றசூல்நபியுல்லாவை நான்காணவேண்டுந்திருநாளுமெந்தநாளோ.

எந்தாதை யென்றுயி னென்மூணாங்குடாக, எந்தனக்கு மன்பா
யில் வேழைதனைநீங்கிப், பிந்தாது கைபிடித்து வந்துகரையேற்றப்,
பெவ்வான ரானவெங்கள் பெருமானைத் தானே, சிந்தாத வாழ்வும்
றஹ்மத்துஞ் சிறப்பான, திறமைபலகுபில் மறாபூகென்னுஞ் செ
ழும்பதி யுற்றோரை, நந்தாத செங்கோ னடாத்துமிறசூலை, நான்கா
ண வேண்டுந் திருநாளு மெந்தநாளோ. ௫௬

கோளில்லை வாங்கிமட வார்க்குச் சபாஅத்துக், கொளும்பீ
வி பாத்திமத்தன் புள்ளபாவா தம்மைத், தானில்லைக் கன்பாய்ம
ணந்தருக்கில் மணஞ்சூறென்னுந், தலமுமக் கென்றிறைசொற்ற வலீ
யுல் முஹ்தபீனைத், தாயில்லை நபியிபுரு கீக்கவீ னலகி, கொன்

னடப்பிற் படிநடந்து தொழுமுக்கம் மத்தியை, நானில்மெல்லாம் புகழுநபிகளுயகத்தை, நான்காணவேண்டுந் திருநாளுமெந்தநாளோ

அரபுஸ்தான் ஹிந்துஸ்தான் அஜமியொமன்கட்டும், அல்லாது பாரிசக்கட் டொடுமொற்றக் கட்டெல்லாந், திறவுற்றே யர்தங்கத் தேசப்பாவைபாலே, செப்புகிறு ருங்கள்மது ஹைறக்கவிதையாக, மறுவற்று நீந்தத்தே சத்திறுங்கண்கெட்டு, வந்துவித்து வாழிங்கள் வாசல்வித்து வாவையா. நறவுற்றேசுமழத்தா னீங்கள்வருங்காட்சி, நான்காண வேண்டுந் திருநாளு மெந்தநாளோ.

என்பாமதென்றுதம்பி யெனுமுனைதாஞ்சொல்ல, வெந்தலைனத் தானீனந்து சம்புல்அகுபா றெனும், மான்பாடலாய்புலவன் முன்பாட்கேட்டு, மகிழப்பரி வட்டம்வெகு மானஞ்செயும் வள்ளல், தான்பாடி நம்மைசக்கெஞ்சிற் தான்பாடலென்று, தமிபனிவன் முன்னுளிற் றமிபனென்றேகண்டு, நான்பாடத் தான்கேட்க நீங்கள்வருங் காட்சி, நான்காணவேண்டுந் திருநாளு மெந்தநாளோ. ௫௯

உண்ணத்தான் சோற்றைத்தா வென்றபசிகண்டன், குற்றபுதுத்காயுமட்டி மூன்றைந்து கைக்கீந், தென்னைத்தாம் சொல்லும்போதில்லகத்திலேகி, எண்பஃது மன்னர்வயி றாரவன்ன, முன்னைப் பன்னம் பண்ணைச் சீர்பெற்றதுப் பாலெனைத்தான்கண், பாராதுபின்னெவரும் பார்ப்பதுண்டோவையா, நன்னைத்தா னென்னைத்தா னீங்கள் வருங்காட்சி, நான்காண வேண்டுந்திரு நாளுமெந்த நாளோ

தலமான திரங்குமெய்க்கத் தனியோன்புறுக்கானிற், சாற்றும் பதினைங்கிடத்தில் சஜதாவுண்டாகப், பலமாக வேபடைத்த பயஹாம்பர்தம்மைப், பண்டுமறை முன்றுக்கும் பின்பான அன்பியாவைக், குலமான அபுல்காசிம் குலமணிவிளக்கைக், குபவரியுமாக்கவுமை குயிற்று முலக்தபாவை, நமைமுற் பனசகாய நக்கமுபுல்லாவை, நான்காணவேண்டுந் திருநாளு மெந்தநாளோ. ௬௰

தாதாந்தமதா சொர்க்கத்திற் றரும்பைத்தல் ஹறம்தெனுந், தன்வீடென் னும்மத்திற்குத் தாவென்றல்லாபக்கற், காதாந்தமாயிருந் தகைநல்லன்பியாவைக், காத்தமுன் னுபுவ்வத்தாய்ப் பின்னுற்ற காத்திமுல் லன்பியாவை, வேதாந்தத் துட்பொருளெல் லாம்வேண்டு மன்பியாவை, வேளைக்கென்னைக் காக்கவென்று மேவுமன்பியா

வைத், துசகாந்தம் பெற்றவிற குல்கட்சன்பியானவைச், சொல்லுந்த
ஜாத்தில் எவுமொடுக்கத் துணையா மன்பியானவை, நாதாந்தப் பொ
ருளுக்கென்று நண்பான்பியானவை, நான்காணவேண்டுந் திருநாளு
மெந்தநாளோ. ௬௨

கனமேக மாமழையைக் கவிழ்த்தத் திங்கடோறுங், காலவாய்
ச்சோலைவளக் காவுமன்றியெல்லாஞ், சுனைவாடைக் காற்றுப்பனித்
துன்றுதுளிராலஞ்சித், துணர்வாழைப் பூவைமந்தி சூழ்வெயிலென்
றேகாயத், தனுவாய்வந் தெட்டிப்பார்த்துத் தரவுபையப் பையத்
தூமேலா, குழமேலவென் றெண்ணிச்சாடு மினத்தேடே, நனைவாச
க்காவளமதினாடி புல்லூவை, நான்காண வேண்டுந்திருநாளு மெ
ந்தநாளோ. ௬௩

வேறு.

திருமாமதி முகமும்மதி ஜெயமுங்குண நயமுங், செகமண்டிய
வுடல்சங்கையுந் திண்டாதடி நடையுங், கருமாமுகிற் குடையுங்கன
தனம்வீசுகைக் குடையுங், காதங்கமழ் தாவேகமழ் மிருகம்மதமண
முந், தருமாதவ நெறியுநதய வுகளும்பொறை யறிவுந், தக்கோனகி
ருபைப்பாசமுந் தந்தத்திருவிழியும், வாமாயிவை கண்டுகாண்குற
வருநாளு மெந்நாளோ, வள்ளல்முகம் மதனுரினி வருநாளுமெந் நா
ளோ. ௬௪

பாரத்தகி விதமும்மறை பகரும்மணி வாயும், பண்புற்றெழு
ஷறதும்மொகுத் தைரந்தந்தொழும் விதமும், ஆசைச்சக மகிழ்வாசி
ய ஆபரும்பகர்தரமு, மணியாகிய திறலேலசித மாரும்புஜபலமும், பே
கப்படு மெருசட்டிடகீள் பிறந்தும்புறத் தழதும், பின்முன்செலு
வோர்காணுமெய் பிந்தாதலக்கணமும், வாசத்தொடு மிவைகாண்கு
ற வருநாளுமெந்நாளோ, மதினுமுகம் மதனுரினி வருநாளுமெந் நா
ளோ. ௬௫

புந்திக்கனி பெருகப்புல வோர்கட்டியங் கூறப், புகழ்சேர்சல
வாத்தைச்சொலிப் புடைவானவர்நெருங்க, விந்தைச்சுவ லப்பாவை
யர் வெஞ்சாமரை போட, மிக்கானமிசை யிழுவிந்தடி மேவக்கதிர்வீ
சச், சந்தத்துற சிங்கக்கொடி கருமாகவு முவைச், சமுகத்திலிலச

ஞாபிகள் தரிக்கும்பரி நடத்தி, வந்தாற்றிட நான்காண்குற வருநாளுமெந்நாளோ, மறையாம்புரிக் கானக்கபி வருநாளுமெந்நாளோ.

குணமாய்வெருநாளிற் சுழுன் குருவாம்நபியீசா, கூறுயர்முனீறப்படிசோலையின் கூர்ந்தநன முற்றே, யெணமாயிசுருகண்டுகையினிதாழுணவிய, இன்பத்தொடுதாழும்பினு மியல்மக்கிகடாழும், கணமாயுண வுண்டுற்றவ்க் கலைவல்லவன் மாண்டு, காங்கொண்டெடுத்தடக்கிப்புகழ் தையினூர்நபி நயினார் மணமார்முகம் மதனூரினி வருநாளுமெந்நாளோ, மனம்வைத்தடி மையைக்காக்கவும் வருநாளுமெந்நாளோ, ௬௭

உண்டாவது முண்டில்லது முண்டாயிடு மொன்றாய், ஓமானசுக்கூறுகைப்பின் ஜெளிநும் ஷம்சுதாத்தென், றண்டாததுபண்டித்தினம்அவ்போடிரு லாம்வேறய், ஆனந்தவி தானந்தம தாகச்சுய சொரூபம், கொண்டேபனை யடிபூட்டெழுகொளுமாஜத மிணங்கி, கொள்ளும்படி கூட்டிக்கொள்ளத் துணைசெய்யுமெங் கோமான், வண்டார்தொடைப்புயமார்நபி வருநாளுமெந் நாளோ, வரிசைத்தெரிசனை தந்திட வருநாளுமெந் நாளோ. ௬௮

ஏர்மாநபி யாதம்ஸபி யுக்லாவிரு விழியா, லெழிலிற்கிணை கீர்விட்டமுங் குற்றம்பிறகு வில்லன், ருமானியவிரல்முத்திகின் றறிந்தேயவர்வணங்க, அணிந்தநபி மாரைந்தபுத் தொன்றாக்கலை முறையார், மொனுது மானுரெனுஞ் செம்மற்குரு மணமாய்ச், செழுமானிரு மகவாகுமெங் திருத்தாய்ரைக் கொடுத்தோர், மாமாமுகம் மதனூரினி வருநாளுமெந்நாளோ, வசைதீர்த்தடி மையைக்காத்திட வருநாளுமெந்நாளோ. ௬௯

புரிசைத்தல நன்மைக்கடி பூணுங்கஃபா ஸபரர், புடைமாமதினியையார்களும் புடைமேற்சூழ் கின்றாற், பிரசத்தொடு மெடுத்தக்கலைப்பிதிர்மாமதிட் சேர்க்கப், பெலமேநமக் கிலைகாணெனப் பேசும்மவர் மகிழ, அரிசத்தொடு கலைதான்விரித் ததிருப்பணிள் வைத்தே, யருள்கைத்கொடுகற்றாகவியன் றணிமாமதிட்பதித்த, வரிசைத்துரை நயினூரினி வருநாளுமெந் நாளோ, வறுமைக்கலி யகற்றும்படி வருநாளுமெந்நாளோ. ௭௰

பொல்லானறி வில்லான்மிகு புல்லன்னபு ஜகில்தான், புகலும்மறைப் படியேமன மிகுவுஞ்சதி ராக்கா, கல்லான்பரிகொல்லைப்புடை

தானையடுத்தானைத், தான்பார்த்தரி குரத்தைப்புலிதான்பார்த்தெ ட்டிப்பிடியென், றெல்லாதடி பிடிப்பாதலில் வொல்லைக்கிறப்பாமெ னி, சிறுகோவடியும்வாசியு மூங்கட்சபயமென்றே, வில்லான்கணை வ துகண்டெண மெலமெய்ப்படியேசீ, விடுகென்றனும் விடவேயவன் மீண்டேகவிடுத்தோர், வல்லானபி யுல்லாவினி வருநாளுமெந்நா ளோ, மாமப்புய நபிநூரினி வருநாளுமெந்நாளோ. ௭௧

எங்கோன்றபக் கெணப்பட்டவ னிவனென்றுளங்கண்டே, யீ மானுக்குகைருணவ ரீமானுக்தாவுஞ், செங்கோலிற சூலன்பதுசெய வும்பயனுயவும், நின்றின்முகம்மதுநந்நபி தீதாறு தந்திடவும்,பங்கப் பழவினைதீர்த்திடப் பயஹாம்பர்நந்நபினூர், பண்டேயெனைக்கையே ற்றிடும் பயஹாம்பர்நந்நபினூர், மங்காநபி நயினூரினி வருநாளுமெந் நாளோ, வாக்கேதர நோக்கேபெற வருநாளுமெந்நாளோ. ௭௨

பழமைக்கிழ விளைப்பார்த்துடல் பருவப்பதினூரும், பாகப்பெ தும்பையுமாக்கிய பயஹாம்பர்நம்மிறசூல், உளமெய்ப்புற வுவரப்பு துமாகும்மெமதிறசூல், உடையோனொளி மலர்மூத்தினை யுறமூய்ந பியிறசூல், இளமைப்பட முதுமைத்தன மேயூப்படுமிறசூல், இந்தை ப்பருப்பாக்கிப்பொருத் தியும்விட்டருளிறசூல், வளமைப்புகழ் நபி னூரினி வருநாளுமெந்நாளோ, வலிமைப்புலி யலிமாதுலர் வருநாளு மெந்நாளோ. ௭௩

எதிர்த்தேகணை யொப்பப்படு பிணைத்தாரயம்மடவார், இலஞ் சித்தடம்புகுந்தேகுளித் தேகும்மொலிக்கஞ்சிக், குதித்தேகயல் பு டைபாய்ந்திடக் கொள்ளும்மொலிசூழுநீர், * மிதித்தேகடச்சியர்நாற் றுறவேண்டுங் குரைவைகளும், * மதுத்தேன்வள மதினாநபிவருநாளு மெந்நாளோ, மக்கத்திற சூல்நந்நபி வருநாளுமெந்நாளோ. ௭௪

வேறு.

அகம்வினைப்படைவரினும்வல்லயத்தலைக்கணுகிடும்புகைமேலும் தரும்விருந்தெதிர் கைமீனயடுக்கனை தான்புகைந்திடுஞ் சோற்றால்

---

* ௭௪-வது, பாட்டில் ரெண்டடி தவறியே முன் பதிப்பில் இருக் கிறதால் இன்னேரம் நமது நோக்கத்தி னப்படியே போட்டனம். இனி மறுபதிப்பிக்கு அப்பாட் டெங்கிலு மாராய்ந்து முறைபோல் சீர் திருத்திக் கொள்வாம்.

மிகவுமிப்படிப் புதுமைகடனையு மேவிளக்கிடப்பதி வாக்கு
முஹம்மதுநபியெனையும்பார்த் திரங்கிட வருவதுமெந்தநாளோ. ௭௫

கொழுவுக்கைய லாசிபெற்றதையுண்டு கொளுபிச்சமுள்ளதைத்தீர்த்தா
தழுவுமிப்படித் தொழிலாயிசாநபி தரும்பொறையுங்கட்கே
எழுமையுற்றபேயின் னடிப்படக்காளா வெழுமுனைத்திடத்திறோர்
வளமைபெற்றநந் நபியும்பார்த் திரங்கிட வருவதுமெந்தநாளோ.

ஆங்குமுன்பெனக் கறுதிசேர்த் தனைத்தரும் மடிகளுக்கறியாதோ
தாங்கியின்றெனக்கடிகள்ர்ண்டையுஞ் சுமைத்தலையெவரெனக்காண
எங்கும்மத்திற்குள் கன்றிடத்தினங்தொழுதிரந்துமை யேந்தித்தவர்
வாங்குநந்நபியெனையும்பார்த்திரங்கிடவருவதுமெந்தநாளோ. ௭௭

பெண்மை கொண்டொரு வனும்வரப்பிறந்திய பெண்ணின்மயம
கல்வாகத், திண்மைகொண்டுமுன் னிருந்தவ னிவனென்று திகைத்
திடத் திறமேவி, புன்மைகொண்டிறை மறைதயையுஞ்சறதைற்யுமுறு
மையுமுறவாக்கி, வன்மைகொண்டநந் நபியும்பார்த் திரங்கிட வரு
வதுமெந்தநாளோ. ௭௮

பிறக்கத்தான்வரவும்நபி யவர்களும்பெரியவ னிடம்பேசும்
பறக்கத்தாயெழுந் திருமறை சுருபுகள் படித்திட வழிகாட்டி
யிறக்கத்தான்பட்ட தெறும்பிறு யிபமுதலைவைக்கு முறைப்பான
டறக்கத்தாம்நபி யெனையும்பார்த்திரங்கிட வருவதுமெந்தநாளோ.

மடித்தகிக்தைய னெதுவம்புருயிறு மணவிடை துகளாகக், குடி
த்தனங்கெட வுந்தல்லாவனையுங் கொலைசெய விரவேகிப், பொடி
த்தங்கேகலின் விழுந்தகாலொடி குறைபோம்படிதான்பொருத்தும்
வடித்தசொல்நபி யெனையும்பார்த்திரங்கிட வருவது மெந்தநாளோ.

வினையும்பார்த்தவர் வினையுஞ்சக்கன்றிட வீறல்பெறத் தந்தை
யொடும், அனையும்பார்த்தவ ரெழுப்பினி டேற்றவ மருள்பெற ஹலி
மாவாம், குனையின்பார்த்திபர் மதினமக்கள் சென்று குடிக்கும்மை
யுஞ்சாலி, மனையும்பார்த்தவ ரெனையும்பார்த்திரங்கிட வருவதுமெந்
தநாளோ.
௮௧

கழறப்பார்த்தவர் வினையடியிலுமெனைக் கதிமுக மதியாக்கிற்,
றளரப்பார்த்தவ ரகத்தழுதருங்குமை தளம்சளம் புடைசேர்ந்து, கி
ளறப்பார்த்தவர் தருவவர் வரந்தருக் கிளம்புயப்புடைசேர்ந்து,வள
ரப்பார்த்தவர்வளமைபார்த்திரங்கிட வருவதுமெந்தநாளோ. ௮௨

பிணங்கப்பார்த்தவர் தலையுங் கிழம்படை பிரிந்திட மணல்வீசிச், சுணங்கப்பார்த்தவர் சுணவராமாரிதைத்தொடர்ந்தெழுந்தொளிகாட்டி, யுணங்கப்பார்த்தவ ரிபுலிசேகவும் ஒருத்தைதம்பனைதந்தொகுத்தாக்கி, வணங்கப்பார்த்தவ ரிணங்கப்பார்த் திரங்கிட வருவதுமெந்நாளோ. அ௩

தெளியப்பார்த்தவ ருமறுந்தம்முயிரெனத் திரும்பவுமுமர்சேர், மொழியப்பார்த்தவ ரமாருநம்விடையென முடுகியுங்குயிரோடிக், கழியப்பார்த்தவர் மறைமுடித்திடமன்று கர்த்திமுக்கணவுறநேர், வழியைப்பார்த்தவரெளியனைப்பார்த்திரங்கிடவருவதுமெந்நாளோ.

போக்குக்காம்படி விளைந்திடும் வயல்களும் புடைசெறிந்திட வோங்கித், தேக்குக்காம்படி பலவளர்ந்திகழ்ந்திடுஞ் செழும்பொழின்மதினாவிற், பாக்கிக்காய்புறக் கான்தமாமுஹம்முஸ்தபா நபியெற்குப் பாடவுதல், வாக்குக்காநபி யெனையும்பார்த் திரங்கிட வருவதுமெந்நாளோ, அ௫

வேறு.

ஆரப் பயனறி யாதடியே னடிகளையே
சாரப் புகழ்பாடுஞ் சாஹிறென்று சொன்னதற்காய்
வாரப் பரியேறி வருவார்களே சூழப்
பாரப் பயஹூர்ம்பவிரன்னைப் பார்க்குநா ளெந்நாளோ. அ௬

காலநபி தாவிக் கடியுமுன் னீழானம்
சீலநபி பாவந் தீர்த்துசலா மத்தாக்க
ஆலநபி பார்வை யாமினு ரருளருமைப்
பாலநபி யருளைப் பார்க்குநா ளெந்நாளோ, அ௭

நீங்கா மறைக்கினை பிறக்தஆ திக்காக
வாங்கா மதுக்குடத்தில் வழுத்துமிற சூல்நபிறர்
ஆங்காணு நீங்கவென்னை யாதரிப்ப தன்றைக்குள்ள
பாங்கா முஹம்மதரைப் பார்க்குநா ளெந்நாளோ, அஅ

கதியா ரறியாத காலைநமக் கடியில்
விதியா ரொழுகுகின் வேண்டுதலைத் தான்பார்த்து
மதியாற சூலெனக்கு வகுத்தநன்மை மாமதினாப்
பதியாற சூல்வரகப் பார்க்குநா ளெந்நாளோ. அ௯

புந்தா மரைதவணக்கிப் போற்றுமு மீறுளத்திற்
சத்தாங் குபிரசற்றித் தன்மகளும் பொன்மகள்போல்
வைத்தாங் குறைதீர்த்த வள்ளல்நபி யென்னைமுன்னாட்
பத்தாந் தொழும்பினைக்கண் பார்க்குநா ளெந்நாளோ. ௯௰

பண்டேற் றவர்க்கருமை பண்டடிமை யென்றிருக்கும்
பண்டேற் றவரிகழ்ந்தாற் பண்டடிமைக் காராமோ
பண்டேற் றிடுமுறையோர் படியிலென்று மேதாறு
பண்டேற் றவரெனைக்கண் பார்க்குநா ளெந்நாளோ. ௯௧

பிரிவாங் குழுவாகிப் பிந்தாது முந்தழிசார்க்கும்
சொரிவான் குழுவான சுன்னத்து ஜமாஅத்தெனுந்
தெரிவான் வகுப்பாக்கித் தீதாறக் காவாக்கிப்
பரிவா நபியெனைக்கண் பார்க்குநா ளெந்நாளோ. ௯௨

நயங்காண்பர் நம்பினவர் நம்பார் திடுக்குறவே
அயங்காண்ப ரஞ்ச வயமமர்த்திப் போர்தொலைத்துச்
ஜெயங்காண்ப ரெங்களவி சிந்தைமகிழ் மாமனென்ற
பயஹராம்ப ரென்னையுங்கண் பார்க்குநா ளெந்நாளோ. ௯௩

விண்பார்க்கும் விண்ணவர்க்கும் வேந்தர்நபி மார்களுக்கு
மண்பா ரனைவருக்கும் வழிலாமக் கான்வழியாய்க்
கண்பார்க்கில் ரண்டுமொன்றாய்க் காட்டும் ஹபீபுல்லாவைப்
பண்பார்க்க வென்னையுங்கண் பார்க்குநா ளெந்நாளோ. ௯௪

நிலமேவ வாழை நின்றுறவிக் காலவட்ட
மிலமேவ வீசி விழைப்பாற்று மக்கநகர்த்
தலமேவ வாழும் ஷகீதா நபிகிருபைப்
பலன்மேவ வென்னையுங்கண் பார்க்குநா ளெந்நாளோ. ௯௫

கலித்துறை.

செவியாற நூலென்று நம்பினவே பார்க்கன்பு சிந்தைசெயுஞ்
சவியாற நூலென்னைச் சாஹிதென்றே சொல்லத் தான்வருந்துங்
கவியாற நூஇல்லாச் சேரும் லிவாயுல்ஹம் துக்கொடியு
நபியாற நூல்முஸ்த பாவேமுகம்மதென் நாயகமே. ௯௬

வலங்காட்ட டாகல்வி காட்டடாவன்னச் சேலைதந்து
நலங்காட்ட டாகழுத் தைக்காட்டு மாதர்சொற் காகுமனே
பலங்காட்டும்வேதப் பயன்காட்டி யென்னைக்கண் பார்த்திரங்கி
நலன்காட்டிடுமுஸ்த பாவேமுஹம்மதெந் நாயகமே. ௯௭

பானக்குங்குடைக்கொம்பு வெள்ளானைக்கேகும் பவனிக்கண்போய்
மானக்குங்குளித்திடப் போமக்குங்கோரளி வண்மைவிட்டோய்
ஆனக்குங்கொடைக் கரத்தாரோபொறிவரி யாடுஞ்செந்தே
னானக்குங்குமத் தாரோமுஹம்மதெந் நாயகமே. ௯௮

மாமானப்பேச வகையறியே னிந்த மாநிலத்தின்
சீமானமக்கும்மத் தென்றீவச்சித்துவம் சீத்துவமா
யீமானைக்காட்டமக் கான்லாமக்காலென் னடாவென்றுமுன்
னுமானங்காட்டிய நூறேமுஹம்மதெந் நாயகமே. ௯௯

சேடாளவாழுங் கசனேர்க்கரசி செழுஞ்ஜிபுரில்
வீடாளவாழு மதினாவில்வீடென் றுவின் டெங்களுக்குத்
தேடாளநீயென் றிடங்காட்டமேவித் திருமதினா
நாடாளுமான்பிள்ளைச் சிங்கமுஹம்மதெந் நாயகமே. ௱

அதுனன்கிளைமகு மூதேயெனையன் றங் கேற்றுமுகம்
மதுநாலெனக்கும்மத் தேயேடாவென்று வாய்மைசொற்ற
மதினப்பதிமகு மூதேயிலக்க வளங்கள்தூற்று
நதிநான்கிடமக்க வாழ்வேமுஹம்மதெந் நாயகமே. ௱௧

அன்றும்அல்லாகும்ம சல்லிவசல்லிம் அலாமுகம்ம
தென்றுமென்றுரொருக் காற்சொல்லுமபோ திறைபத்துத்த
துன்றுமொழிசல வாத்துச்சொல்வானந்தச் சோபனமே
நன்றுநபிமுஸ்த பாவேமுஹம்மதெந் நாயகமே,

மடையூடுபாயும் பசும்வாளைக்கெண்டை வனத்திலுன்னிப்
புடையூடுபாயு மொலிக்கஞ்சியேகிப் புகுந்தெரிப்பா
மிடையூடெழச்செலில் வான்மடுவிம்மி யெருமைமுலை
நடையூடுபாய்மக்க வாழ்வேமுஹம்மதெந் நாயகமே. ௱௩

இலக்கணப்பாக்க ளிவையறியேனெழுத் தின்னசைசீர்
சொலக்கணப்பாக்கள் மற்றொன்றறியேனுக்கள் சொற்சதகம்

பலக்கணமாங்கவி பாடுவதுங்கள்பறக் கத்தனையான்
நலக்கணமாமூஸ்த பாலேமுகம்மதெந் நாயகமே. ௯௪

மனம்வாக்குக்காயமு நோக்காற்செயுமவ் வன்பிழைக்கென்
னினைவாக்குக்கொள்ளுவ தன்றிபுங்காத்துநந் நேசம்வைத்துத்
தினம்வாக்குக்கோர்க்கு நம்சலவாத்தையுஞ் சிந்தைசெய
னைவாக்குக்காக்கு முகம்மதுமாணிக்க நாயகமே, ௯௫

மூமீன்றனமுத்தக் கீன்பக்கலாக்கி முடிகச்செய்தே
தோமீதகற்று முகம்மதைப்போற்றிச் சொலுஞ்சதகப்
பாமீதுரைக்கும் பறக்கத்துக்காவென் பவம்பொறுப்பாய்
ஆமீன்அல்லாகும்ம ஆமீன்அல்லாவுன் னடைக்கலமே. ௯௬

மெய்ஞ்ஞானச்சதக முற்றிற்று

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

# மெய்ஞ்ஞான ஆனந்தக்களிப்பு.

காப்பு - விருத்தம்.

திருவுக்குத் திருவைக்காட்டித் தீனுக்கு நாவைக்காட்டி
யருவுக்கு மருவாய்நின்ற வுண்மையை யழைத்துஞானக்
[illegible]துக் கருவாமூன்ற னைந்தக் களிப்பைப்பாடப்
[illegible]நக்குப் பொருளே பெற்குப் புகலுநீ காப்புத்தானே. க

[illegible]க ரம்போய்மீண்டோர் வான்படி வித்தைதக்கெர்னைத்
[illegible]த மாகச்சேர்ந்த நபிசாரண் புகழ்க்கெந் நாளு
[illegible]க முடிவையொட்டி வுண்மையை யமைத்தஞான
[illegible]ந்தக் களிப்பையான்கூறருள நீ காப்பதாமே. உ

வேந்தபூ பக்கர்மிக்க விறலும றுதமானலீ
யாய்ந்திடு மிவர்களோடு பசஹுஸை னவர்கள்யாதங்
கூர்ந்துகேர்ந் துள்ளம்போற்றிக் குருவடி யுபயம்பற்றி
வாய்ந்தமெஞ் ஞானந்தக் களிப்பையான் மவுலுவேனே, ௩

## கண்ணிகள்.

ஆமீனல்லாகும்ம ஆமீன்-எந்தன் *
அசப்படி நீசபு லாக்கவும்வேணும் ஆமீனல்லாகும்ம

காமக்குரோதத்தி னின்பாய் - வந்த
கவலை யறுத்தைந்து புலனை யொடுக்கி
ஆமதி நாதரைப் போற்றி - யுள்ளத்
தடிவிட்ட பார்வைக்கு மேலேயுகார
சமாலெனும் வட்டித் தோடே - யெழுந்
தேய்ப்புற வந்திரு மாப்புடனின்ற
கோமளப் பச்சைப் பசலை - வன்னக்
குழந்தையின் மழலைச்சொற் கண்டாயோதோழி. ஆமீன் க

பெருந்துச் சிறுத்துப்போ காமல் - மூதற்
பிறந்த மயமாய் விறைந்துசூழ்ச்சியமா
மிருத்திய ஆகும் ஹயாத்து - மிவை
யிரண்டிற்கு முள்ளமைக் குள்ளமைப் பொருளாய்ப்
பருத்துக் கறுத்துப் புதித்த - அந்தப்
பனையடி மூட்டினிற் கொலுவிலிருந்து
வருத்திய தூயப்ர காசந் - திரு
மவுன சித்தாந்தத்தைக் கண்டாயோநெஞ்சே ஆமீன் உ

கல்வி லெழுந்த ஞானத்போ - லீதாக்
கப்புளி மாளிகை மத்தியின்மீது
புல்லிய முச்சுடர் வட்ட - மந்தப்
பொன்மய பீதிருந் தென்மய வடிவாய்க்
குல்லென்று வந்துகுதித்து - அருட்
கோலங்கொண் டேதிருக் கூத்தாக் கொண்டாடிஞ்
செல்லக் குழந்தையின் வாச - மலர்ச்
சேவடியைத் தொழு தேற்றிக்கொள் மனமே - ஆமீன், ங

* எனக்-கப்படிநீசபு லாக்கவும் வேணும் - என்றுமுன்பாடம்.

# ஞானோதயபஞ்சம்.

மாவடி நாவடி மேலே - பறல்
  மன்னவர் தென்னும் வனக்கரைமீது
மேவடி காராறு காப்பின் - அது
  வெள்ளாறு காய்ப்பின் னெழுமவ் வறுகாற்
ருவடி வேலிகள் சூழும் - அந்தத்
  தாமரைக் குட்டத்தில் நாமகிழ்ந்து
மூவடிக் கொலுவி லிருக்கும் - திரு
  மோகச்சித் தாந்தத்தைக் கண்டாயோ தோழி ஆமீன். ௪

ஆரா ரிருந்தென்ன மனமே - யொரு
  அலிபிரு லாமுருக் கொண்டுசிறந்த
சீராரும் வதனக்கண் ணுடி - யந்தச்
  செப்பமல்லோநமக் கொப்பானசமான்
வேராரு மேலத் தெருவில் - அருள்
  வேடிக்கை கொண்டபிர தாலிக்கவாசற்
காரொளி வீற்றுவு நாகம் - ஆருங்
  கமலச்சிங் காரத்தைத் தொழுதுகொள்மனமே ஆமீன். ௫

மும்மலத்தைச் சுட்டுப் போட்டே - யந்த
  மூச்சுடர்த் திவெட்டி வீசும்ப்ரகாச
அம்பலர் மாளிகைக் குள்ளே - விளை
  யாடிய சின்னக் குமரிஸயக் கண்டே
அம்மையு மப்பனு நீயே - எனக்
  காதார மாதார மாதார நீயென்
றுன்மந்த்ரப் பொருளையும் போற்றிக் - களித்
  தோமெனக் கும்மி யடித்தாயோ பெண்ணே ஆமீன். ௬

ஆதி யநாதியு மாகி - நுக்கத்
  தாவதி லேலிபத் தாகவுநின்றே
யோதும் பகலிர வற்ற - அந்த
  வொல்லியி லேபச்சைக் கிள்ளையைப்போலும்
பாதிவெளி யிரு ளொன்றாய்க் - கலப்
  பாகிய அப்படு பாதியி லடுவே
சோதி நடம்புரிந் தாடும் - அந்தச்
  சோபன மேசொகு சாமடிபெண்ணே ஆமீன். ௭

தானசை வென்னுளி ருந்தே - மிகு
    சந்தோஷமுற்மனந் தோஷமுங்கொண்டேன்
ஆறு லெனக்கினி யென்ன - எனக்
    காதார மாதார நீயல்லோ தோழி
நானும்விட்டேனினிச் சொன்னேன் - உன்னை
    நம்பினே னம்பினே னெம்பிராண ரூபி
தானுனி மூச்சுடர் வட்டம் - அந்தச்
    சூஸ்திரப்பெண்ணேயோஸ்தியென்றறிந்தேன் - ஆமீன் ௮

என்னுக்குள் மின்னொளி போலும் - நீதா
    னென்னுக்குள் நின்றெட்டிப் பார்த்துக்கொண் டேதான்
என்னையு மிப்படி வைத்தாய் - இதற்
    கென்னவென் றிந்த வுலகமுஞ்சொல்லும்
அன்னீதம் பண்ணுதே சொன்னேன் - அரு
    வாயணு வாயணு வின்மூன்றெழுத்தாய்
மன்அலி போடிரு லாமாய் - நின்ற
    வாகான கண்ணாடி ரூபென்னபெண்ணே - ஆமீன், ௯

கண்ணாடி வட்டத்திற் கண்ட - அந்தக்
    காட்சியல்லோசொரு சாச்சடிபெண்ணே
கண்ணாடி தன்னிற்கா ணுமக் - கண்ட
    காட்சியெல்லாம்வீ ணச்சடிபெண்ணே
கண்ணாடி யிற்றெளிவாகக் - கண்ட
    காரணமேயதி பூரண மென்று
கண்ணாடி நின்றமுக் கோண - மெழுங்
    காமணித் தீபத்தைத் தொழுதுகொள்மனமே - ஆமீன். ௰

கூனன்குருட னென்றென்றே - அன்று
    கொத்தயடிமைகொண் டாட்கொளுங் கோமான்
தீனுக்கன் பாகிய சீமான் - எங்கள்
    ஷெய்குதா மான்லெப்பை சாஹிபின்பேரிற்
ருணத்ய முங்களி கூர்ந்து - அவர்
    தாமுன் னடாநீ பாரென்றுசொன்ன
மோனச் சுழிவட்டத் தோடே - நின்று
    முடிகுஞ்சங் கா[illegible]நிலைத் தொழுதுகொள்மனமே - ஆமீன்

ஊற்றைக் குணங்கொண்ட காயம் - இதற்
கொன்பதுவாசலு மொழுகாகவுண்டும்
நாற்றமும் பொதிந்ததிக் காயம் - இதை
நம்பாதே மனமேயை வேடர்கள் வப்பாய்க்
காற்றொன்றும் வாராமல் வைத்த - அந்தக்
காயமல்லோநீ நம்பாதேமனமே
யேற்றிய அலிபிரு லாமுங் - கொண்டே
யிறங்குஞ்சுவாசத்தைத் தெரிந்துகொள் மனமே - ஆமீன். கஉ

மேலக் கடைமணி வாசல் - அதில்
மேவுஞ்சித் தானந்த வேதபெண் பிள்ளை
வாஸ்சவுந்திரங் கண்டு - பின்னும்
வாகிட்ட வுச்சியி லோருருக்கொண்டு
ஒலிட்ட கிழத் தெருவில் - ஒரு
வூறணி யுண்டந்த வூறணிக்கரையில்
நாலெழுத்தர்மெ முண்டே - அங்கு
நடமாடும் தாழ்வைக் கண்டுகொள் மனமே - ஆமீன். கங

ஆவென்று கூவென் றெழுந்து - கொண்டே
யாடுஞ் சுவாசப் பரியை நடாத்தித்
தூவென்று ஐந்து ஹறுபின் - றன்னிற்
றுணிகர மாயொரு ஹறுபைப் பிடித்துக்
கோவென்ற கொள்கையின் வட்டம் - அந்தக
குடியிருப் பானதி லடியிருப்பான
பாவென்ற பார்வைப்ர காசந் - தன்னைப்
பார்த்துக்கொண் டார்ச்சனை செய்தாயோ தோழி - ஆமீன்

நாசூத்தில் நவில்பலக் கூத்தில் - இந்த
நாட்டங்கள் நாமென்று நாமல்ல வென்றும்
ஆசையைத் தந்துகொண் டேதான் - பின்னும்
அணுகிடும் ஜபறூத்தி லிறந்தாலும் பிராய்
நேசத் தெளிவையுங் காட்டி - நின்று
நேரான லாகூத் தறியவும்மைய
மாசால ரூபமெடுத்து - வரு
மாயப்ர சித்தாந்தங் கண்டாயோ தோழி - ஆமீன். கடு

பன்னிரண் டாமட் சரத்தில் - உள்ள
பரிவான முதலட்ச ரத்தைத் திருத்தி
மன்னிய வுள்ளைப் பிளந்தே - அங்கு
வாகிட்ட வேழுடுச் கானநற்கோட்டை
தன்னிற் சிங் காசனம் போட்டே - பர
சாகவு மெய்ப்ராண வடிவமு மாகத்
தென்னறை மூலைக்குள் ளாக - நின்ற
சித்திர மாயத்தைக் கண்டுகொள் மனமே - ஆமீன். க௬

ஆடுங் கடைத்தெரு வீதி - புலன்
ஐவேடர் கூடிய ஆசார வாசல்
மூடித் திறக்குமவ் வாசல் - என்று
மூப்பாகு முப்பத்தி ரண்டுறுப் புக்கும்
வேடிக்கை கொண்டாறு சாட்டி - இனி
மேலாரு மூச்சிக்கு நேரே கிழக்கே
கூடுப்ர தானிக்க வாசல் - வந்து
கூத்தாடு நேத்திரங் கண்டாயோ தோழி - ஆமீன். க௭

அண்டா ததையண்டிக் கொண்டால் - மீண்டு
மகலாது போகாது திருநட மாடிக்
கொண்டாடும் வதனக்கண் ணடி - யந்தக்
கோலத்தை மூவட்ட நடுவிற்கொண் டாடுங்
கண்டார்க்குத் தெரியுமிம் மாயம் - இதைக்
காணாத பேர்கட்கு வகைவகை யாக
விண்டாலுந் தெரியாதிம் மாயம் - என்று
மேலிட்ட விம்மாய மேலத்தெருவிற்
றெண்டான தெண்டடிவீட்டில் - நின்று
சோதித்த மூடியைக் கூடிக்கொள் மனமே - ஆமீன் க௮

ஆனஅலிபிரு லாமாய் - அவூ
தியத்து முஹமதத்து வாஹிதிய் யத்தாய்த்
தானகவெங்கும் அல் ஹறக்தாய் - நின்றுந்
தீர்த்தாக மீண்டுமெ பாத்தாகியென்றும்
ஊனக்க முடிவதி னூடே - இருந்
துள்ளறை யாசனம் போட்டுக்கொண் டேதான்
பானிய மூவட்டத் தோடே - யெட்டிப்
பார்த்தகண் ணடியைத் தொழுதக்கொள் மனமே - ஆமீ

# ஞானோதய பஞ்சகம்.

ஆலம்இன் சாலை படித்தே - தெரிக்
  தன்னதில் நாசூத்தின் கோலத்தைக் காட்டி.
ஆலம்அஜ்சாமின் கோலம் - பல
  வாகவ் மேபலக் கூத்தினிற் காட்டி
ஆலமி தாலினிற் பிராய் - அழ
  காகிய ஜமத்தை ஜபரூத்திற் காட்டி
ஆலம் அறுவாகில் லாகூத் - தெழும்
  அபரூபச் ரூமத்தைத்தொழுதுகொள்மனமே - ஆமீன். ௨௰

தாறுஞ் செடியும் படர்ந்த - பல
  சுற்றுமெத் தவுமான வற்ற வனக்கீ
டேறித் தெரிக்குடி யேறிக் - கொண்ட
  வெல்லையிலேயி மானெ னுந்தேறல்
ஊறிய மூலப் பழத்தின் - மூலைத்
  தொங்கிய அந்த ஹறுமி லெம்ப் ராணைச்
சூமத்து ரூபமெடுத்தே - நின்ற
  சுயவொரு பத்தையுங் கண்டாயோ தோழி - ஆமீன். ௨௧

ஈராறு வாசலும் விட்டே - கடந்
  திரேழுலகுங் கடந்ததற் கப்பால்
ஓரே முடிக்கடுக் காகச் - செறிந்
  தோங்கிய திரையைக் கடந்ததற் கப்பாற்
கூறிட்ட எழுபிக்காண - அந்தக்
  கோட்டைக்குள் ளேயிருந் தாண்மனை வாசல்
வேயிட்ட கருநெல்லித் தோப்பில் - நிழல்
  மேவிய சேத்திரங் கண்டாயோ நெஞ்சே - ஆமீன். ௨௨

சிற்றம்பூத் தென்றடர்ந் தோடி - முட்டுஞ்
  சேற்றுருக் காளையைத் தம்மால் வசக்கி
யூற்றெழும் வாய்குமிழ் காது - இவை
  யொக்க வடைத்ததிற் பிண்டம் பிளந்து
தோற்றிடு மங்கர்டி தன்னில் - என்றுஞ்
  சோடித்த கேளிக்கை நாடகச் சாலை
கோத்திடுங் கருவிந்தைக் கம்பந் - தன்னிற்
  கூத்தாடுஞ் சித்தாங்கன் கண்டாயோ தோழி - ஆமீன். ௨௩

உயுமற லுப்பு மடைக்கண் - டிறந்
தாலெடுத் தோடிய கான்மடைப் பாய்ச்சல்
வயலுமுண் டந்தவயலில் - என்றும்
வாய்ப்பான காரும் பிசானமு மொன்றாய்ப்
பயிரேறுஞ் செந்நெற் கதிரின் - செய்கைப்
பலன்களைக் களவாண்டு கொள்ளாமல் வண்ட
ஐவேடர் தம்மைத் துரத்தி - யருள்
ஆனந்தக் கும்மி யடித்தாயோ பெண்ணே - ஆமீன் ௨௪

இருவீடு வாசற்கு மேலே - முதல்
ஏகையிற் கூடவங் கேகிய வண்டக்
கரவ னடுக்களை மேலே - வழி
கால்நடை யாராதா ரத்ததின் மேலே
யுருவிய சேற்றாருக் கப்பால் - அந்த
ஆருக்கு நடுவான முடுக்கடிக் கடையில்
மருவிய மச்சி லொளித்தே - நின்ற
மாயப்ர சித்தாந்தங் கண்டாயோ தோழி - ஆமீன் ௨௫

கூவென்று நில்லடி பெண்ணே - என்றுங்
கூவுக்குள் ளேதான் குடியிருந் தாண்டி
கூவும்சம் கூனு மொன்றாகிக் - கொண்ட
கூவுக்கப் பாலிருப் பதென்று கேட்டால்
ஆவென்று சொல்லடி பெண்ணே - அந்த
ஆவுக்கு மாநுக்கத் தாகிய ஹுறுபு
ஆவென் றனைத்தும் படைத்தே - நின்ற
ஆவென்ற கிற்றுக்கண் டேதொழு பெண்ணே - ஆமீன் ௨௬

எல்லாமொத் திடஹறக்கத்த - தாக
இருக்குமெல் லாமொத்துக் கலப்பது வாக
இல்லாத தொன்றேனு மில்லை - அதை
என்றும் சுக்கூனென்றே ஷம்சுதாத் தாகச்
சொல்லப் படுமிந்தக் கூறாய் - உற்றுத்
தூண்டிய குறத்ஹதைக் காட்டுஞ் சிங்கார
வொல்லெழுத் தாமைப் பார்த்தே - நீதர்
ஹுறவுசெய் சற்றும்பின் வாங்காமல் மனமே - ஆமீன் ௨௭

# ஞானோதயபுஞ்சம்.

பாரும் சுக்கூனென்ற கோலம் - எல்லைப்
பாட்டிற்கும் பூவென்று சூதறு நெஞ்சே
பாரும் சுக்கூனென்ற கோலம் - எந்தப்
பகுப்பிலும் பற்றுப்பற் றுதிறை யொன்றும்
பாரும் சுக்கூனென்ற கோலம் - என்ற
பூழான காடது காலமே நத்திப்
பாருங் கருப்பொடு வித்தைப் - போட்டுப்
பயிராக்கிப் பலன்பெற வேணுமே நெஞ்சே - ஆமீன் ௨௮

காண்பதற் கிங்கொன்று மில்லை - யுன்னைக்
காண்பது மன்றியென் றக்கான சிந்தை
காண்பதென் றேசொல்ல வந்தீ - ரென்றுங்
கள்ள சுக்கூனுக்கு நீசுக்கூ ருறைல்
காண்பதென் றெப்பிடப் போமோ - வுன்னைக்
காண்பதுந் தன்வலிருக் தக்ஷபிகு நீயாய்க்
காண்பதென் றேழுடுக் கப்பால் - நின்று
காண்பித்த கீழ்றைக்கண் டறியவு மாச்சே - ஆமீன் ௨௯

சோற்றையு மேமெத்த வுண்டு - நீதான்
சும்ம கிடந்தே யுறங்கிச்சா காதே
பார்த்துக்கொள் நான்சொன்னேன் சொன்னேன் - இந்தப்
பாழான வுடம்பிற் கிடமுங் கொடாதே
மாற்றுற் றுறக்கத்தை மாற்றிக் - கொண்டு
வந்தசரீ அத்துக் கப்பல் தீர்க்கத்
தாற்றினில் விட்டே றக்கித்கத் - சுப்பி
யருண்மூத்து மகுரிபத் தென்றறி நெஞ்சே - ஆமீன் ௩௦

இல்லதைத் தான்விளக் காக்கி - யந்த
இல்லெனும் விளக்கில் சரீஅத்துத் திரிப்போட்
டொல்லுந் தரீக்கத்து நெய்விட் - டுற
வோங்கும் ஹக்கீக்கத் தனலைக் கொழுத்தி
வெல்லும் சுக்கூனென்ற காட்டில் - அந்த
விளக்கையும் வைத்துச் சுக்கூனென்ற கோலம்
வல்லமை கண்டடிக் காட்டி - நின்ற
மகுரிபத் தல்லாவைக் கண்டறி நெஞ்சே - ஆமீன் ௩௧

இல்லென்ற சொல்லட்ச ரத்தை - யுள்ளத்
தெய்த விருத்திக்கொண் டேசிக்கை நீக்கி
இல்லைவிட் டேயில்லிற் சேர்ந்து - கொள்ளும்
இயல்பலி பொன்றிரு லாயட்ச ரத்திற்
செல்லச் சுவாசப் புரவி - விட்டுச்
சேர நடத்திக்கொண் டேஷம்சு தாத்தாம்
ஒவ்லியி லேநடமாடப் - பட்ட
வொல்லியி லலிபிரு லாமொரு வேறயும்
டெல்ல வெளிச்சமூங் காட்டிக் - கொண்ட
வேடிக்கை கண்டுகொண் டாடிடு நெஞ்சே - ஆமீன். கஉ

கேட்குந் தொனிச்சித்த மெல்லா - மெங்கே
கேட்குதென்றேகேட் டாற்சொல்லும் பெண்ணே
தூட்கொள்ள மாட்டாது வந்தே - யந்தச்
சூத்ரசுக் கூன்சம்ப்ர தாயமிதொன்றே
கேட்கப்பட் டோருக்கும் மையர் - சொல்லிக்
கேட்கவு மேகெட்டிக் காரனீ யென்றே
பாழ்க்கெட நான்சொன்னேன் பெண்ணே - நபீர்
பார்த்திப னொற்குச் சுக்கூனென் றறிவாய் - ஆமீன் கங

ஆவென்ற கீற்றுக்குஞ் சஜதா - அர்த
ஆதலை யாமநடு வேமுடி வாக்கி
வாவென்ற கீற்றுக்குஞ் சஜதா - நிற்கும்
வாகிட்ட லிலைபட்ட கீற்றுக்குஞ் சஜதா
மூவென்ற ழக்கோல வட்டம் - என்ற
மூறைமைக்கு மடிவைத்த கீற்றுக்குஞ் சஜதா
கோவென்ற கீற்றுக்குஞ் சஜதா - எங்கள்
குறுஆன் முப்பதுமான கீற்றுக்குஞ் சஜதா - ஆமீன் கச

ஆமர்ந்து டில்லாகி யென்ற - தைக்தோ
டாறுக்கும் வகையிட்ட கீற்றுக்கும் சஜதா
ஆமந்து பில்லாகி யென்ப - தம்
நாம்நாம மென்றவக் கீற்றுக்கும் சஜதா
ஆமந்து பில்லாஹி மஹறு - அதற்
கத்தாட்சி போட்டவக் கீற்றுக்கும் சஜதா
ஆமந்து பில்லாஹி யென்ப - தியல்
பாகுபிப் படிக்குமீ மான்கொள்ள சஜதா - ஆமீன் கரு

முற்றத்தைத் தூற்றுத் தெளித்துக் - கொண்டு
 முட்டாக்குப் பெண்டுகள் நெற்களைப் போட்டு
முற்றவொ தூக்கித் துழாவ - நல்ல
 முற்றமென் பாரிந்த முற்றமு நீங்கும்
முற்றமொன் றுண்டுமேம் முற்றம் - வெறு
 முற்றமொட் டாதென்று மேடு வெட்டை
முற்றம் சுக்கூனென்ற முற்றம் - அந்த
 முற்றத்துக் கொலுப்பெண்ணைக் கூடிக்கொள் நெஞ்சே-ஆ

உம்மென்ற இல்லெனும் ஹறுபைச் - சந்தித்
 தொன்பது வாசலு மடைத்துப் பிடித்துக்
கம்பியன் றுருத்திக்கொண் டூதி - மூட்டுங்
 காற்றுற்று மூலத்தின் றூமம் வெடித்தாற்
சம்மதித் தேவந்து தோன்றும் - ஷம்சு
 தாத்தெனும் வீதியி லேகுன்கு தாத்தாய்த்
தம்மிய அல்ஹம்தி லொன்றாய் - நின்ற
 சோபன மென்றதை நீயறி நெஞ்சே-ஆமீன் ௯௭

அள்ளவு துள்ளவும் போகா - தம்
 தாகு மெறும்பி றயிப முதலாய்க்
கொள்ளவுங் கூத்துச் சமைந்து - நின்ற
 கூத்துக்குக் கூத்தெடுத் தாட்டுஞ்சி மாட்டி
விள்ளாவு மூளைக்கண் ணூட்டி - வந்து
 மேவிக்கொண் டாற்றெரி யும்மவள் வித்தை
துள்ளவு மேபுள்ளி போட்டுக் - கள்ளன்
 சோதித்த தோட்டியைத் தொழுதுகொள் மனமே-ஆமீன்.

தொத்திட வேலறு குற்ற - துளித்
 துளியெனத் தெளித்தாலு முதிரத்தி லுறுப்பாய்
அத்திட முற்றேயின் தாண - வென்றும்
 அஹதத்து முஹதத்தும் வாஹிதிய் யத்தும்
கத்தேகத் திடக்கத்திக் கத்திக் - குள்து
 கன்சன் மகுபியி னடையாளப் புள்ளி
வைத்தே குத்தினகுத்துக் குத்தாய் - வந்த
 வகைஅலி பிருலாமென் றதையறி நெஞ்சே - ஆமீன். ௯௬

இருமூச் சுழிந்றுள்ளே வாங்கி - மூச்சுற்
றெங்குபட்டதோவது கல்புமஜாசி
பவிவாம் கல்புமஜாசி - மன்னுய்
பாணிகொண் டுற்றதுக் குள்ளே கவிய்யாம்
குறியாம் கபிய்யன்ன தைத்தா - னுடுங்
குறிகளை யறிவிக்குங் கல்பு ஹக்கீக்கி
அறிவாய் நினைவினிற் கண்ட - சூறத்
தாகுமு ஷாஹிதா வென்றறி நெஞ்சே - ஆமீன். ௪௰

பிரான சூறத்தின் முத்தி - கண்ட
பிராகும் சூறத்துத் தானிற சூலென்
றுரவறிந்து கொண்டேநீ - யிதை
அஹதியத் தென்றறி உஹதியத் தூத்தான்
கூரொளி மூளையை பற்றி - நின்று
கொண்டுபோய்த் தேவுஹ தத்தையொன் றுங்கி
யோரிட்ட ஜனையும் சூறத் - தரு
ணுன்மை முஷாஹிதா வென்றறி நெஞ்சே - ஆமீன். ௪௧

ஹ்ராமீம் ஜுன்ஜின் காபு - முதற்
காண்பித்த வஸ்ஜாரக் கோட்டையின் வாசற்
றுமியல் சத்தமுங் கேளா - தூற்ற
தம்பட்ட படித்துக்கொண் டிருக்குமவ் வாசல்
காமிடல் முங்கவு நின்ற - குன்து
கன்சன் மகுபிபி னடையாளப் புள்ளி
ஷேமத்தைக் காட்டுமவ் வாசல் - அந்தச்
செப்பத்தைச்செப்பமென் றெப்பிக்கொள் மனமே-ஆமீ. ௪௨

றாஹென்ப தேயகக் கண்ணை - ஹுற்று
நோக்குதல் நோக்கலிற் காணும்சூ றத்ஸதை
யாகுமு ஷாஹிதா அனுகிப் - பார்ப்
பூய்நீமுஹப் பத்திலும் மனமாகிச்
சோகை ஹவாகிரு சென்னும் - நக்கை
சுட்டே யுடலேசுக் கால்வழி சேர்த்து
வாகினிப் படியேதீ தான்றைக் - கொண்டு
மகுருக்கை யணைத்தனு பவித்திடு நெஞ்சே - ஆமீன். ௪௩

செட்டமு நாட்டமு மொன்றாய் - நின்ற
  தேட்டமு நாட்டமு நல்லல்ல நீயாய்
நாட்டிற்குப் பட்டோலை வைத்த - வைத்த
  நாட்டிற்குப் பட்டோலை விரப்பட் டயத்துள்
ளாட்டிற்குப் புள்ளியுங் காட்டி - அஹ
  திய்யத்து மேலிட்ட மணிக்கோட்டை வாசல்
சிட்டென்று மேற்படி சொன்ன - அந்தச்
  சிட்டுப்பட் டயமிதைக் கண்டறி நெஞ்சே-ஆமீன் ௪௪

இப்படி நீசெய்யும் வித்தை - யிதை
  யெறிட்டுப் பார்க்கையால் நீயல்லா தொன்றுங்
கப்பு விரித்தது மில்லைக் - குன்து
  கன்சன் மஹூமபியா வடையாளப் புள்ளி
செப்பிட்ட செப்படி வித்தை - அஹ
  திய்யத்து முஹமத்தும் வாஹிதிய்யத்து
மொப்பிட்ட வொப்படி கணக்கைக் - காட்டு
  மாறைக்கண் ணாடியைத் [illegible]க்கொள்நெஞ்சே-ஆமீன். ௪௫

[illegible]ழகிய கல்பது தானே - பல
  ரூகமாய் நினைவுக ளெல்லாங் கூடந்த
நெடியோ னளவிற்பே ராசை - வைத்து
  நினைவுற்ற தேயந்த கல்பாமக் கல்பிற்
படிபா கிடும்றாகு பீறு - அற்றார்
  பார்க்கும் லிக்காவையும் றாகுபீறவும்
அடியா னினைவும் இசாரச் - செய்யா
  ஐயெனும் சூறத்த தாமடி பெண்ணே-ஆமீன் ௪௬

பிறிதிவு பப்பு நெருப்பாங் - காற்றும்
  மேணியிங் காண்கும் கொண்டெழுமுன் சரீரம்
உறிகநீ காலையிங் நான்கு - மன்றி
  யாகுஞ் சரீரம்வந் திடுமந்த வைவாற்
குறிதா னறிந்தனக் கோது - மந்தக்
  குருவல்லேல் குருவவ ரிஃதறி யாட்டால்
நெறியாங் கலைகளகற் றூஹு - மவர்
  திருவுட னென்றிற கூல்கபக் குனாத்தார்-ஆமீன். ௪௭

குருவே யெனக்குநீர் தந்த - அந்தக்
குருவே குருவவர் நீபார்ப்பை யென்று
கருவே கருவிந்து நாத - முற்ற
காட்சி பல்லோகன் ஞானடியின் வித்தை
மருவே மருவுக்கு மருவே - கொண்ட
மனத்தினு நற்கந்தந் தற்கந்தங் காட்டித்
திருவே திருவுக்குத் திருவே - காட்டித்
திறம்அலி பிருலாஹின் வகையறி நெஞ்சே-ஆமீன் ௨௮

ஆடுங் குளாக்களெல்லாம் - நம
தால நபியைக்கீரான் பாடுங் குலாக்கள்
கூடுஞ் ஹயாத்துமண் டலமாம் - சித்துச்
கூடிடும் நாஜுமண் டலமீது மண்டும்
ஆடியு மாலவனி யாகக் - கூடி
உனுசிக்கொண் டிருக்கையில் நாஹெறனினுயங்கி
பொடிமச் சித்தை ஹயாத்தப் - புல்லைப்
பூரித்த மருக்களைக் கூடிக்கொள் மனமே-ஆமீன் ௨௯

செப்பிடு மெய்களுக் கூசா - யுற்ற
சேர்ந்தாருப் பாளயத் தாருக்கு நடுவே
யப்பனு லவ்வையு மாக்க - கொண்டே
யாடுஞ்சித் தனுமுற்றவ் ஆருக்குக் கிழுக்கே
தப்பறை யென்றுஞ் சக்கனுஞ் - தப்ப
தாத்தென்னும் விதியி லேருன்கு தாத்தாய்
ஒப்பிடா அலிபிரு லாமாய்த் - தொழு
தோமென்று கும்பிக்க கும்பிக்க பெண்ணே ஆமீன் ௩௦

சளக்கட்டம் சளக்கட்ட மென்றே - சண்டை
சாடிக்கு வஜுவுற்றுப் பறையுமிக் காயல்
புளக்கட்டம் புளக்கட்ட மென்றே - செல்லுங்
காயபல் லோவிந்தக் காயத்தின் மேலே
கிளக்கிட்டு முளக்கிட்ட மூலே - யெந்தக்
கெளிப்புக்குங் கெளிப்பிட்ட வோஞ்காரவித்தை
விளக்கிட்டு வழுக்கிட்ட வாசு - லந்த
வேடிக்கைப் பயமானத் தெரிந்தாயோ நெஞ்சே-ஆமீன் ௩க

சோயங் காட்டும் மையம் - அஹத
நிய்யத்து மேலிட்ட நிழறை மையம்
உண்மையைக் காட்டிடும் மையம் - அந்த
ஆலமயுல் மோகக் காட்டிடு மையம்
ஆமிய லான சக்கூலக் - கொத்துற்
றுடுக் கடைத்தெரு வீதிக்கு மையக்
தாலெய்யு யாப்பில்லா ரூபக் - கண்டு
சந்தித்துக் கும்மி யடித்தாயோ பெண்ணே - ஆமீன் ருவ

செய்யொளி சிங்கமே தனத்தா - ரெங்கள்
தீன்தீன் முஹம்மது தங்களைப் போற்றிச்
செய்யிது சாதாத்தி யின்ற - எங்கள்
செய்யிது மசூது சாஹிபைப் போற்றி
வையகம் போற்றுமெமர்க்கே - ஷெய்காய்
மன்னுது மாலெப்பை சாஹிபைப்போற்றி
மெய்யென்று மெய்யைத்தி லொன்றாய் - நின்று
மேவின தொருஹூறு மென்றறி நெஞ்சே - ஆமீன். ருக

மெய்ஞ்ஞான ஆனந்தக்களிப்பு - முற்றிற்று.

ஷெய்கு பகீறுமெல்பை சாஹிபு அவர்கள்பேரில்

நாகூர் ஹமீதுப்புலவ ரவர்கள்பாடிய

எண்சீர்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வானிந்தப் படியெல்லையுஞ் சமைதாய் நின்ற
வான்பொருளை யுளமிருத்தி யாதலுஞ்சேர்
மோனைந்தக் காட்சிபுறும் பகீறு மெப்பை
முயன்றிமெய்ஞ் ஞானத்தின் முத்தி பெற்றே
கோனைந்தத் தன்சீர் தகவி கோடு
குன்குதாத் தெனுஞ்சிற்றின் கோவைத்துண்மை
யானந்தக் களிப்பாகச் சொல்லி மேன்மை
யடுத்திட்டார் - தன்னறிவு - தொகுத்திட்டாரே.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றஹீம்.

இஃது

நாகூர்

# ஷாகுல்ஹமீது நாயகம்பேரில் பிள்ளைத்தமிழ்.

## காப்புப்பருவம்.

120097

சீர்சேர்கமலச் செழுமாதர் தினம்வீற்றிருக்கு மலர்ப்படலைச்
செந்தேன்றுளிக்கும் புயச்சயிலத் திருமாவரவக் கடற்புனலூற்
றூர்சேர்கருமைக் குயினிழலா ரகுமத்திறசூல் கருப்புகல்விக்
கருமைப்புகல்வர் மரபில்வந்த அப்துல்காதிர் தமைக்காக்கப்
பார்சேர்க்ககனு மதியுடுவும்பதிக்கும் பதங்கனலைகடலும்
படைப்பாகரர்மற் றுயிரனைத்தும் பகுத்துவகுத்து மிகுத்தகனி
கூர்சேர்கருணை நலவளித்துக் கொண்டேவிடுத்தத் தனைவணங்கக்
குதறத்தினிலே மிதம்படைத்தசோமாதிறகுமானே. க

செந்தாதுலவும் பசும்பொகுட்டுத் தேனார்மடல்வட் டிலைக்கமலச்
செழுமாசனத்தி னமர்ந்த விரத்தினமதியேந் திசைவயங்கு
நந்தார்கழனித் தடவாவி நதிசூழ்ந்திலங்கும் வளநாகை
நகர்வாழ்வரிசை யசன்குத்தாசு நாதர்புகல்வர் தமைக்காக்கச்
சொந்தாதுருவைச் சுயசொரூபச் சீடரிலிருந்து தானமெனத்
தோன்றித்திரண்டு புகழ்க்கடங்காத் தோகைவடிவ மெடுத்தநல்ல
விந்தாரடியெக் கீன்மகத்தி லிருந்தே எழுபதாயிரமாண்
டிறைஞ்சிநபிமார் குலம்விளங்க விவனிப்புரக்கு மகுமூதே. உ

கடக்கும்பமதொப் பெனச்செருத்தல் கயவாய்ச்சிறுகட்கவின்மருப்பு
க், கருமைக்கவைக்கால்புனைத்தசங்கு கதிர்விட்டொளிர்த்த மணிவிலவெ
ன், மடக்குங்குமுத முகைமுறுக்கட் டலருந்தட வாவிகள்சூழு
மதில்சேர்புரிசை நாகைநகரனுக்கு மீரான் தமைக்காக்கக்
குடக்கும்வடக்குமடுத்தசெற்குங் குணக்குந்திசையெத் திசைகளெங்
குங், கோலவிழிக்கெண்ணாயிரமுங் குவிந்தேதகுடர்விட் டெறிக்கிருளை
மடக்குமல மன்னவர்ளமம் வழுத்துங்குருநந் நபியகிழ
மணமாம்புகலைக் கொடுத்தஅபூ பக்கரொனுக்சித்திக்கே, ௩

வே[illegible]று.

[illegible]டைசெழுமி யெதிர்பொருத
சிவணரனி கடலனைய ப[illegible]மை
செருணருயிர் பதறி[illegible]ழி-யத்தாகி-ய[illegible]-ரும்விசை-யச்சூரவேள்
திசைபுகுத-மிக்கான-உரக[illegible]
[illegible]கய கதிரினொளி கருகவிழி
இமிரப்விழ வெழுமு[illegible]ணரொரு
தெரிசனையி னிப[illegible]சிலைதயுமதி-யொப்பேற-கிருவியகு-ணப்போத
திமறையி-னட்பாகு-[illegible] (மா
[illegible]ணிய மூங்கிலிடை மொழிபகர
இவணரச ரடி[illegible]ல் வலியவொடு
ஒருதரை[illegible]கால-மெனொய்வணிக ஞக்கிய-வருளிமனை-மெய்ப்
முளைழுபுனா-இலை[illegible] (பாகவே
[illegible]ற விவண கிலும் ஒருகுரிசி லதிகநெறி
உரிமைபெ[illegible]பதி இடையதிற
யுடைய[illegible]த்தாபி-லுபயசம-லத்தாவெ-ஆடல்சிரசில்-வைத்தோத
லுபதிபுனு-[illegible] (வே
[illegible]ிமுழு தொருகுடையி லரசுகில கடவிமறை
அவ[illegible]முத்தி வு மழைபொழிய
[illegible]லனைப்பார-நகைபெருக-நற்றீனி-னருள்வளர-விப்பூவிலே
மரிமுகி[illegible]
அனுகியிரு ளனையபுழி ரசவைவ ரியிலெழுகல்
அருணவொள நபிமாபி
[illegible]ி நவி-விளக்காக-வருமகுட-ரத்னாதி ஆசருசி-பைப்பாவகயார்
வன[illegible]
மவுனமுறை தெரிவரிசை பெறுமூரல ரினியதரை
மலரடியி லுகள்மணலே
மசமிடகண்-ணுக்கூடு-விழுபொழு திழுக்கோடி - விழியொழிர-வைத்
(தேயுமே
வரிசையுடை யவரினிமை புமலிநுவ ரெழுவரின்
வணபிரிமை கொள ஆருளி
மகிழ்மபு-துல்க்காதி-நவர்தமைமகிணைத்தாகு-மதுரகவி-யைப்பாட[illegible]

வே று.

உரியமிசைவிட மைறுமொருகேசர
முறவுறைதூவிய நாவினரெங்கடன்
உடையவராப்நமி மகவிருபோரையு
முறமணயார்மனை வாளரிகப்புக
முளபெரியோர்களு முளசிறியோர்களு
முளரகிழ்சேகர வாபசவுக்கர

ரொருபயல்காதினை வழியவணுகமின்
னுலவதுபோலறி வாசவுவந்திவை
புரிவுறநீயென இருபுழைநேர்வரு
புகழுனுவாயென வோதியிதங்கொடு
புகலுரையாலவ னுளமதிதேறிய
புரையுடையோரிவ னுசகடந்தவர்
புயதரவானவர் தலைவர்களைவல்செய்
புவிமிசைசேர்வுற வாயெழுகின்றவர்
புனலுறைமேவாரு ளரசதுயானுயர்
புகழிருதாளினை மேவியிறைஞ்சுதும்
அதிவளையேயுரு மணிதனைவாலிப
ரதிகவனுலழி விசிதிமிர்க்கெரி
அதிர்பொழுதார்பொழி லுறிசினைவதூர்வொடும்
அலர்மழைதூவின முரல்விரிக்கவி
யடவியில்மாபல கனிசிலமீருதையி
லலைமலைவாகவு மோடிவருண்டெழு
அனமயலேகலு மறுபடிமீன்வொடே
மணிமலர்மாழிகை மீதுபுகுந்தது
மருவுதலாடவர் மிகநணிகெடாவி
வரவிழையர்டவி லாடியபங்கென
வடிவெழமாநதி யரிவையுமாமறை
வனைகரமாலன மாகியளித்துக
வலியெறியோவிசை கொளுநிதயானமும்
வளர்தருமேடைகள் சூழவளர்த்தியல்.
வளமணிநாகைநன் னகர்தனைமேவிட
வருகயினோர்கவி மாலைவிளக்கவே. ௫

வேறு.

டியதிர வெங்கட் பணியினது மகுட்ப்
பிணையுமுடி நெளிக்கவாரிப்
படிதிரையினடியள நெழுக்ககன முகடதடை
படமுகில் தெறித்தோடவே
ரியவரைகிடுகிடென அடையலர்கள் செடிகளிடி
படபடலை தூளெழுந்தே

பருதியெழுவழிதனை மறைக்குமிருகூரிருள்
பறக்கவுடர் குரல்தொனித்த
வெடியதிலு மண்டபகி ரண்டமூ தண்டமதின்
சிமலோக்க நடுநடுங்க
விருதுசொலி யெதிர்பொருதா மருடாசலத்தலைவர்
மெலிவுறக் கெடிகலங்க
மேலினுங்காலினுங் கையினும்மூக்கினும்
விரிந்திடச் சோரிகொட்ட
விகடகடமிகுபுரவி துல்துலைநடாத்திவரு
வேந்தரலி யைப்பரவுவாம்
சடிலமுறை களறவருள் செய்யுமிற சூல்நபி
தவத்தினி லுதித்தசெல்வி
தனையர்மா டனுகிகெறி வளரவரு குரிசில்கல
சையிதுஹுசன் குத்தூசு
தருமச்சுதந்த்ர புரந்தரதுரந்தரீக
சையிது ஹமீதுமீரான்
தசையரிவைவடிவுகொள நியமமிக வருஷெய்கு
ஷாகுல் ஹமீதுமீரான்
கடலினைக் கரையுறு திரும்பூ மரத்தையிக்
கரைமிசை வருத்துமீரான்
கருணைதரும் யூசுபைக் காணவெதிர்செல்லென்று
கத்தனுரை சொற்றமீரான்
கமலப் பதத்தைத் துதித்தவரை நன்னிக்
கருத்தைத் திருத்துமீரான்
காதிறுமீரான் தமது மாலைப்பிரபந்தமியல்
சண்டெனக் கருள்புரியவே.

மக்கத்திலேநின்று மதினத்திலேசென்று
மறைமிக்க தீனிறுவியே
மகிழுமிறசூல்நபி முகம்மது தமக்கிருகண்
மணியா யுதித்தபேரர்
வல்லவன் கட்டளை யெனக்கருவி யாலமிலுன்
மனமிசைய உயிர்விட்டோர்,
வானவர் மணித்தொட்டில் தனையசைச் சக்குவனை
மலர்விழி குவிந்தவடிவார்

ஆக்குத் துறங்கிவளர் பிக்கசத்காரமுள
அம்பணிப் பொற்புபத்தார்
ஆல்லுடைக் குபிரினைக் கடவிவெற் றியின்முரச
மதிரிடத் தனிகடாத்தி
யரிநிலவொக்கும் புரிக்கோட்டுவாரணமு-
மடர்புரவி புடைசூழவே
அமரிட்ட அடையலர்கள் மணிமுடி துணிக்கவரும்
அசனுசைனையும் புகழுவாம்
ஊக்கனறு ஷேறிங் குயித்துவசனத்தைவிடி.
காலையி லெழுந்துசொற்ற
காரணப் பொருளுடைய வேதாம்பரசுற்ற
காலங் கடந்தபின்பு
கதிவளரு நாலுமது ஓறுபுலிமா மாணவர்கள்
காலங் கடந்தபின்பு
கனபுதுமை விழையுமுவுலி யித்திலுதிக்கின்ற
காலங் கடந்தபின்பு
திக்கபிவெண்டக் குபிர்க்கா டறுத்தவெகு
சந்தோஷமா யெழுந்து
தருமநெறிதினைப் புரந்திந்த ஹிந்துஸ்தான்
கன்னிமேல பயிர்செய்யவே
தவம்வளர நவம்வளர இலதநவூ னுசைத்
தலத்திலுக் கரசியற்றித்
தாவிப்புரக்கவரு மெங்களட் துல்க் காதிர்
சாஹிபைக் காக்கவென்றே.

௭

கம்பகும்பக்கரட தடவிகட புழைநெடுங்
கைமலையி னணிநெருங்கக்
கடல்மலைகலங்கப் பணிக்கண் பிதுங்கவெழு
கவனவாம் பரிநெருங்கக்
காலாணெருங்கக் கொடிஞசித்தடத்தேர்
கதித்தமற் றணிநெருங்கக்
காவிக்கொடிப்படை நெருங்க அம்முரசமதிர்
கம்பலைஇடிக் கொப்பநீள்
அம்பரந்துளை வெதிர்த்தபருவார்களுட
லாவிகக்கனிற் செல்லவே

பணிமுடிச்சிமாறாத் தழிபட்டகாயத்தை
அவ்வைகளி கங்கராய
மனுஙிபுனைவார்பொருந்த முதன்முதற்சொர்க்காக
சனுகுசா லோகிமறுவ
சவர்களையுமிகைமிழி ஞம்பத்திராயிரம்
சருபிகளையும் புகழுவாம்
தம்பமெனவந்தடைந் தோரைரட்சிக்கும்வெகு
சற்புருட லோருவாறோர்
சங்குமசம்பன்ன மன்னரைவிதிவழி
தழைக்கப் பிறந்தபெரியோர்
தருமநெறிதவறும விக்காலம்வேதநெறி
தன்னைப் புரக்கவந்தோர்
தரணிமுழுதெங்கெங்கு மொருகுடையிலாளத்
தவம்பெற் றெழுந்தமுநியோர்
பம்புவாருதியிற் கடிந்தநகருனிபொடு
பங்கயஞ் சொல்லிமுங்கிப்
பாசமுடனைந்துள அலாமதிதைவர்தங்கள்
பாதகளை யங்கமிழ்த்தி
பக்கித்திடவொன்று கைரயேதிரானைப்
பதிக்காசி யந்துப்வள்ளாற்
பார்த்தாஷாசெய்கட்துல் காதிரபிரான்தமது
பாமாலை கொண்டருளவே.

அடியினிவிருந்துலகை தாவாத்வெந்திடத
அம்புவிமி வெதுனித்தே
அன்புவைத்தாவனிமுன் னாமுமங்காலைக்க
வாகப்புரிந் தென்னிறே
அங்கலித்காணைநூற் றாருமொழிந்துகடலி
மப்பகமு மப்புவைபுதா
பாகந்கனாய்தழுது மதிமான் னுராயினை
பழுசெறுவு னக்களித்தே
முடிக்கற்பிகாட்டு மாயனைக்கோலமு
முடித்துனா மதிழ்ந்திமான்
முர்ந்தினி லிதித்கதி பொற்பாதமதுவினிய
முடிச்சிரசில் வைத்தோமாள்

முப்புவியுமொருகுடையி லாலத்தாம்பெற்ற
முகநற்புகழ்க் கிருபையார்
மூச்சுடரிலொன்றான ஷெய்கப்துல்க்காதிறு
முஹியித்தினைப் பரவுவாம்
கடிமுகைமுறுக்கட் டவிழ்ந்துநறையுண்டுமறு
கால்வண்டுபண்மிழற்றக்
கரையினிற்செவிமடுத் தறுகைக்குகட்டாது
கனைவயடிக்கருமைநிற்றுங்
கங்கதிற்குடவளை யுகுத்தமணியைக்குளற்
காலன்னமென்றுமன்றே
கனமணிச்சிறகணைத் தணிமடப்பாகமிரு
கண்ணுறத்திலங்குமென்று
கொடியிடைக்கயல்விழிக் குனிசிலைப்புருவமைக்
குழலணிஹுளச்சியருளங்
கொண்டாடிநின்றுடி விண்டாசைகொண்டுகளி
கூருமலைவாயுரந்தே
குவியுநன்னாட்டுப் பதிக்காகசெயவக்து
குருமுறை நடாத்துவள்ளல்
கோவானசெய்குஷா குல்ஹமீதானவென்
கோமான் றனைப்பாடவே. ௯

கருவந்தமலர்ந்த மணியந்தமானசிங்
காசனத்தவிசினடுவே
ஹாமீன்ஜயின்சீனு காபுமுதல்ஹருபினியல்
காணல் ஷிபத்தெடுத்தே
அன்னடமாடிப் பசுங்கிள்ளைவடிவான
காரணச் சுயசொரூபமெய்
கண்டுஹக்கென்றுநின் றென்றுமுன்னன்புகொடு
களைகொண் டிறைஞ்சும்வள்ளல்
மருபந்தார்ச்சுந் தரக்கந்தரப்புய
விஜீகரச்சுலுது ஹாப்பாய்
மகிழவருள்பெருகவரு குருபுத்ரரெங்களுத்
மான்லெப்பை சாஹிபானோர்
மலரிகழுமடிபரவு மதிபரெனக் கெங்காளு
மாமறைக் கல்விசொற்றோர்

வாசம்சேசாம கோஜாமுஹம்மதை
மனத்தினிலிருத்தி நினைவாம்
பொருளந்த மிசைதங்கு மாசுகவி மதுரகவி
புகழ்சித்ர விஸ்தாரமும்
புவியின்சை யுறைக்குங் கவிப்புலவ ருள்ளம்
பொருந்தச் சினத்திடாமற்
பொறுமைவைத் தரவணைத் தகமனத் தூடன்பு
பூணத்திருத்தியென்மேற்
புரிவுகொண்டடிமையின் வடிமையிவ ஞெமென்று
புத்தியி லிருத்துமயினோர்
தெருவந்த முலவப் பளீரிட்டபலமணிச்
சிகரகோ புரமிலங்கத்
திக்கரசர்கொண்டாடி யெக்காலமுநிதித்
திறைகட்டி யின்டிறைஞ்சிச்
சிறுபிறைப் பழிநுதற் றுவரிதழ்க் கடமவீர்
தெள்ளித் திலங்கொழித்தே
சித்தில்வீழைபாடுந் திருச்செல்வன்றனை
செய்யிறையப்புகழு வாமே.

பிள்ளைத்தமிழ் காப்புப்பருவ - முற்றிற்று.

# செங்கீரைப் பருவம்.

வானுடுமேனுடு பூனுடுதானுட மாமழலை மொழியாடவே
மாதாதனத்தமுது கொண்டமதுவாசமணி வாயிதழினூடாடவே
மீனுநிகரான்லொடுமு மிரவிவந்தடிபரவ மிளிருமணிமுத்துமாலை
விந்தைப்பொருப்பில்விழு மருவியெனவுத்தரீக மிக்கபுயமூடாடவே
காணுமேடலர்மகை முறுக்கட்டவிழ்த்துவிரி கமலச்செழுந்தாளிலே
கதிர்மணிகள்கிண்கிணிகள்பொற்றண்டையாவுங்கணீலென்றொலித்
டவே, நீடூதிமீனுர்கள் கொண்டாடவருகுரிசில் செங்கீரையாடி
ளே, செய்த்ஷாகுல்ஹமீ தானமகுடேசரே செங்கீரையாடியருளே

தங்கப்பசும்பட் டுடுத்திவடவாலிலைத் தளிர்வயின்வசியாரவே
தண்மணிச்சர்கெடுத் தமுதினையருத்திமெய்த் தாயகமகிழ்ச்சிகூரப்
புங்கமதிமுத்தொளி யெனத்திருமுகத்திடை புரிந்ததுறுவெயர்வாடவே
பொன்னம்பர்கஸ்தூரி புனுகழுவி வெச்சிட்ட பூமணத் தெண்ணெய்
தோய்ந்தே, கொங்குரலனிச்சுடிகை யாடத்தவக்கிருபைகொண்டுபொ
ற்றெருட்டிலாடக், குருநெறிகள்பார்த்தெவரு மனுதினமுமேமிகக்குவி
ந்துகைகொட்டியாடத், திங்களைத்தேய்த்தோங்கு புருவமார்பாலக செ
ங்கீரையாடியருளே, செய்குஷாகுல்ஹமீ தானமகுடேசரே செங்கீரை
(யாடியருளே.

சத்தகாயத்திலுறு வாளைகுதிபாயத் தருக்குடக் கனியுடைந்தே
ஜலஜலெனதிரைதிகழ வோடிந்ததும்பித் தடக்குட்டமிசைநிரப்பிக்
கொத்தலர்வயற்கவர் முரம்படிக்கட்டமது கொக்கரைக்கடிவழுக்குக்
குமுறிப்புலம்பித் தவழ்ந்தலைபின்மெல்லக் குலாவுநாகைக்கதிபரே
ந்தினிதுதித்ததரு மக்குரிசிலாலபரி முஸ்தபாஜத்திலுருவாய்
முதிருமுஹியித்தீன் தமக்கிருகண்மணியான முகதேற்றிருப்பேரரே
ந்தமகிழப்புவியில் வந்ததுணமேருவே செங்கீரையாடியருளே
சய்குஷாகுல்ஹமீ தானமகுடேசரே செங்கீரையாடியருளே. ௩

ங்கமெனவெள்ளப்பெருந்துளியெறிந்தலைபாட்டுமுத்திக்கொழுந்து
விபினதொற்றையா ளிந்தடந்தேருளிப் பொருந்தத்தறித்தடர்ந்த
தலைப்பருகிமுழு துந்துடைத்தென்றாழ்க்கதிர்க்கரம்விரித்தெழுந்த
ரியிறங்கிப் பதந்தொழுதஇறகுல் ஹபீபு நபிகொண்டாடவே
ளருமைத்திடப் பேரர்முஹியித்தீ னுவந்தன்புகொண்டாடவே
புண்மணிச்சின்னிவிர லமுதுறுஞ்சிக்குரா லுறுத்தாதழாதுகொஞ்சிச்
செங்குவளைபன்னவிழி யந்தமயமாடநீர் செங்கீரையாடியருளே
செய்குஷாகுல்ஹமீ தானமகுடேசரே செங்கீரையாடியருளே, ௪

டுமதிதயங்கிக் கொளும்புகையின்மாமலையி னுச்சியிலிருக்குமங்கா
நறுநாலுவகையான ததிலொன்றுஹதீதியா வுரைசொல்லரசவாதமாம்
படல்வித்தைமாயத் தொழிற்சம்பிரதாயம்விழை யாடுவதுசிமியாவா
ளிகூரம்னமீ துதிக்கின்றதினைவின்ன தாமென்றதேகிமியா
விமிசைவடிவுள்ள கூடுவிட்டுக்கூடு புகுதுமதுறீமியாவாம்
துமையிதுவிழையவும்பார்த்தோர்களுக்கும்பொருந்தஜயம்படை
க,. கிடமுண்டபுகழரசு வருநாகைவளர்குரிசில் செங்கீரையாடிய
ளே,. செய்குஷாகுல்ஹமீ தானமகுடேசரே செங்கீரையாடியருளே.

## வேறு.

பூவிதழ் சிரடி யாடப் பூழ்தி புதைந்தே கன்றுமற்
பூரிய மாநகர்மாமக வீரவர் பொன்போலர் தரதான்
மேவினர் பாரொலி மார்ள் சலாமது விண்டா ரிங்காபார்
மீவெளியானவ ரேகிவளைந்து மிகுந்தேகொண்டாடக்
கூவினி லேவரு நாயகமேகவி கொண்டே நந்தான
கோவெளி யாகிட வேதயவான ஞானஞ்சே ருங்கோவே
சேயிழை மார்மையல் நீங்கு சிரோமணி செங்கோ செங்கீரை
தென்னுத் தமநற்பிள்ளைக்கனியே செங்கோ செங்கீரை.

மன்றல் திகழ்ந்த நகர்த்தெருவிற்கதிர் மாடச்சூ ழியின்மேல்
மடுவிற் பழனக் கவரிற் றெறிபொறி வரியலவன்சேரத்
தூன்றுமழைக் குளிராலுடலஞ்சித் தொடரும்புளி னத்தினிலே
துளித்தத் தொடும்வந் தங்யன் மகிழ்ந்தே சுகமே விடவிருக்குங்
குன்றென வந்து முகிற்குலமானது கொழுகி மனுருவிற்
சுடனக் குடவளை மணியை யுகுக்திக்குலவ மகிழ்ந்தேகிச்
சென்று முழங்கிய நாகைக் கதிபதிசெங்கோ செங்கீரை
திரைசெறி மூதசலராசிபுரந்தவ செங்கோ செங்கீரை.

வங்கர் கலிங்கர்மதங்கர்கள் கொங்கர்மராடர்கள் சீனர்களும்
வடகர்கள் குடகர்கள் நிடகர்கள் திசைசேர் மறுமன் னியரெல்லா
காங்கி நெருங்க மிகுந்தலைவீசிய கலைவா ருதிபோலே
கனகப்பொருளைத் திறையது கட்டிக்கருதுங் தவதிதியே
தூங்க முறுங்கருணைக்கிருபாகரசீமுகப் பிரசங்கா
துன்றியவெங்குபி ராளமொடுங்கச் சுருதிமன்னெறிநடவிச்
சிங்க மெனப்புகழ் கொண்டமனோகர செங்கோசெங்கீரை
தென்னூர் தமநற் பிள்ளைக்கனியே செங்கோ செங்கீரை.

பாகில்லைக்கரம் வீசி முழக்கிய பள்ளமிகத்தாவாய்ப்
பாரப்பயமுமிகுந்த கடற்குளே பங்கப் பகுமுரவோர்
தாக முறத்திரு நாமம்வழுத்திற் தயவிற் றலகாணி
தன்னையனுப்பிச் சிதையுமரக்கலந் தன்னையழைத்தேநே
ராகயி லொல்லு மலச்குகர் வந்து வணங்குமலர்ப்பாதா
வந்தனை செய்பவ ருக்குறவாகிய மன்னுபொன்னகர்போ
லாகும் விளங்கிய நாகை புரந்தவ ஆடுக செங்கீரை
அப்துல்க்காதிறு மீறான்சாஹிபே ஆடுக செங்கீரை.

வேறு.

ஆடுமைங் கதிவலச் சாரிமுதலான மைப்பயிற்றி
    னுடுப்பென் கவினவாசை
யதிர்குரற் குருவழிக் திருமுகச் சித்திரத்
    தாடலம் பரிவிடுத்தே
பட்டிடா ரொட்டைகா வுற்றமமுதலைப்புக்கு
    முனைதை வித்திர்க்கமருவா
ரலழிமதி மலங்கிக் கலக்கிமொழி வாரமர்க
    ளம்பிடுங் கொனியுமெங்கே
கூடருமிவு ளிக்குளொழு முக்கிரமியங் கேயெங்கள்
    றம்மையங் தொடையமெங்கே
கடர்மணிக் கடகமுங் கவசமும் மவுளியுஞ்
    சுரிகையிவை தாமுமெங்கே
குழப் பராக்குப் பராக்கென்று கட்டியஞ்
    சொன்னவத்த வெவரெங்கே
சூரிய னெழுக்கப் புதத்தனை ளழுப்பித்
    துளக்குமப் படைகளெங்கே
கடருமொலி வாணமுக டதிரக்கடாவுமெக்
    காளமுங் மூரகமெங்கே
கருதியமர் செயவந்த துணிவுமெங் கேயெங்கள்
    கடர்க்கோட விடமுமெங்கே
கானமோ மலைகளோ கடலதோ வெனநின்று
    கருதலர் தனித் தனியதாய்க்
கன்றிப் புலம்பிப் பணிந்துகெஞ் சப்பொருத
    காவலனெ னினிவெர்கரே
திடமறிய வேனுலிமன் னெருவிடலை சிங்கிதனுக்
    தேசத் திருந்துவந்தே
சேமித் திருக்குமச் செய்திகண் டவனுடைய
    செழுஞ்சட்டை யுற்றகம்மைச்
செங்கரங் கொண்டிரட் டிம்பொழுது முங்களிகள்
    சிந்துமர மாக்கினைத்தோய்
செப்பவ னுவாவிச் செழிக்குநா கூரரசே
    செங்கீரையாடி யருளே
செகதலமு முயர்கனுை மகிழவரு மதியதிடே
    செங்கீரை யாடியருளே. ௰

பிள்ளைத்தமிழ் செங்கீரைப்பருவ - முற்றிற்று.

———(*)———

# தாலப்பருவம்.

விடைவைப் பணமைக் கருந்தலைதீ வெங்கட் கவைநா துளைபெயிற்ற
மிருகம் மணிச்செஞ் சூட்டுடைய மிக்கமகுட மிசைதரித்த
புடவிக்கரசு செயப்பிறந்த புதுமை தனைக்கண் டிவணோரும்
புகழும்மறுபுத் திசையோரும் பொருப்பி னுறைந்த பெரியோரு
மடல்மைக்ககனத் தலத்தோரு மதற்கப் புறத்தி னுளோரு
மறையும் மிவர்கள் மெலிவுசொல்லி யந்தார் இந்தா வந்தார்பார்
இடையைப் பொருளைப்பரவிவந்த செல்வா தாலோ தாலேலோ
செய்யி தொலியே கண்மணியே ஷெய்கே தாலோ தாலேலோ.

நரைக்குங் குழலின் விருத்தைதனையுமுன் னொளிக்கமல வடிவமெழ
நடந்து நபியும் யார்களுமுன் னவனைப்புதுமை விளக்கிப்பின்னே
இரைக்கும்புடவி தனினுதிக்குமெங்கள் மூஹியித்தீனும்மை
யிருமைப் புதல்வ ரெனக்கனவி லியம்பத் துணிந்து வந்தீர்காண்
குரைக்கும்பரவை யலைமணியே கொழிக்குங் கிலுறு நபியுமக்குக்
குறித்தாணிறைவ னிவடமென்றே குயிற்றும் வரிசை நாகைநகர்
தரைக்கும்விணுக்குந் தலைமைசெய்யுந் தலைவாதாலோ தாலேலே
சையிதுசன்குத் தாசுபெற்ற தலைவா தாலோ தாலேலோ.

வீட்டிற்றவழும் பருவமதில்வெளியிற் றவழ்ந்து ரவியொளிவை
விரைந்து கரங்கொண் டேபிடிக்கும் விந்தைப்பருவ மலத்துணிவை
மாட்டிற் செறியு மவரதிந்தா லம்புபடுங்கட் கடையுமெய்யும்
வருந்திவளர்க்கும் பாட்டிகண்டால் மனதுசயிக்க மாட்டார்காண்
தேட்டும்படிவர் துதித்தஎங்கள் செல்வப்புதல்வ மூலையமுது
செழிக்கக்குடித்தாயினித்தொட்டிலிற்சிறக்கத் துயின்று முழிப்பா
நாட்டிற்புகழுநாகைநகர் நாதா தாலோ தாலேலோ
நந்தும் விடைக்கே யுயிர்மீட்டு நதிபா தாலோ தாலேலோ.

கோலங்கொண்டு செருக்குருத்திக் குருக்காரத்தன் குத்தியது
குழுறித் தளிர்விட் டிலைதளிர்த்துக் கொழுந்துசரித்துப் பூங்கா
யோலங்கிகழு நரைதுய்ப்ப வுல்லப்பழுத்த கனிபதித்தே
யுலகோருந் தத்தகைமைபெற்றிவ் வுலகிற்பிறந்த பெரியோர்க

ஆலம்மதனை யமுதாகொண்ட அருமதிறசூல் கிளைக்குரிமை
யானவிளக்கே அசன்குத்தூ சன்பர்மகவே பொன்மகவே
தாலம்புகழு நாகைநகர்த் தலைவா தாலோ தாலேலோ
சந்தங்கமழும் புயத்துடைய தலைவா தாலோ தாலேலோ. ௪

கண்ணின்மணியே செம்மணியே கலைவாருதியேசாருதியே
கவனப்பொருளே தரும்பொருளே கனமாமதியே சம்மதியே
மண்ணைப்புரக்கும் புரவலரே வானோர்நமக்கும் வல்லவரே
வீலுமைமிகவே விளைவிக்க வந்தகுணமே நயகுணமே
எண்ணிக்கலியா லுளம்வருந்தி யிடைவோர் களுக்குமென்றனக்கு
மிரங்கிக் கிருபை செயத்தயவுற் றிணங்குங் குருவேவளத்தருவே
தண்ணத் தடஞ்சூழ் நாகைநகர்த் தலைவா தாலோ தாலேலோ
சந்தங்கமழும் புயத்துடைய தலைவா தாலோ தாலேலோ. ௫

வேறு.

வனுக நாசியி லேபுகு நீள்கொசு காலே நோவாலே
னுதிப போதக மேமகிழ் வாயன வூசே தாமாதி
கில மேலழ காயெழநோருள் வாரே மாமேரே
தவ ராமிற சூல்நயி னூர்கிளை வாழ்வேபூவாழ்வே
ணமைமாநிதி யானன மாமதி தாயா மாநேயா
ாமறுகோமக வேதபராபர மாநோரானோரே
தானவ னீதிவிடாதம னோகர தாலோ தாலேலோ
தாரணி சேர்பல சாதிகளையக தாலோ தாலேலோ. ௬

மைையுல கவர்களு மிசைய வணங்கிய மூமீ னுனீர் கான்
துமறை யவர்களி லறிவுற வருமுது மானீ ராமேகாண்
மையருள்செயுமன வுமையினை பவர்களுமீ டேறும்ராக
ணமதரசென கினைகினைவது புரியா ரீடேறுமேரகான்
ணைமசெறி புவனமி லெழுமதிகடவிய மொழுமேனமே
முநறை தருமல ரணியமே மேரேநிருமனைமாமேரே
ணிய மணிமுடி யரசர்களதிபதி தாலோ தாலேலோ
நபிமர்பினில் வருமொலி யானவ தாலோ தாலேலோ. ௭

நமைபெற வமதுபுக முணுகிமிக வாரோபாடாரே
லெமெழுமுகிலுறும அடியில்விழல் யாரார் பாராதார்

மருநயன விரவிமிசை மடியிலெழவாராய் வாடாதோர்
மதியினெழில் வதனமுகு துளிகள் தர வாவாவாவாநீ
யுரிமையொடு தலைமையிலே பெருமதலையோ கோமானேகோவே
யுவரியுளி லக்லவுரை செயும்வலுமை யோரே தீரேரே
தருமநெறிமரபுதுறை ஷிகள்திலக தாலோ தாலேலோ
சலதியலே மணிமெறியு நகரரச தாலோ தாலேலோ. ௮

மஞ்சரி குலவிய மன்றலை மேமிசெறி வாமா மாமோமா
வண்பொன்னணிநகர் தன்னிடை மங்கள மானூர்ச் சேர்வோரே
குஞ்சர மணிசெறி தண்டிகை மேலுறு கோமானுனேரே
கும்பிபி லெரிபடு தொண்டரை யாளுவிர் கீர்க்க மூனாகேர்
மிஞ்செரி பரிபுர முங்தொனியோடே மேலே வீழ்வாழ்சீ
மென்கனி நகையிதழ் தந்திட வாய்சினுதேபேரேறே
சஞ்சரி கம்முரல் செக்தொடை மார்பா தாலோ தாலேலோ
சம்ப்ரம மறையருள் சங்க்ரம கோவே தாலோ தாலேலோ. ௬

வேறு

காளச்செழுமுள் ளரையுடுத்திக் களமார்மடல்வட் டிலைப்பசுந்தா
கமலாசனத்தின் னுயின்றகுளற் கான்மென் சிறைப்பெட் டனக்
கூனப்பிடரின் குடவளைகள் குமுறிப்புலம்பிக் குடிவாங்கக் [ க்
குலவுங்கதலிக் கனிசிதறக் கொழுமுட்பனசப் பழம்பிதிர்ந்து
பீனச்சுளைகள் தடத்தில்வீழப் பேழ்வாய் வாளைப்பெருஞ் செருந்தற்
பெரிய முலைக்கண் டிறந்தமுதம் பெருக மூச்சிட் டுழக்கவிரால்
மீனுட்டேக்கு மானநகர் வேந்தே தாலோ தாலேலோ
மிக்க அவலியாக்கள் கொளு மீருன் தாலோ தாலேலோ.

பிள்ளைத்தமிழ் தாலப்பருவ - முற்றிற்று.

# சப்பாணிப்பருவம்.

பருவயிர ராசிகள் செறிந்தமணி மாளிகை
　　பரம்பிப் பதிந்தையாற்
பச்சைப் பருப்பதப் புயமதுகுலுங்காப்
　　பனிப்பிறையி னுதல்கசிந்தே
மருவிய குறுந்துளி வியர்ப்பெடுத் தம்பகம்
　　வார்கடை கதித்திடாமல்
வச்சிரச் சுட்டியசை யாமலே கரகமல
　　மலர்விரல் சிவப்புறும
லரவின்மணி நடுவிற் குயிற்றுகைக் கடகவளை
　　யம்மொலி தொனித்திடாமல்
அளவுக் கடங்காத அழகைத் தருஞ்சித்திர
　　வரைவடந் துன்னிடாமற்
றருவள மணங்குலவு நாகைநகர்க் கதிபரே
　　சப்பாணி கொட்டியருளே
சாஹிபு முஹியித்தீன் சொற்குரிய பேரரே
　　சப்பாணி கொட்டி யருளே. க

குலவங்கி ஷத்திலுள பெரியோர்கள் சிறியோர்கள்
　　கொண்டாவ லங்கொட்டியே
கொஞ்சிக் கரங்கொண்டு மித்தகையகொட்டெனக்
　　கொழுகிக்கரங் கொட்டவே
பெலமுலவு ககனமுகில் கைகொட்டலைக்கண்டு
　　பிரசமுர சங்கொட்டவே
நகநக ரப்பதி மடந்தயர்கள் சொல்லது
　　பிறங்கமலர் மாரிகொட்டப்
பலமல ரிதழ்க்கிடை யடிக்கடிகுயத்தினது
　　பான்மழை மிகக்கொட்டவே
பாத்திமத் தம்மா மகிழ்ந்தெம தாகண்மணிப்
　　பாலகா வென்று கொட்டச்

சலதியலை மணிகொண்டு சொட்டுநாகைக்கதிப
சப்பாணி கொட்டியருளே
சாஹிபுமுஹியித்தீன் சொற்குரிய பேரரே
சப்பாணி கொட்டியருளே

விதிருஞ் சினைத்தண் டலைத்தட முடுத்திடும்
வெற்படிச் சாரிலுள்ள
விரிதலைக் குறவர்மைப் பிணையுரிக் கவசமுரி
விக்கச்செறித் தெழுந்த
வதரிடை புகுந்துபக் கிறவர் பறிக்கின்ற
வர்த்தகமஞ்ஞெ மறியவே
அன்றயுமிவு ளியருரு விலைக்காக அங்கண
மதைத்தங்க மாக்கியருளி.
மதுரமொழி தருமினிய தீனைப் புரந்திந்த
வையஞ் செழிக்கவந்த
மனுநீத.ரேபதிக குணபோத ரேகுறைஷி
வங்கிஷக் குலவிளக்கே
சதுமறை முழக்கம தொலிக்குநா கூரச
சப்பாணி கொட்டியருளே
சாஹிபுமுஹியித்தீன் சொற்குரிய பேரரே
சப்பாணிகொட்டி யருளே.

கள்ளணியுநெட்டிதட் குறுமுகைத்தண்டோடு
கமலமலரைத்தறித்துக்
கைவாய் குதட்டுக் கருங்கவரி தன்குழைக்
கன்றுக்கிரங்கியுள்ளித்
தெள்ளும்பசுங்குவளை வாவியதன்மீதிலே
திரள்கலைக்கால்பெயர்த்துச்
செறியக்கலக்கிக் கவர்ச்சிரம்பள்ளமிகை
சேரக்கிடப்பவிம்மிக்
கொள்ளும்பருஞ்செருத் தனுமிகநெறித்தமுலை
கோட்டுச்சரிப்பெடுத்தே
குவியுமலைகளினக் குலங்கள்கண்டோட்டிக்
குறித்துநீரைப்பிறித்தே

தள்ளியமுறைக்குடித் திலகநாகைக்கரச
சப்பாணிகொட்டியருளே
சாஹிபுஹமீத்தின் சொற்குரியபேரரே ௨
சப்பாணிகொட்டியருளே.

வே று.

கண்டருமிருப்புநெகி ழத்தையும்வெற்றியாய்க்
கண்ட துண்டங்களாக்கிக்
காலர்ச்சினந்தாமுரு மேறெனமுழக்கியெழு
கடலளெறழக்கலைக்கிக்
கருந்தாதுமுசலங் கரும்பெண்ணையைப்போன்ற
கையினிலெடுத்தெட்டியே
ககனதிரவீசிச் சுழற்றிக்கவுட்குளிக்
கரடமதமாரிசிந்தி
முண்டக்கடிந்தட்ட கைமைத்தடிந்தட்ட
மாமதந்தான்கடாவி
மூருவலரிடங்களுங் கிரிகளும்பெருமைபார்
யாமணிப்புரிசையெல்லாம்
மவுலியைக்கறையடிக் கொண்டுற்றுலைக்கைகொடு
மழைமுகிலினைக்கசக்கி
வாய்கொண்டுறிஞ்சிப் பசுந்தாதுவைப்பற்றி
வவ்விப்பிடுங்கிவீசித்
துன்றவம்பிறைபுரை யெயிற்றுவெண்குதித்த
சூகைமணிப்படம்பிதுங்கித்
துன்னப்பதாதித்த எண்ணூறுமுழமுந்தல்
தோன்றப்பரப்பிவீந்த
சுடர்மணிக்கிம்புரிக் கொம்பாசலத்தொகுதி
சொல்லுக்கடங்காமலே
சூரங்கடாவிவிகு லதிரிட்டதுன்னலர்கள்
துண்டதுண்டங்களாகத்
தண்டிப்பொருந்துங்க சம்பிரமகெம்பீர
சம்பன்[illegible]விளங்கிடத்
தமருக்குள்வருமிக்க தவமொய்த்தகவரத்ன
சருவந்தமுடிமன்னரே
தாலத்திலேமிக்க மாணிக்கபூரிலே
தான்பிறந் தரியதிரைவாய்

தரளமணிகுலவும்வள நாகைநகர்வருமரசு
சப்பாணிகொட்டியருளே
சாஹிபுமுஹியித்தீன் சொற்குரியபேரரே
சப்பாணிகொட்டியருளே. ௫

வேறு.

அவிரொளிதருநிதி மணியரைவடவயி ரத்தையிழைத்தேதா
ணடுவியபரிபுர ஒலியென அணிதர ளக்கடகப்பூணு
செவிதரவிலையணி வதுமிருசுடரொளி திக்கெனவிட்டாலச்
செறிவனமருவிய மணவிடைதளர்நடை செப்பமிகத்தோன்றப்
புவிவிரிமதிமுக மழசெழுமுலையருள் புத்தமுதப்பாணைப்
பொலிவுருவயினடி குளைவுறவதியைய புத்திவிதத்தோடு
குவிதருமலையெறி திருநகரதிபதி கொட்டுகசப்பாணி
குவலயமிகமகி ழவும்வருமதிபதி கொட்டுகசப்பாணி. ௬

வேறு.

வருதிணர்சுருட்டியெறி பாவையை யுடுத்துன்னி மைப்பூகலத்தி லுறைவோர், மகிழமவுனக்கிருபை வளரவுரிமைத்தகைமைவைத்தே பரக்கமிலைவாய்த், திருவுளநயப்பதவி மிகுவரமெடுத்ததி சிறப்பாயு நித்தமதலை, செவிலிகளுமற்றவரு மவரவர்விருப்பொடு செவித்தார் கரக்கடகபூண், விரிகதிரெறித்தமணி நவிரமிகுபொற்சுடிகை மிக்கா ணமுத்தொளிரவே, மிளிர்ப்பவளமொத்தவித ழமுதமழலைக்குதலைமெ ய்ப்பானசொற்றெரியவே, தருபரிபுரத்தொனிய தெழநகையெழுப்பி யணி சப்பாணிகொட்டியருளே, தவநெறிமிகுத்த முஹம் மதுநபிகி ளைக்குரிசில் சப்பாணிகொட்டியருளே. ௭

கத்தனொளிபூசுபு தமக்குவரமேகலைகள் கற்றோர்களுக்கு மரசே, கச்சகுபிரானதை யகற்றிநேர்வேதநெறி கட்டாய்நடாத்துமரசே, செ த்தவிடைதானுமுயிர் பெற்றுமீண்டிடவுமருள்சித்தேளடுத்தஅரசே, திக்கதிபர்சூழவச னித்ததர்வேயுரை திக்காத சொற்றிறமையோய், கொத்தலரும்வாசமல ரட்டமேல்வானோர்கள்குதித்தேபுடைக்கநறவங், கொட்டும்விரிசோலைவள மொய்த்தமரவிநகர் கொத்தாய்விளக்கு முறையோய், தக்குமணிவாரியலை யெத்துநாகூரரச சப்பாணிகொ ட்டியருளே, தக்கமஹ்மூதுமர புற்றமீருனொளியே சப்பாணிகொ ட்டியருளே.

வேறு.

வித்தாரமான அறமிக்காயிர் சொற்றபடி வெற்பூடுமின்றமசநேர்
மிக்காகமேவலர முற்றேயழைத்தநபி மெய்த்தேமகிழ்ச்சிகொளவே
வற்றாதவேதநெறி பெற்றோருமைத்தினம் வளர்த்தேபுகழ்ச்சிசெயவே
மட்டாருமாமலர் நிரைத்தேமலக்குகள் மணித்தாளிணைப்பரவவே
தொத்தானமாலைகம ளத்தோளினட்டமிரு சுற்றேநெருக்கமுறவே
துப்பேயமாமதுர மொப்பானகைத்திதழ் துடித்தேபழக்கமெழவே
சித்தாதிவேதம தெடுத்தேபயிற்றிறைவ சப்பாணிகொட்டியருளே
தப்பாதரசுநெறி யுற்றேபுரக்குமொலி சப்பாணிகொட்டியருளே. ௯

பூதவசியங்களா னீதிநிலையங்களே போகவுமுடந்தையாகிப்
போதமணிகொண்டுமே பார்தகமகன்றபேர் பூணும்வழி யும்மெடாது
சூதுவசைவம்புமா றுமலுமகந்தையே தோழமைகளென்றுவந்தே
தோசநிலைரம்பவே பாசமுறுசிந்தையாய்த் தாட்டண்மிகுந்தநாளுங்
கோதூபுரிகின்றமா காதகர்களஞ்சவே கோலுதவுமின்பமறையைக்
கூறியருள்பொங்கவே காரணம்விளங்கவே கோடிசெயுமங்களரசே
சாதிமணியங்கமே நாகைவளர்தங்கமே சப்பாணிகொட்டியருளே
தப்பாதரசுநெறி யுற்றேபுரக்குமொலி சப்பாணிகொட்டியருளே. ௰

பிள்ளைத்தமிழ் சப்பாணிப்பருவம் - முற்றிற்று.

---

# முத்தப்பருவம்.

அதிரும் பரவை யலையெறிய அருஞ்சூலுளைந்து சலஞ்சலங்கள்
அணுகி விரிவெள் ளரியிலுகுத் தருமணிக்கு விலையுண்டு
முதிருங்கரடத் தடவிகட மிங்குஞ் சரக்கிம் புரிக்கோட்டி
னெதிக்குமணிக்கும் விலையுண்டு மிலங்கத்தழைத் தாச்செறித்தெழுந்து
விதிரும் பசுஞ்செஞ் சாலிகன்றாய் விளைக்கு மணிக்கும் விலையுண்டும்
விலைசொல் விடத்த கா தல்ல விந்தை யூறிவுக் கூறுகையு
முதிருங் குமுதக் கனிவாயின் முத்தந்தருக நித்தமுமே
மோனப்பொருளே மீறனே முத்தந்தருக நித்தமுமே. ௧

கத்தூங்கடல்தந்த குத்தமுத்துங் களிச்செஞ்சேற்றிற் புதையமல்லார்
கண்டேடறுளையாக்கையிலெடுத்துக்கண்ணுன்மதித்துக்கணிக்குமுத்தந்
தக்குந் தடச்செஞ்சாலிமுத்துஞ் சலசக் கமலை முருத்தமுத்துஞ்
சகிலக் கரையிற் கடசியர்காற் றருமைக் கவரிக் கவைக்காலுந்
தெத்திக் கிடக்கு மணிமுத்தஞ் சிறையு மொழியிச் கானசொல்லைச்
செறுமக்களையிற் செறித்துக்குணத் தெறிக்குங்கரும்பின் கணுவின்ம [ணி
முத்தங் குறையில் லாதிலங்கு முத்தந் தருக சித்தமுமே
மொழியும் மழலைக் கனிவாயால் முத்தந் தருக சித்தமுமே. ௨

விலைக்கும்பரவைத்திரைச்சுழியில் மேவும்பெரியவுருக்களிலு,மிழற்று
தொனியுஞ் சிறையறுகால் வெறிப்புள் ஸ்ரீரங்கதமறைப்பொருட்டின்
றளமுகுத்தடைப் பொதும்பரிற்சென்று சாலிக் கரையிற் சாலமயில்
தகைக்குங் கதலிக் குலைமடலிற் பிலம்புடைக்கு மடைவாயில்
வழங்குந்தெருவிற்சாளரத்தில்மணிமா ளிகைபொற்குளிகையின்மே
மறுமத் திடமுங் குடவளைகள் மகிழ்ந்து தவழ்ந்து மணியுகுத்தி
முழங்கு நாகைக்கதிபதியே முத்தந்தருக சித்தமுமே
முனைசேர் குறைவிக் குலக்கொழுந்தே முத்தந்தருக சித்தமுமே. ௩

பூமீதினிய புகழ்படைக்கும் பொன்னேவதுவை முடிக்கவிதி
பொருந்து மதிசம் மதிக்கவருள் புரிந்தேகோசு மகுதாமுன்
மாமீயெனப்பெற் றெடுத்தமக வானசுலுத்தான் பீபியையும்
வரிசைப் புதல்வர் யூசுபுக்கு மணமுற் றகத்தில் மகிழ்வோடு
கூமீதுன்று குடும்பம்வெகு கோத்ராய்ப் பெருகு மறுமைமட்டுங்
குறித்த மகனை நிசமிதென்றுகுயிற்று மரமே சோமானே
மூமீன் களுக்கு நாயகமே முத்தந்தருகசித்தமுமே
முதியோ ரணியுஞ்சிரோமணியே முத்தந்தருகசித்தமுமே. ௪

கலைப்ப ஞ்வனை மறிமயக்கிக் கயக்குங் கொடியஇபுலீசன்
கண்ணைக் கெடுத்து விறல்விழைக்குக் கருது மலியார் மாதுலராய்
மலைப்பா லுறைந்து திமிசிறைவன் மகிழச் செறிந்த விருட்டறையை
வானோர் திறந்து விடுக்கஅமவாசை யிரவி னிறைந்தகலை
நிலைப்பால்விதுவையழைத்திரண்டாய்ப்பிளப்பகிர்ந்து பொருத்திவிட்ட
நீர்நபிதங் குலக்கொழுந்தே நேமக் குழந்தா யடிக்கடிநன்
முலைப்பால் குடிக்குங் கனிவாயால் முத்தந்தருக சித்தமுமே
முத்தன் றிகழுங் கடலாரா முத்தந்தருக சித்தமுமே. ௫

தாளந் தனைச்சுன் ணமுநீற்றிச் சாரந் திரட்டி மடிக்கல்லினீர்ச்
சழியத் தெழித்து மாமணிபோற்றயங்கப் பணிச்செங் கலமடுக்கிப்
பருமீனகட்டி லுறுஞ்சப்பணி படுத்திநீர்விட் டொருகாதம்
பளிரிட் டிலகு விமையகிரிப் பாரவரைக்குப் புரையாகப்
பெருகச் சமைத்த மணருவிற் பிறங்க விளக்கிட் டிவணோர்கள்
பேதமகற்றிச் சிரம்பணிந்து பேணிப்புகழும் விரிவாவி
முருகார் வரிசை நாகூரா முத்தந்தருக நித்தமுமே
முகமார் விழியே மீறானே முத்தந்தருக நித்தமுமே. ௬

வேறு.

காரலைபுரட்டிபெறிகுண்டகச்சலராசிகண்கொண்ட வளையின்முத்தும், கழைபினில்வெடித்தமுத்துங்கரடுபாய்ந்தொளிருகறையடித்திரள்பனைக்கை, வரையிநுமருப்பினிலெறித்தமுத்தும்புல்லின் மாசற்றசாலின்முத்து, மைமேக மாகக்கருக்கொண் டுமிழ்ந்தமணிவண்ணங் கதித்தமுத்தும், விரையணிபு முளரியிதழ் தங்குமுத் துங்கலையின் மிக்கமடலொத்தமுத்து, மேனி த்திருக்குமுத் தங்குறையில்லாதவெழில் விந்தைக் குணங்கசிந்தே, ஷறஇனெறி மொழிபயிலு செங்கனியின் வாயினிதழ் தங்குமுத்தந் தருகவே, சையிதுஹமீதுமீறனெனவியே யின்பமே தங்குமுத்தந் தருகவே. ௭

தெள்ளிமை கொழிந்தபொழில் மடகெளிறு குமுறுதல் திருகல்செம் மண்ணேறுதல், சிப்பிபத் துட்குளிவு காடுசிறு சன்னஞ் சிவப்புமுள்ளேறல் முறிதல், ஒள்ளியமுகங்கருகல் நீரணுகி நீடொளியுறச்செம் பழுப்பேறுதல், உலைப்பசிந்ததுளிர் மாந்தளிர் வனப்பேற லொண்முயற் குருதிபொப்பு, மள்ளிலையின் வேற்கறைகள் பட்டுகிற மாறல்கல் லணுகல்குறை படலொதுங்க, லாரவிவை யொவ்வொன்றினுக்கொவ்வோர் குறையுள்ள தானபடி யாலிவையைநாம், தள்ளிவிட்டோமணிசெய் செங்கனியினொத்தஇதழ் தங்குமுத்தந்தருகவே சையிதுஹமீதுமீறனேநும் பவளஇதழ் தங்குமுத்தந் தருகவே. ௮

* துக்கமே விளைகின்றதஞ்சப் புரிந்துற்ற துளைபட்டவேய்முத்தமெய், துங்கக் கரங்கொண்டு தொட்டோடு மரிவையர்கள் சுற்றுங் குழற்கஞ்சிய, மிக்ககரு மேகம்விண் ணேறிப் பொழிந்தமணிவேறுமென் றேவிரும்போம், விந்தைதரு மாடவற் கிரிபமுக் கொப்பெ

ன்றுவிண்டிட வழர்ந்தபூகங், கக்குழுத் தத்தையிரு பார்வையா ழ
ஞ்சிறிதகாவோடு தன்றிமத்தக், கதிரொளித் தாளமச் சத்தாலுஞ்
ங்கையிற் காணப் பொருந்தவையோம், தக்கமறை யோதிக் கனிங்
செவ் வாயினிதழ் தங்குமுத்தங் தருகவே, சையிதுஹமீதுமீ ருனே
நும் பவள விதழ் தங்குமுத்தங் தருகவே.

பொன்னைப் பதிக்குமிகர்புரைபான மாணிக்கப் பூருநகரிற்பிற
ந்தே, புவியுழைய மொருநூறையினிருந்து வாழப்புரந்தல ாகூருசெ
ன்றே, யன்னத் தலத்திலுள நாகூத்தின் மூபுத்தியெனு மன்னவ
ன்புற்றுவந்தே, யாண்டகையே யெற்குமக வில்லையென் றேசொல்
ல வப்பொழுது வந்துநன்னேர், தூன்னப்புரிந்தசது மகவுண்டு மதி
ன்முதற் றேன்றுமக வென்றனக்கென், றுனைவர்பெய ரிடுநுந்த ம
ரிவைக்கு மீகென்று சொற்றினிக் குந்தாப்புலம், தன்னைக்கொடுத்து
வர்வுற்றசெவ்வாயினிதழ் தங்குமுத்தந்தருகவே, சையிதுஹமீதுமீரு
னை நும் பவளவிதழ் தங்குமுத்தங் தருகவே. க௰

பிள்ளைத்தமிழ் முத்தப்பருவம் - முற்றிற்று.

## வாரானைப்பருவம்.

குணக்கும்வடக்குமடுத்ததெற்குங் குடக்காந்திசையெத்திசையினருங்
குலங்கொண்டிறுகி நேர்ச்சைவைத்துக் கொழுகித்தொழுதுபுரிந்து
தங்கட், பிணக்கமொழித்துப்பெரும்புதுமை பெருக்குங்கலமத்தலமெ
ன்றெண்ணிப், பிரசநறுமழப்பழமுநெய்யும் பின்றிவிருஞ்சியடுவாசங்
கணக்குங்குமப்பொற் றுகடைப்புயத்தார் தமர்நாசியினுட்புகுந்தமட்
டித், தவங்குமாடச்சூழிகைமேற் நடவிக்ககனம் வளைக்குமிஞ்சி
மணக்கும் புகழ்நன்னுசைநகர் வளர்த்தினரசேவருகவே
வள்ள லசன்குத்தூசுபெற்ற மழலைக் குழந்தாய் வருகவே. க

தெள்ளுருங்கயத்தைதமிகத்திட்டிச் செழிக்குங்கதிர்ச்செக்கெலியரிந்து
செறித்தபெரும்போரினையாத்திற் தெளிக்கப்பகட்டிணைநெருக்கிக்
கொள்ளப்பிணையல்பிடித்தடித்துக்குவியப் பிணைவெல்வோரொருக்கிக்
கோலத்தரலம்போற்குவித்துக் கொண்டேடவீசிப்பதூாகற்றிக்.

கள்ளக்கருங்கட்கடைசியர்கள் கனகவரைபோல்மிகத்தூற்றிக்
கழித்துப்பிறித்தவம்மணியைக் கண்டேபருகுங்கட்குவிலை
மள்ளரளக்குந்திருநாகை வளத்தினரசேவருகவே
வள்ளலசன்குத்தூசுபெற்ற மழலைக்குழந்தாய்வருகவே. ௨

தூய்ய தளிரங் குலிககாழி சூட்ட வருக அரைமணிஞாண்
டொடுக்க வருக மெய்ப்பூழ்தி துடைக்க வருகத் தள்ளிமெள்ளப்
படைய வருக ஒருவசனம் பகர வருக விழை யாடற்
டயிற்ற வருக மடியில்வந்துபடுக்க வருக முலையமுதுண்
டுய்யவருக விழிக்கஞ்சன மூட்ட வருக நீராட்டி
யுவக்க வருக வுதரத்தொந்தி ஒசிய வருக விரிவாவி
செய்ய வளஞ்சூழ் நாகைநகர் சிறக்குங் குழந்தாய் வருகவே
திக்கு விஷயஞ் செலுத்தவருஞ் செய்யிதொலியே வருகவே ௩

பவள விரற்குக் கணையாழி பரிவே ஞெளிரு மரைஞாணைப்
படித்தேன்கமலச் சீறடிக்குப் பணிப்பொற்சிலம்புத்தனைத் திருத்தேன்
குவளைமலர்க்கட் கடையழகு குலவச் சுறுமா வெடுத் தெழுதேன்
குடித்துக் குடித்துக்கெ.ட்பிழித்துக் கொழும்பட்டாடைமடிநனையத்
தவழு முலைப்பாலினிதூட்டேன் றலைவா வருக ஒலிகளுக்குந்
தலைவா வருகக்கு றைஷிகிளைத்தவமே வருகத் திரைத்தாளந்
திவழுநகருக் கதிபதியே சிறக்கவருக வருகவே
இக்குவிஷயஞ் செலுத்தவந்த செய்யிதொலியே வருகவே. ௪

பொம்மச் சுடர்விட் டொளிர் பதைக்கம் பொருந்து முரத்தில்
வெயில்காட்டப், பொற்பார் மனைநன் எழுக்குமுத்தப் புதுமா மதி
ப்பைங்கதிர்காட்டச், செம்மைச் செழுஞ்செஞ் சீறடியிற் சிலம்புபுல
ம்புமொலிகாட்டச், செப்பக் கருணைக் கடலமுதந் திகழுங் கருங்கட்
கடைகாட்டக், கொம்மைச் சுணங்கின் முலையமுதம் குடித்த பவளந்து
ப் பிதழ்காட்டக், குதலை மொழிப்பா ரதிசொற்றே குதித்துக்குதித்
து நடந்துமெள்ள, அம்முத் திலங்கு நாகைநகர் க்கதிபா வருகவரு
கவே, அவுலியாக்கள் பரவவரு மரசே வருக வருகவே. ௫

கந்த மலர்த்தொட் டினிதுறைந்த கடங்கிக்குழைந்த வயிலையெக்கிக்
கனிவா யிதழை, மடித்தழுது கவ்வோ விரலைச் சுவைத்துறுஞ்சி
விந்தைக் கடவாய் நீரொழுக விருப்பு மனைமார் முகம்பார்த்து
பிக்க குறுவெண் ணகையெழுப்பி விதுவின் வதனக் குருவொளிரச்

சிந்துப் புரிந்த விளையாடிச் சிறக்கு மதலைப் பலர்சூழச்
சேணித்தலைத் தலைவர்வந்து செம்பொற் கமலப் பதம்வருட
அந்தந் தருக்கிதன் நாகைநகர்க் கதிபா வருக வருகவே
அவுலியாக்கள் பரவவரு மரசே வருகவருகவே.

கழிநெற் கழனி விரிந்திலங்குங் ககனமெனல் வெழுமில் சிறக்கக்
சகனர்க் கரும்பாம் பரவதனைக் கரைத்துத் தெளித்தங் கருப்புகைநீள்
வெளியிற் செருகுங் கருவதுமேல் வெவ்வித் தலமும் விரைத்தயது
வேலைக் கடல் முன்னெடுழுந்து விம்மச் செறிந்த மேகமென்றே
புளினத் திடரிற் சிறைவிரித்துப் போத்தத் தொழுதி மயிலாட்ப்
பொறிவண் டலம்பத்தவிக்கனங்கள் பொழிமுக்கனியைத் தாளங்கொட்
நளினத் தடஞ்சூழ் நாகைநகர் நதிபா வருக வருகவே
நாதஅப்துல் காதிறெங்கள் நம்பி வருக வருகவே,

புவனம் விழுங்கு மொளிமாதும் புரியுஞ் சடைபக் கிறைவரும்
புடைசூழ்ந் திலங்க நத்தமெனும் புரத்தி லுறைந்த வப்பொழுது
கவன்முடனுற் றனியுமையின்கன்றுக் கருத்தப் பால்கேட்ட
கருத்தை யறிந்து கொடுபதத்கோர் காவோமனஞ்சம் மறியாமல்
அவணி லிருக்குந் தகையறிந்தே அவன்றன் மனைக்கே புகமுடிய
மலவு மருந்தப் பாவிலேயென் றன்று முனிந்து சாபமிட்டு
கவனப் புதுமை பெறுகவந்த நதிபா வருக வருகவே
நாத அப்துல் காதிறெங்கள் நம்பி வருக வருகவே.

நாவா லுமது நாமமதை நவிற்று வார்தம் பவமகற்றி
நளினப் பதத்தின் கதிமோட்சம் நண்ணும் பின்னைப் பெருமானே
பூவா ளிருதம் உலகிலொரு பொன்னே யெவற்கு முவப்பான
புகல்வா வரிசை நாகூருப் புரக்குங் காசே யொமர்க்கரசே
வாவா வுமது திருப்புகழை வழுத்தி வழுத்தி முல்லைத்தாயார்
மகவே நீவா வெனப்போற்றி வருந்தி யழைத்தால் மடிமேல்வந்து
மேவா திருக்க வழக்குமுண்டோ வேந்தே வருக வருகவே
மிக்க அப்துல் காதிறெங்கள் மீறான் வருக வருகவே.

வேறு.

அருமறை தெரிய ரினைவருளரச வழிசெழ வருக வருகவே
யகிலமு மகிழ முதியவர் புகழ வடிகளும் வருக வருகவே
திருமணி யிலகு மழகையி னழகு திகடா வருக வருகவே
செழுமுகி லிழகின் வருசுபி செறியின் றினகர வருகவருகவே

யுருமைமி னுடைய வடியவர் துயரி னலைவறவருக வருகவே
யுடைமணி யுறுவ வணிவட முளரியுடையவ வருகவருகவே
விரமுறை வளர நவமது பெருகவருமொலி வருக வருகவே
மதியெழு கடலி னலையெறி நகரின் வரபதி வருக வருகவே. ௰

பிள்ளைத்தமிழ் வாரானைப்பருவம் - முற்றிற்று.

---

# அம்புலிப்பருவம்.

சோதிமறை யச்சிறத் தெழுவைவீயிவாழகு தோற்றமெச் காலுமறை
யூர், துய்யகலைபதிறை லுனக்குண்டு மிவாழகு சொல்லுமறுபத்திறு
லென்றேருதியகலைக்கியான மறிவிடுண்டு தெளிவெது, முறைக்குங்கு
ருக்களேகாண், ஒவ்வுயிக் கடலுதித் வருவைகீ யக்கடலி னுள்ளினைப்
புறமவிந்தே, நீதக் குணங்கொண்டு வந்தமக வக்குநீ நிகரல்லநீயு
மன்று, நெடியவன் றாதரிரு காலுமுய லுற்றுய் நிகழ்த்துத லறிந்து
மெல்ல, ஆதிநபி முடிவையுமுறிந்தவ நீதருடனம்புலியாடவாவே,ய
கிலமுழுதும்புகழு நாகூருசாஹிபுட னம்புலி யாடவாவே. ௧

புகலிலைப் பில்லாத குண்டகத் திரையலை புரட்டுங் கொளிப்புமுள்ள
புணரிகலை யாகவே யுடுத்துத் தரித்துவிரி பூதலத், தினிலுமழியாப்
பகவனரு ளாலுட்நாரு மெனுமரகரபிபண்புற்ற பூவின்வருடம், பா
லித்து மாறு யிரத்தொரு நூற்றிரு பத்துமூன் றினிலைபுதல்லா, சுகபு
த்திர ராணமகு மூதாநபி பட்டந்துலங்கவேண் டிப்புரந்து, தங்கப்ப
ரப்புகுங் திரான வச்சிரந் தொள்ளா யிரத்துப் பத்திலே, யகமகிழவ
ருமதிக நீதக்குழந்தையுட னம்புலி யாடவாவே, யகிலமுழு தும்புகழு
நாகூரு, சாஹிபுட னம்புலி யாடவாவே. ௨

இரவினர சல்லாது பகலரசு செயவுனக் கேல்வதோ வில்லையந்த
விரவரசு பகலரசு மெக்கால மோராக பின்பும் றெமூன் குழவிகாண்
ஒருவன் றலைநத் திலெழுதிங்களி லுமொருநாளுவந்துதொழுவாயிவரு
மே, யொருவன் றலைநத்தினைக்கண்டெண்ட னுதினமுளக்களிப்புற்றதி

வர்காண் பரவுமுலகத்திலொப் பிக்கவொப் பல்லெமுன் படுவடுவன
க்குள்ளநாற், பாரதிணைப்புரத் தொருகுடையின் மிக்கவன்பத்தாறு
தேசமுகலாய், அரசுரிமை செயவந்த ஷெய்கப்துல்கா திருடனம்புலி
யாடவாவே, யகிலமுழுதும்புகழுநாகூருசாஹிபுடனம்புலியாடவாவே.

ஏகனபிபுள்ள வுபாத்தளவிலன்றிந்த விபுலைமுறைப்பாடிட்டபோ
தேகனுரைகழறினது பேதிக்கவேண்டுவது மில்லையுகமுடியுமட்டு
மிதைய முங்குஹுரு ஆனபிமார்களைப்போல விசைபவுன்மீதமைப்பேன்
என்றகரினுக்கபாக்சன் மூந்நாறுநூபாக்கள்எழுபதித்திருபதோதும்
யோகமணிபுதலாக்க ளாகியார்களிகைந்து முறபாக்களேழைந்துபே
ருண்ணமையன்வாறுக ளவுத்தாதுகளாகுமன்று ஹுத்தமுகுத்தா றுங்கள்
மேலென்றுமெதேசவுது நிலையானதேகுத்பி ஹெத்தபட்டந்தரித்தே
ளொருபொருணம்பித் தினந்தினம் வணங்கியருளோகைக்கடற்குளித்
தோற் மாகநகர்புகழ்கின்றருமிலை தீபமாய்வள்ளல்கவுதானவர்கடன்
வண்மைத்திருப்பேராகப்பிறந்தவிவு வளரத்தவம்படைத்தோர்
வன்பாலமட்டுநஸ்ருணி மையடர்த்துதிரை வாரிக்குளேயமிழ்த்தி
வாரிச் துளுள்ளநவ மெல்லாமறிந்திந்த வையம்புரக்குத்துபா
யாகமகிழ்கின்றவப் புரவலர்காங்கொண் டழைக்கநீயங்கிருந்தா
லனாவுவந்துற்றநகவை யல்லாமலின்றுபுதி தாய்நவைக்குள்ளாகுவா
யாசையாலெங்கள்குரு ஷெய்கப்துல்காதிருட னம்புலியாடவாவே
யகிலமுழுதும்புகழு நாகூருசாஹிபுட னம்புலியாடவாவே. ௪

சாதிக்கடர்ந்து வடவாக் கினித்தனலிற் கனலுனைச்சந்தியாமற்
கடுவிடற்றுனையெயிற் றெரிலழிப்பகிர்ஞவின் கட்செவியருந்திடாமற்
போரிக்கமானகலை குறையாமணிமைவான பூரணத்திவசமதனின்
புந்திபற்றிடையாம லிருகோடிசாயாமற் பொங்குமுகிலிற்புகாமல்
நீசக்குணங்கொண் டுதித்தநபிமார் நேசமகிழ்கின்றநயினார்
நிச்சயப்பெருகுநயினார்வேதமுறைமையே நிகழ்த்தியாசாலுநயினார்
ஆதிக்குவப்பாக வந்தநயினருட னம்புலியாடவாவே
அகில முழுதும்புகழு நாகூருசாஹிபுட னம்புலியாடவாவே. ௫

வேறு.

உரகம்வந்தனை படருவெம்பகை புரழ்வுதிங்கிலை நினைதட
லிலைய வன்சிறை கொழுநிறங்கெட வுறநெருங்கிய வமரர்க
ளாசனிங்குள வலவருந்தமு ளனுகவந்தெழுநலமெலா
மகவமிஞ்சிய வொளிவுதங்கிட அகிலமெங்கணு மகிழவே

குருமெய்யிண்டவ ராருமைகொண்டவர் குறைஷிவங்கிஷ மரபுசேர்
குழவியென்றவர் நலமிகுந்தவர் குணமடைந்தவர்புகழவே
வீருகலன்பிளர் வருகவென்றனர் வருகஅம்புலி வருகவே
மனமகிழ்ந்தொலி வருகவென்றனர் வருகஅம்புலி வருகவே. ௬

அலிபில்கின்றுயர் ஷுறுபுதொன்றொரு அழகெனுஞ்சுய சுருபமா
யறிவுளன்பென நடுவிளங்கிய அருளுவந்தவ ருலகமார்
கலிகடந்தவர் மதிபிளந்தவர் கரிசவெங்குபிர் மடியவே
க்ருதிகின்றவர் கிறைபுரிந்தவர் கருணைதங்கியமறைவழி
பொலிவுகண்டவர் நவமிகுந்தவர் பொறைசெறிந்தவ ரிவையலாற்
புனையுமுன்புனை வகிர்புகண்டவர் புலனுறுங்கதி முரஸினோர்
வலுமைகண்டவர் வருகவென்றனர் வருகஅம்புலி வருகவே,
மனமகிழ்ந்தொலி வருகவென்றனர் வருக அம்புலிவருகவே; ௭

பதிவிளங்கிட நனிதருஞ்சுடர் பரவமென்பனி சொரியவே
புளப்ளென்றணி முகம்விரிந்தெழில் பணிமிகுந்துடல் வளரவே
விதிருஷிவண்கலே வினிலுயர்ந்துபின் மிளிருமின்கன பதியென
மிகவெழுந்திவ ணுலவிநன்குற விஷபமெங்கணு நடவியே
அதிஜெயம்பெற வுளமிசைந்திட அமரர்வந்தனை மகிழவே
யமுதுசிந்திட மிகுதியன்புகொ டடிபணிந்திட வரிசைநேர்
மதிபுனைந்தவர் வருகவென்றனர் வருகஅம்புலி வருகவே
மனமகிழ்ந்தொலி வருகவென்றனர் வருக அம்புலிவருகவே. ௮

வேறு.

பணியெறியும்வெண்சங்குகுத்தமுத்துங்கொண்டுபாலித்தமனையநேக
பரவைத்திரைக்கர மெடுத்தெறியமோதிப் பளிரிட்டமனையநேக
மணிகுலவவளரும் பசுஞ்சாலியுமிழ்கின்ற வண்ணமுத்தும்யநேக
வளமெங்குமித்தகைமை யாகச்சிறக்கின்றவடிவானதுன்றணிப்போம்
றணிபெறச்சதாகோடிமதியம்விளையாடித் தயங்குமொப்பாகுமிந்தத்
தலமுமெழுந்துவா துடற்குறைசுற்றித் தரித்துவிளையாடிமகிழ
வீணிகுலவுவளநாகை நகராதிபதியினுட னம்புலியாடவாவே
அம்பரமுமிம்பரமும் புகழப்துல்காதிறுட னம்புலியாடவாவே. ௧

தெண்டிரைபுடுத்தபுவி காக்கவொருசெங்கோல் செலுத்துமச்
செயலறியலாம், சிதைபடடவெங்குபி ரகற்றிமறைநேரறிவு சேமிக்

குும்வகையறியலாம், மண்டலத்ததிபர்கிதி திறைகட்டியிருப்புடையும் வந்தரின் றதமறியலாம், மறுமைமட்டதுவரையு மொல்லுமச்செய்திகள் வகுத்தின்ன தென்றறியலாம், விண்டதை யறிந்துதொழவரவில்லோர்முன் விரும்பியவர் நம்பேரர்தம், மிக்கசொல்லுக்குகப் பட்டெழுந் தாயிப்ப மேநினி புரப்பதாறு, லண்டர்நா யகமெங்கள் நாகூருசாஹிபுட னம்புலியாடவாவே, யம்பரமுமிம்பரமும் புகழப்துல் காதிறுட னம்புலி யாடவாவே. ௰

பிள்ளைத்தமிழ் அம்புலிப்பருவ - முற்றிற்று.

# சிறுபறைப்பருவம்.

விடமிட்ட வெண்ணுரைப் பொறிச்செம்மணிச்சூட்டு மிகுதிமகுடக்கூலுங்க, மேகமண்டலம்வரையுமண்ணுார்ந்து கடசவே மிக்கசூரியனொளிச்க, வடலிட்ட வெண்டிடைச்சக்கிரிகளுங் கரிகளுநம்மஞ்சியஞ்சிப் பதைக்க, வண்டபகிரண்டமுந் தண்டமனவ யெங்கெங்கு மலைமலைய வெற்றிகொண்டே, சடமிட்ட மறுமன்னர்கோட்டையுமக்காட்டையுஞ் சின்னபின்னப்படுத்தித், தத்தழித்தோடிடத்தறு துலைக்கடவிமாசமரா வெம்போர்விளைத்தே, திடமட்டுமுழக்கிவரு மலிகிளைபி லுள்ளவா சிறுபறை முழக்கியருளே, செழுநிதிவழங்கவரும் ஷெய்கப்துல் காதிறே சிறுபறை முழக்கி யருளே. ௧

அந்தரப் பொற்பதி மடந்தையரு மற்றுள்ள சுரர்களுஞ் சுரர்கள் பதியுந், சோபனமி தென்றென்று நம்மைத்துதிக்கின்றசொற்புகழ் முழக்கமுறவே, அந்தந்தசப்பாக மூமீன்கள்மூசுலிம்க ளவுலியாக்களுமூவப்பாய், அன்புற்றுநம்பதத் தணுகிறலியல்லாகு அன்குவெனவே முழக்கச், சந்த்ரனுஞ்சூரியனு மெங்களுநம்முடைய சமுகத்திலவந்துநின்று, சந்தித்தெழுந்தவர் முழக்கமெழவுங்களிரு தாளிணைவணங்கார்சடஞ், சிந்தைசளு நெஞ்சும் பெரும்பறை முழக்கிடச் சிறுபறைமுழக்கியருளே, செழுநிதிமுழங்கவரு ஷெய்கப்துல்காதிறே சிறுபறை முழக்கியருளே. ௨

வல்லொலித்திரைசுருட் டெறியுமைக்காருவேயில் வளரும்வால்வளைதவழ்ந்தே, மருங்கினிற்புடையினிற் புகரிளிற்றுமெனக்கு மணியுகுத்தேமுழங்கு, மொல்லுமைப்பொறிவரிச்சிறையினறுபதவண்டுமொண்மடற்பொற்பொகுட்டி, னுடையகமலத்தினி லிருந்துமதுவுண்டுகளிபொழிபாதவிசைமுழங்குங், குல்லெனமுழங்கும் முரசமொலியென்றுமெக் கோணத்திலும்பரந்தே, குவியுமைக்கலியறப் பொழிலில்விழிதுஞ்சக் குளிர்ந்தமழையைப்பொழிந்தே, செல்லிடி முழங்குவளநாகைநகரதிபரே சிறுபறைமுழக்கியருளே, செழுநிதிமுழங்கவரு செய்கப்தல்காதிறே சிறுபறைமுழக்கியருளே. ௩

பையரவின்மகுடத்தின் மேவிட்டசிமையான படியேழுமண்டமேழும், பட்சமுறவச்சமற வுங்கைப்பெருக்கெனும் பரவைவாய்லேமுழக்கும், உய்யுநவமேவப் புரிந்தலறபத்தாறம் முஷ்கரசர்வந்துநின்றே, பொன்னணிதித்திறையளிக் திருபுடைநெருக்கமுற ஒல்லுமக்குமுழக்கத், தைய்யதமிழோதுந் தவப்புலவர்சகேகோடி கோன்றப்புரிக்தமதுதங், துங்கமதுறைக்கவிப் பனுவலாய்ச்சொற்றுத் தொடக்குமச்சனைமுழக்கச், செய்யதொலிபாணவா மறையொலிமுழக்கநீசிறுபறைமுழக்கியருளே, செழுநிதிவழங்கவருசெய்கப்துல்காதிறே சிறுபறைமுழக்கியருளே. ௪

தாலுக்ரமானதல் லாவுநபியாலன்று தங்கவித்தாய்முளைத்தே, தரைமெய்க்குருபிமார்கள் பணருகிமனுவானதழையைத் தழைத்துசத்தேன், பானிற்குமொழியொத்த பாத்திமாவென்னுமப் பசுமலர்விரிந்துமன்னோர், பாரக்கொழுந்தொப்பி யார்களெனுமக்காய் பரப்பிநட்போடுபின்னுள், வானுக்குமிவணுக்கு மஞ்சியான்பழமாக வந்தேசிறந்தபேருய், வரமேவிநலமேவி யருமாலநபிதமது வங்கிஷக்குலவிளக்காய்த், தீனுக்கோராணியாய் வந்தகுருபீடமே சிறுபறைமுழக்கியருளே, செழுநிதிமுழங்கவரு செய்கப்துல்காதிறே சிறுபறைமுழக்கியருளே. ௫

மருவளரும்பங்கப் படும்பழனவுழவர்செம் மாங்கனியை வீழ்த்துமென்றே, வரிவளைக்கரமசைத் தனிவளையெடுத்தெட்டி வாங்கியெறியக்கவிகடான், வெருவலில்லாமலிள நீரைப்பறித்தங்கு விட்டெறியமுட்டிலாவின், மேவுங்குடக்கனி பிதிர்ந்துசனைறஜலஜலெனவிண்டுவிண்டாறெடுத்தே, பொருளைவழிவழிடப் பரந்தோடிசோலைப் புடைக்

கற்செந்நெலெல்லாம், பொழியுமணிவைச்செறித் திலகுமிடமெங்
கும் புரைக்கடங்காமலென்றுக், திருவளரும்வளநாகை நகரினுக்கதி
பரே சிறுபறைமுழக்கியருளே, செழுநிதிவழங்கவருஷெய்கப்துல்கா
திறே சிறுபறைமுழக்கியருளே. சு

ஆராருமன்புற வணக்குப்பழம்பொரு ளனுக்கிரகமுடையவள்ள
லருமைத்தவங்கொண்ட கிலுறுநபிவத்தன்று அந்தமான்தீவிலுள்ள
நேரானசிருக வனைத்தையுமறிந்திட வினைத்தகிலைவானபடியே
தேசித்துரைத்தவாசிகப்பாவிறந்தமையுரித்துவெளியேயென்றுதான்
ஏராருமணிமவுலி சூட்டிப்புகழ்ச்சிசெய் திருக்குமூலமிஃதென்றுதா
னின்க்கரங்கொண்டுதொட்டுக்குறித்துவிட் டேமப்பதிக்கொப்பதாய்
சீராருநாகைப் பதிக்கரசசெய்தவா சிறுபறைமுழக்கியருளே (ச்
செழுநிதிவழங்கவருஷெய்கப்துல்காதிறே சிறுபறைமுழக்கியருளே.

அகமகிழமெய்க்கசிறு மதலைகள்மகிழ்ச்சிகொள வரிவையர்மகி
ழ்ச்சிகொளவே, நரியவர்மகிழ்ச்சிகொள நேிகர்மகிழ்ச்சிகொள வம
ரருமகிழ்ச்சிகொளவே, யிகநெறிமகிழ்ச்சிகொள அலகைகள்மகிழ்ச்சி
கொள வெடியகிரமெய்ச்சிறகினுல், விசையெழுவுலிந்தடற வையினி
னமகிழ்ச்சிகொளா விரிதருமகிழ்ச்சிகொளமா, நகுமலரிதழ்க்கமல ர
னையவன்மகிழ்ச்சிகொள ரனிமகியுமிக்காலெயு, நனிவமெழமைக்கனி
ஞயருமகிழ்ச்சிகொள நவினுமிவைவெயுக்கனுடனே, ஜெகதலமகிழ்
ச்சிகொள நறுமணமலர்க்கைகொடு சிறுபறைமுழக்கியருளே, திரு
மறைமுழக்கமெனவருமொலிகளுக்கரச சிறுபறைமுழக்கியருளே. அ

அடலவநடுவெடுத்திலகு திருமணிமுகப்பிலெழு துவேயமறிவுற்றகு
ருவே, கமுகவநனைப்பிறைதி வருபதிபொப்பவரு சுடிகைமகுடத்தலை
வரே, அயர்கனிவிப்புவிபுமுயர்சகனுமொக்கப்பகிழாசொருகுடைக்
குள்வருவோய், அடல்புனையுமிக்கபுர வலனிருக்கத்தினிலுமணிமு
டமொழிக்குமரசே, வியனதிவுகற்றமுதி யவர்புகழ வெடபொழுதா
மெலிய வட்டினுக்கிநவிலாய், மிடிமைகொடிருக்குமவறி ஞவர்களுள
மெய்க்கவெகுபிருககுதி வெற்றிபெறவே, ஜெயம்வளரமைக்கினைய
நிதியருள்கொடைக்கைகொடுசிறு பறைமுழக்கியருளே, திருமறைமுழ கூ
க்கமெழ வருமொலிகளுக்கரச சிறுபறைமுழக்கியருளே.

கனைகடலுடுத்தபுவியகமிழ்மிக்கபர கதிமறைவிளக்கிலநேர்,
கனவதிஜெயக்குறிகள் மிகமிகவிளமுத்தறிவு கருதியெவருக்குமரசாட

விளைகளையகற்றிகல விழிம்வுஙசிற்பரமன விரிந்துறைமுழக்கமுறவே, விகசிதமலர்க்கமல விதபகலவுற்றதிக விதியருள் செழிக்கவருவோய், வளைகழல்தரித்தமுருகம் மதுரகிருலத்திலொரு மதியெனவுதித்தமக வே, மறைவழிபெருக்துநவை யொழியதுசிறத்துவர வரிசைபெறுமெ ய்க்குரிசிலே, தினகரனையொத்தவொலி நறுமறை மலர்க்கைகொடு சிறுபறைமுழக்கியருளே, திருமறைமுழக்கமெழ வருமொளிகளுக்க ரச சிறுபறைமுழக்கியருளே. ௰

பிள்ளைத்தமிழ் சிறுபறைப்பருவம் - முற்றிற்று.

---

## சிற்றிற்பருவம்.

வாமம் திகழுமரகதமா மலையின்வயிரக் கல்லடிப்பு
வைத்திதசெழிக்குங் கருப்பாற்றின் வாருஞ்சலத்தை யுலையாக்கிக்
காமன் கிலேமுற் றரிசியெனக் கடைந்து குவளைவிறகாயக்
கமழும்பொழினன் மலர்பறித்துக் கறியாய்ச் சமைத்துமணிமறுகிற்
சோமமுகங்கள் வியர்வரும்பத் தூங்கக்கரங்கள் சிவப்பேறத்
துலங்கச்சமைத்த சிறுசோற்றைத் துலைவக்கடமேறு காக்கக்கடன்
ஷேமமாண்டிறைமி னெறியுடையீர் சிறியேன் சிற்றிற் சிதையேலே
தீனக்கரசே நாயகமே சிறியேன் சிற்றிற் சிதையேலே. ௧

பூணைப் பகஞ்செம் மாந்தளிரின் புரைமோந் தளிரின் மெதுவின்மலர்
புகஸ்தற் கரிய தவப்புடைத்த புதியோர்வணங்குந் திருச்சரணங்
காணக் குழலில் வாதகபுக் காவி னடக்கு மிருசரணம்
கண்டோர் குடங்கைதனிலெடுத்துக்கண்மேலணைக்குஞ் சரணமதாற்
றேணைச்சமைத்த சிறுசோற்றைத் தூயவயிரின் சிற்றிலையுந்
துவைத்துத்துவைத்துச் சிதைப்பதனுற் சுவடு சிவந்து புடையாதோ
சேணிற் புகழும் புகழோரே சிறியேன் சிற்றிற் சிதையேலே
சிந்தா மணியே நயினரே சிறியேன் சிற்றிற் சிதையேலே. ௨

நெறித்த குழலின் மடவார்க ளொளிக்கை குவித்து வண்டலள்ளி
நிவத்தும் புறச்சித் திரச்சிற்றில் நெரியச் சிதைப்ப தாலொளிக்கா
லெறித்த தரிசிட் டணிசிலம்புற் றிருக்கப் பால்வந் துறந்தாதோ
எங்க ளசன்குத் தாசுமுத்தி மெடுத்து முகத்தை முகந்தனைத்தாற்
பொறித்த குவட்டி னிணையான புயத்திற் புழுதி தோயாதோ
புரிந்து மடியி லினையிருத்திப் போற்றும் பொழுதிற் சிறுதாளிற்
செறித்த புழுதி தோயாதோ சிறியேன் சிற்றிற் சிதையேலே
செப்பி னொலியே மீறுனே சிறியேன் சிற்றிற் சிதையேலே. ௩

விளைற் கரிய பகைவிளைத்து விருந்திட் டலேவா ரியிற்புகுந்து
மீளா திறந்தான் றிபுணநெறி மேவு மகளிர் சிற்றிலல்ல
வள்ள மல்ல வணங்குமுறைக் கருத்தை யறியார் பயின்றெடுத்த
கருத்து மகளிர் சிற்றிலல்ல கருணைபெருகு நும்முடைய
வுள்ள மகிழப் புறக்கானி னுரையின் வழியைத் தொகுத்துத்தொழு
துணரு மகளிர் சிற்றிலல்லா லுணரா மகளிர் சிற்றிலல்லத்
தெள்ளு மறையின் பெருமானே சிறியேன் சிற்றிற் சிதையேலே
தெவிட்டா தினிமைக் குதலைமொழிச்செல்வா சிற்றிற்சிதையேலே ௪

நாக்கி னடிக்கு மேலாக கனிமுச் சுளிக்கு நடுவாக
நளினக் கொனுமி ருந்திலகு ஞானக் கருத்தைத் தேர்ந்துமறை
யாக்க மருளும் பழம்பொருளுக் கன்பிலொளியாய் வருமதனு
லகில முழுது மப்புறமு மூண்டப் பரப்பு மப்புறமு
மேக்கு மதற்கப் பாலுமுள வெவையுமழிக்கக் கருத்தானு
லெளிதோ நுமக்குப் புரைசொனுவா ரெவர்காணமது குருவேசீர்
தேக்கும் கமலச் சிறுதாளா சிறியேன்சிற்றிற் சிதையேலே
திரைமுத்தெறிக்கு நகர்மழலைச் செல்வாசிற்றிற்சிதையேலே. ௫

மாரி யருந்திப் பண்மிழற்றி வரியஞ் சிறையின் பொறியறுகால்
மணிப்புள் ளுறக்கு மணிப்புயரே மகனே பொன்னே கண்மணியே
யேரி மடைகள் மணிகொழிக்க இலங்கித்துலங்கு நாகூரி
லிருக்கு மரசேமறைத்துரிசே யெங்கள் குலத்தின் மணிவிளக்கே
பூரிடையை புகழ்வேதப் பூபா லருக்கும் பூபாலா
பூமி யனைத்து மொருகுடைக்கீழ்ப் புரக்கு மருமைப் பெருமானே
யாரி கருமின் கிதமொழியீ ரடியேன்சிற்றி லழியேலே
அவுலியாவே மீறுனே யடியேன் சிற்றி லழியேலே. ௬

பூமா மகிழ்நன் னீர்வாவிப் புனலைப் பசும்பொற் குடத்திலள்ளிப்
பொன்னுலிழைத்த பலகையின்மேற் போற்றியிருத்திமுழுசாட்டித்
தேமாம்பூதாரத் தமுதூட்டிச் செம்பொற்பசும்பட் டெடுத்துடுத்துச்
செழுஞ்சீ றடிக்குக்கபுசணிந்து சிறக்குமறுகில் விடுந்தர்மையைத்
தாமாம்வெறுக்கக் கடனதுண்டுத் தங்கவளைக்கையாற்றானே
சமைத்தசிற் றிலையுந்தாளா லழிக்கத்தரம தல்லக்காண்
ஆமா மடிமை நமதடிமையடியேன் சிற்றி லழியேலே
அவுலியாவே மீரானே யடியேன்சிற்றி லழியேலே. ௭

இருண்மை மணித்தொட்டிலழகா யிருத்திமுழங்கத் தாராட்டி
யிதனக் கொடுசெப் பாணிகொட்டி யெழிலாய்முத்தந் தனைக்கோட்டுக்
கருமை விழிக்கஞ் சணந்திட்டிக் களித்துக்கூடி விளையாடிக்
கதிர்மாமணியி னொளிகாட்டிக் கண்ணேபொன்னே யெனப்போற்று
மரிமை நமக்குத் தெரியாதோ வோடியோடிக் குதித்தெழுந்தா
லுடுத்த பசும்பட் டாடையெல்லா முலவும் புழுதி புரளாதோ
வருமைக் கருமைப் பெருமானே யடியேன் சிற்றிலழியேலே
அவுலியாவே மீரானே யடியேன் சிற்றி லழியேலே. ௮

மூர்க்க முறவெங் கோல்புலிக்கு முடிக்குஞ் சுலுத்தான் பரத்தினவர்
மூனிலா ருதவ விவனும்விலை மொழிசொல் விடுத்த காதுவிந்தை
யூக்க மணிபொற் றுகிலொன்றினு லுங்கள் றவுலாத்தனைமூட
வுருவி லனுப்ப வுவரியிலவ் வுருவும் பெருங்காற் றலைமோதி
நீக்கக்கழித்து நிலைமயங்கி நீரிற் சிதைபட் டிடும்பொருளை
நேமத் துகிலிக்கரைசேர நேசித் தழைத்தோ யெமையடிமை
யாக்கக் கடமை யானதினு லடியேன் சிற்றி லழியேலே
அவுலியாவே மீரானே யடியேன்சிற்றி லழியேலே. ௯

வானைப் பொருங்கீட் கிலைபருவம் வரிவண் டுறங்கு மலர்க்கூந்தல்
மணித்தூப் பிதழ்நற் கொடியிடையின் மடவார்க் கிரங்கி யுகமுடியு
நாளைக் குதவு நலைபகழ்ந் நவயார்பாத்தி மாமடந்தை
கனிணப் புதல்வர் அசனுசைனு மனுகுமவுலா தினிற்பிறந்தே
நீளப்புவிக்குங் ககனத்துக்கு நெடியதலைமை புரிவதனு
னீதத் திருமந் தருஞ்சிற்றிலை நேசித் தழிப்ப தழகல்லக்கா
ணுளைக் கடமையானதினு லடியேன் சிற்றி லழியேலே
அவுலியாவே மீரானே யடியேன் சிற்றி லழியேலே. ௰

பிள்ளைத்தமிழ் சிற்றிற்பருவம் - முற்றிற்று.

# சிறுதேர்ப்பருவம்.

பூண்டிடபல் தருக்திகிரி மற்புருடராகமதா யோன்மணிக் குமிழு
டைத்தே, பொற்பதும ராகத்தி னலணிப் பலகைநனி பூணைக் குயிற்
றிநன்று, யீண்டிய சுடர்ப்பிரமை யெழுவச்சி ரத்தா லிலங்கக் கொ
டிஞ்சிவிட்டே, யெழில்கோ மளக்கிடுகு கொண்டதைத் தொளிர்ந்து
கிரி லேயுமணிக் காப்பதித்தே, தாண்டிய வெடிக்குரற் கிண்கிணி நி
ரைத்தவரிதானக்த மகுடம்வைத்தே, தரிசொலிவிளங்கத் தொழிற்
சித்ர மாகச்சமைத்ததிதானை தறிவாய்ச், சேண்டிசுழுமவரவர்கள் கொ
ண்டாட நம்முடைய சிறுதே ருருட்டி யருள்வீர், ஜெயஜீவரத்நமே
செய்யிதொலி நாதரே சிறுதேருருட்டி யருள்வீர். ௧

ஐயமானவெங்குபி ரறத்தகில பெய்க்கநின் யாக்கிநெறி வழிவ
ரம்பா, யரிஜகலி மாழ்வன்னு முரமளித்தைகதெருக் தாவகொழு
வாலுழுதமேல், நயபான தினைப் பதித்ததிக வேதமுறை நற்புனல்
நடாத்திவளமாய், நற்றீ னெனும்பயிர்ப் போகமது நன்மைவழி நல்
கதிர்க் குலைசரிந்தே, வயமானவிந்தச் சிறபாகவென்றென்றும் வள
ரகல மேறவிர்த, மண்டலத் தைப்பூரங் இனிதாற்ற நடைபெற்ற வா
னெனும் பெருவாழ்வினே, செயலான கருணைகொடி பேருக வந்த
வொலி சிறுதே ருருட்டியருள்வீர், ஜெயஜீவ ரத்நமே செய்யிதொலி ௨
நாதரே சிறுதே ருருட்டி யருள்வீர் .

தருகித்திருப்பாம லுவர்விதானக்கிடுகு தத்தித்தெறித்திடாமற்,
றடவரைதளைசையாமல் மணிமகரமேற்கொடிக டாணங்கிழிந்திடாமல்,
லுறுபகில பதிராமல் பேவுந்திருப்பலகை யுடைபட் டிழிவதிடாமல்,
லொல்லுங்கொடிஞ்சியு மலங்காம லெவர்களுள மோடித் திடுக்கிடா
மற், கறையுடையதுபிரசர் நெஞ்சம்பெரும்பீழைக் டாவுதலையர்ந்தி
டாமற், களிகூரதுந்தமை வணங்காதவஞ்சரது கவலினைதொலைந்தி
டாமற், சிறுகமல மெய்ப்பதம் வருந்தாமனும்முடைய சிறுதேருரு
ட்டியருள்வீர், ஜெயஜீவரத்நமே செய்யிதொலிநாதரே சிறுதேருருட்டி ௩
யருள்வீர்

பொங்குங் கதிர்ப்பிரபை திகழுமாக தத்திநெறியில் புனையான
மெய்யின்மினனர், புளகிட் டணைத்திறுகி வட்டமிட் டோங்கிப் புனை
த்துவா ரைக்கிழித்த, கொங்கையுக ளக்கடியின் மீதிலுமணத்தினிய
குளிர்மதி முகத்தைமுத்திக், கொண்டாடிநின்றுடிவிண்டாசைகொள
மிகக் குதலைச்செசா லிவர்மதலையென், றெங்கட் கருட்பொரு ளென

பெற்ற வெங்கள்குல மிலகப் பிறந்த முதலே, யிமேவோர்கள் கவிமொழியுமுதியோர்க ளெங்ஙனரு மிதையமலர் களிகூரவே, செங்கைக்கொடைத்தருவி னுக்குடைய வாறுமதை சிறுதே ருருட்டியருள்வீர், ஜெயஜீவரத்நமே செய்யிதொலி நாதரே சிறுதே ருருட்டி யருள்வீர். ௪

இந்தா மெனக்கவி னுலாவிச் செழித்திட விலங்குமுகம் வியர்க்காமலே, இலகுசரு வந்தமுடி யசையாமலறுகா லிசைத்தளி குடைர் தாடவே, கொந்தாரம் வீசுங் கனத்தந்த மத்தெரியல் கொண்டபுய மொசியாமலே, கொடியகுபி ராளரொடு பீசயில் வெட்டக் குதித்தபுயம் விம்மாமலே, சிந்தார மணியுஞ் சிரத்தாசுதானுஞ் சரிந்தே கிழுந்திடாமற், றாளவட மிஇயின்வட கிற்விய மணித்தாசுதான்விட்டகன்றிடாமற், செந்தாமரைப்பதம் வருந்தாமலும்முடைய சிறுதேருருட்டி யருள்வீர், ஜெயஜீவரத்நமே செய்யிதொலிநாதரே சிறுதேருருட்டியருள்வீர். ௫

உரைகுன்றிகரைபெருகி நடைதளர்வதாய்மிக்க வுபயவிழியும்புகையதா, யுலையும்வய தெழுபதிலும் வாயினீரறவும் முருகியுட்கரசையாகித், தரைபுகழு முத்தமிழி னுலமதாமறுவப்பு கனைக்கவிதையின் பணுவலாச், சமுகத்தி லேபாட அகம்வைத்த வர்க்கினிய சந்ததி வருத்தகுருவே, புரையகல தீன்வழி புரக்குமா சேமெமது பந்தியி லிருக்குமுதலே, பூமிக்கு மேமிக்கும் வாழுக்க மொருகோல்பொருந்திய ஜெயக் கடவுளே, இரைமணி கொழிக்கும்வள காரைநகர நாதமருசிறுதே ருருட்டி யருள்வீர், ஜெயஜீவ ரத்நமே செய்யிதொலிநாதரே சிறுதே ருருட்டி யருள்வீர். ௬

தூங்கப் பணிவொற் படத்தணி விதானங்கள் சூழச் சிறப்பித்துவான், சுரர்தரு கரங்கொண்டு விறுவுதிதி மேடைவிரி தொல்லுலகி னுக்குகுடுவாய்ச், தங்கப்படித்தாகரு பர்வதனி லணுகித் தரித்துமிக் காவலொலிமார், தங்களை விளித்தெமது வாக்குவந்தபிர சங்கமகன் பூசுபாலேனர், இந்துற்றெழுந்தசன் றுவென்றும்பட்டணமி சேதயானிகூரமகிழ்வாய், ஏகினு ரென்றுரைக் கவர்களை விடுத்தவணி லேயப்புரிந்தழைத்தே, செங்கடம்பப் புயங்கப் படப்புவியரச சிறுதேருருட்டியருள்வீர், ஜெயஜீவ ரத்நமே செய்யிதொலி நாதரே சிறுதே ருருட்டியருள்வீர். ௭

கார்மேவு பச்சையங் குன்றங் கருப்பங்கதி கனகாச் சிரகாடுசூழ்ந்தயங்கி சிறகர்லிசைத்தளி நடைக்காடுகடி கமழ்ந்தருக்கமாலே, காமேவு புகழ்நங்கு காரைநகர் மிக்கான தரியலர் படைக்குழாங்கள், க

த்தனிக் கட்பொருதபச்சையும் புரவிகட்டடவிகட வெள்ளானைமேற், பேர்மேவு கொடைவெற்றி வதுவைசனி யாகப் பிறங்கித்தொனித்தமு ரசும், பெலவங்க குயிர்கண்டுதொழுகின்ற கோளரிப்பிரசங்கத் தவிச முடனே, சீர்மேவு செங்கோல் செலுத்துமொரு பீடமே இறுதேருரு ட்டி யருள்வீர், ஜெயஜீவ ரத்நமே செய்யிதொலி காதரே இறுதேருரு ட்டி யருள்வீர். ௮

வேறு.

கொம்மைக் குடப்புரை மடுக்கலைக் காலணி
குவிந்தசரை நிரைமருப்பு
கோலக் கருங்கவரி நகைவாய் பிளந்தங்கு
குளிரவா யிற்புருந்தே
குறும்மைச் செழுமடற் பசியவட் டிலைகெட்டு
சோகனக வைக்கறித்தே
கொத்தலரு வீதிப் புடைக்குவளைவிரிந்தவெதி
குலவும்பசங்காவிலே
அம்மைக்கரும்பொதிச் சிறையினறுபதவளி
யருங்குரல்முழக்கவிசைகேட்
டணிதுளை மடற்செவி மடுத்துக்கிடந்திரையை
யசையதாருகட்டுநிற்கே
பல்லாது தொழுதிச் சிலிண்டிக் கொழுந்தட
மாடக் கவிக்களைக்க
ளழகான கழகான கம்பத்தி லேகின்
றருங்கைய ளைவதந்தே
யிம்மைக்கு மோர்மகிழ மிக்களைக் காவை
லெதிர்த்துமம் மானைபோட
வேந்திழுது மந்திரப் பணைத்தி லுந்திட
விலங்குகுடக்களிபிதிர்ந்தே
ருணநிடவுயல்பரிசி யெனமொழி வங்கேறு
மெவ்வு நமூப் பாகமெல்லா
மிருமாதிதிக்குப்பை சுவமா மணிக்குப்பை
போனா போலிலங்கு
செம்மைக் கடந்தமு நகைதனிலே வந்து
செங்கோல் செலுத்துமுகிலே
தீரேறும் வாசேறுந் தொழுவடை மிருகருகு
சிங்காசனப்பிரபுவே
சீமானே கோமானே மூமீனைகுமொடட
இறுதேருருட்டி யருள்வீர்
ஜெயஜீவ ரத்னமே செய்யிதொலி காதரே
இறுதேருருட்டி யருள்வீர்

மந்திர மறைப்பொரு ளிணங்காது நெறிகெட்ட
வங்குபி ரினத்தி லொருதி
வந்தனைய தேசெய்து மகிழ்வினிருந் தித்தெமது
வம்பானபரிபவத்தை
மண்மேலகற்றிவிடு மென்றே நிடக்கண்டு
வம்பான பரிபவத்தை
மண்மேலகற்றுத லறிந்துகளிகூறவவள்
மனம்வைத்து நேர்ந்தபடியால்
தந்திரமதாயொரு பணத்தினெய்வாங்கித்
தரித்தகா ணிக்கையாகத்
தாருடிவெகுதூர வழிதொலைகடந்துநகர்
தங்குமதி லொட்டிரட்டி
தாருணவிலைகண்டு கொடுவந்தநெய்யினைச்
சட்டைபண் ணுதாவிற்றே
தவறுதபடிமறு பணத்துநெய்வாங்கின
சமர்த்தினையறிந்து நின்றே
சுந்தரமுகத்துவிழி நந்திடப்பாற்கொன்று
தூன்றப்புடைத்து வெகுவாய்த்
தோன்றப்பிடித்தபரி சுவமேபிடித்துத்
தொடுத்துமுன் காணமெற்றச்
சூழ்ச்சினைத்தவளை முன்போகவென்றநல
துங்கசன் கிராமகோவே
தோத்திரமதாய்ப்பல ராவுந்தமெனவுற்று
சொற்படிமுடித்த குருவே
செந்திருவளர்ந்தபுய நாதரேதிக்குவி
ஷயம்புரந் தோய்
ஜெகலவஜீகர மனோகரநீகா
திவாகர சகாயகிதியே
சிந்தாகுலந் தவிர வந்தவைத்தாருமே
சிறுதேர் நடாத்தியருள்வீர்
ஜெயஸ்ரீவராக்கமே செய்யிதிரரலிகாதரே
சிறுதேர் நடாத்தியருள்வீர். ௬

மிக்கசராஜிபதி ஜிபுரீல்க்குஅல்ஹம்து
விண்டேபடிப் பித்துநேர்
விருதரசர்கொண்டாட மறைநெறிவிளைத்தபுகழ்
வேந்தராபூ பக்கர்மகவும்
வீரினும்வீரர்விடை பேசவுரைகூறுமதி
வெற்றியுமரசுமகவும்
விழுமமுறவிருவர்பெறு மக்களைமணக்கோல
மேவுமணவாளரல்லா
விக்கினுமினித்தமொழி புறுக்காளையொருகோவை
யிலெலளகெறும் பலகைகண்டே
வியல்புசெய்யும்வரிசை யுதுமானுக்குமறுவி
ழிலேயும்வல் வியமளிக்கும்
இதயமகிழ்பெற்ற சுதரிகளைமணமருளி
யிவர்களுடபூமணனோர்
இவனுலகுமுலவனுலகு மொருகுடையிலரசுரிமை
யேற்றிய ருகம்மதிறசூல்
தக்கமரபுக்குளுற வித்தெழுமகத்துவ
சவிக்கிய மறைக்குரிசிலே
சந்திரனெழுந்துரை வழங்கியசெழுங்கவு
தகலியினைப்பிறந்த
சையிதுமுகியித்தீன் சொற்குரியபேரரே
சையிது அசன்குத்தூசு
தருமச்சுதக்தர புரந்தர துரந்தரீக
சந்திர னெனுங்குரிசிலே
திக்கரசர்கொண்டாடும் ஹக்கனெனவியேயெமது
சிந்தையின் விளக்குமணியே
சிராருநாகைப் பதிக்கரசரேயதிக
செல்வப்ர பூபாலரே
செய்யபச்சைக்குடைய துய்யவாஜும்முடைய
சிறுதேருருட்டி யருள்வீர்
ஜெயஜீவரத்நமே செய்யிதொலிநாதரே
சிறுதேருருட்டி யருள்வீர்.

நாகூர் - ஷாகுல்ஹமீ தாண்டவர் பிள்ளைத்தமிழ்

முற்றிற்று.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகிம்.

இ ஃ து

ஷா தல்ஹமீதுப் புலவரவர்கள் பாடல்

அஜ்மீர்

# காஜாமுயீனுத்தீன் ஆண்டகைபேரிற்

# பதிகம்.

ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட வாதிறகு மான்றிருத் தூதராய்ச்
செகதலத் தரசு செய்யுஞ்
செய்யிதுமு கம்மதுற்ற சூல்முஸ்த பாகபீ
செய்யகுல வழியு தித்துப்
பேர்கொண்ட சஞ்சரியெ னுந்தலந் தன்னிற்
பிறந்துமா தவம ணிந்த
பெருமலைத் தீபமெனும் செய்யிதுஇ யாதுத்தீன்
பேரின்ப மகவதாகி
சேர்கொண்ட மெய்ஞ்ஞான வாருதியின் வஞ்சமெனும்
சேர்நிலைமை யோர்மை யான
நெறிவேத முறைகளைத் திரிகால முற்றினுண்
ணெசித்து வந்த கவுதே
கார்கொண்ட தண்டலைப் பூம்பொழில் செழிக்கவே
காணுமஜு மீரின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் கீர்த்திரட் சித்தருளுங்
காஜாமு யீனுத் தீனே. க

மங்கையர்க டிலகமெனு மாகேநூ றவர்களின்
வயிற்றவ தரிக்க வுற்ற
மரணமுறு நாண்முதலாய்க் கலிமா முழக்கமே
வயிற்றினகங் கேட் டன்னையு
மெங்குலக் கோவயின் றங்கிறு ரெனமனதி
லேகவா னந்த மாகி
யெழில்கொண்ட பத்துமா தஞ்சென்று பெற்றன
ரிளஞ்சசி கோடி யென்ன

சன்னையுறு மைந்தராய் வருகாலந் தேயிருந்
தாலத்தி னற்புதமதாய்த்
தனியனைத் தொழுமத்த ஹய்யாத்தி ருந்தரிய
தன்முரீதி னிலனை வருங்
கன்னை யெனவே பெருகவும் பாரதிலே புகவு
காகிலஜூ மீரின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமுஹீனுத் தீனே.

செல்வம் பிறக்கப் பவுசான பாக்யமுள
சேமநா மத்தி னருள்சேர்
ஜெகவின் டலத்தினு மிகுபுகழ் தரித்திடுஞ்
சென்மசா பல்ய நாதா
சொல்லறிவு நல்லறிவு பல்லறிவு யாவுந்
தொகுத்துயிர் காயி லாகி
ஸாஹுதா யிருந்துதிரு வஹ்தா னியத்தினிற்
றோற்று ஸமதிற்கூ டியே
அல்லுபக லற்றமொரு வல்லபரி யேறியே
ஆனந்த மோன மாகி
அனுவினுக் கனுவாக வையாளி போட்டுநல்
லருள்சேரு மெங்கள் குருவே
கல்புக் குவப்பான ஹலப்பில்வந் தேயுயருங்
கருணை அஜூ மீரின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமுஹீனுத் தீனே.

சிங்கரலி புல்லாவின் சந்ததி துவர்க்கமாய்த்
திகள்பத்து நாலு முறையில்
திஷ்டாந் தமய்பெருக மட்டிலசைப் புகழ்வளர
ஜிஸ்தியாந் தரீக் கெடுத்து
தங்குமொரு கொடியெனப் பூமீது யாவருந்
தாவிப் பிடித்தபோதே
சற்றேனு மற்றிடா வடமென் றுரைத்திடுந்
தக்கநெறி மிக்க அதியா
பங்கப் பழிப்புரை புரிந்த வொரு மங்கையைப்
பாருணச் செய்வித் தோனே

பகுமிலா மடையருங் கொடியருஞ் சபைவந்து
பார்க்கவருநன் சேர்க்குங் கவுதே
தர்கைகரு முனகுந் துதிக்கமல் வரிசைகள்
காஜுமஜ்ஹ பீறின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமு யீனுத் தீனே. ௧

நாயனரு ளாலுலகி னெவ்விடையு மோங்குபேர்
நவில்முகம் மதுசனென்ன
நாகரீகத் தோடு தந்தைதாய் கூடவே
நாட்குநா ளாய்ச்சிறந்து
தூயநபி காஜா முயீனுத்தீ னெனுநாமஞ்
சொல்லியே கூவி டேவத்
துதியான திருநாமம் தொண்ணூற் றொன்பதுபேர்
துலங்கவே முழங்கு மதனை
வாயுமுகம யாயும்ச்ம யனுதினமு மோயாம
லன்புவைத் தோது நர்க்கிங்
கன்றுட கந்தோறும் வெற்றியோட் சக்கிருபை
யாகிய வாழ்வுண் டாமால்
காயகச் சங்கீத கேயவள மிஞ்சுமுயர்
கருணை அஜ்ஹ பீறின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமு யீனுத் தீனே. ௨

திக்குத்தி காந்தமுள மாந்தருந் துதிசெய்யுந்
திருமதின மீது செலவே
திகழரிய படையிட்ட மாதுளங் கனியீந்து
திருவதா யிற்றருலே
சொற்குரிய ராகிரு மஹாமீறு செல்லுமென
சொற்றவாய் மைக்கு வந்தே
சோபனமி தென்றுமத் தேசநாற் பதுபேருஞ்
சூழ்ந்திட வடுத்தல் கண்டு
செக்கச்சி னந்திப னுட்கொண்டு நால்வசமுஞ்
செறுத்தங்கு பாது காக்கச்
செழுமைதரு மவர்விழிக டெரியாம லுள்ளேறிச்
சென்றங்கு தங்கி மெத்தக்

கக்கிசப் பட்டரச மேனுடியற வமர்செய்த
கருணையஜ்ஞா மீரின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமு ஹ்யுத் தீனே.

துதிகொண் டிடுங்கன்சின் மகுபியா வறிவுறத்
தோனுங்கா திரிய டுத்துத்
துங்கதப காத்தியுஞ் சஹர்வறுதி யாவுடன்
துலங்குஷத் தாரி யாவும்
விதிகொண்ட நகுஷ்பந்தி யாவையு மடுத்துநேர்
விளங்கிடுஞ் ஜிஸ்த்தி யாவும்
இருப்புட னிவ்வாறு தீக்ஷையு முவந்துமே
யிளைஜிஸ்த்தி யாவி னிலையாய்
மதிகொண்ட கீர்த்திமெய்ஞ் ஞானந்தம் புரிகின்ற
வல்லமை தெள்ள முதமே
யமைந்தனைச் சிரங்கொய்து சதிசேட் டவர்க்குயிர்
வாகுடன் பொருத்தி னோரே
கதிகொண்ட செல்வச் சிறப்புமென் னுளிலுங்
கனியுமஜ்ஞா மீரின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமு ஹ்யுத் தீனே.

தேசிகனை நாடமுன் னுதுமா னுல்ஹா றானி
தீட்டுமுப தேசம் பெற்றே
செம்மையொடு தமதுதிரு காதிமுடன் முழுமோர்
திக்குண்டை யடுத்து மிக்க
ஆசித் தொருகங் கனல்கேட்க வதுவணங்
கன்னவ ரில்லை யென்ன
ஆலறவவர் முன்னமுறு மரசனுயர் மசலைக்கொண்
டக்குண்ட வத்துட் புக்கிக்
கூசிடா தெழுந்துவெளி வரக்கண் டியாவருங்
கூறுகலி மாவை விள்ளக்
கோதற்ற பல்லறிவி னேடுநல் லோர்களின்
கோலத்தி லாக்குங் குதுபே
காசினியி னும்மீது நேசம்வைப் போர்களைக்
காக்குமஜ்ஞா மீறின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமு ஹ்யுத் தீனே.

எழுபத்து வருடமிப் பூமிதுறக்கமென
கிடந்தா இருந்த பொருளே
யெக்கால முங்குதுப் பதுத்தியா ருக்கருளை
யெழிலுடன் காட்டுவோரே
பழுதற்ற ஜெயபாலு வித்தைக ளனைத்தையும்
பலியாம லாக்கியுந்தம்
பாதம் பணிந்துமவர் நேர்நெறியி லாகவே
பாரவொலி யாக்கினோரே
வழுவற்ற வாதிஹுஸை நத்திஹுஸம் போதிலே
வரிரண்டு பொன்னெழுத்தால்
வல்லவன்ஹபீபு றஹ்மானை மவுத்தென்ன
மதிகெற்றி யுற்ற கோவே
கழுதுணடு பாடுதண் டலைசூழ்ந்த செஞ்சாலி
காணுமஜ்ஜா பீறின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமுஹீனுத் தீனே. ௯

தீனோர்கள் முஃமினீங்கள் முமீன்க ளுலமாக்கள்
தெளியுமொலி மார்கள் தாமுந்
திகழ்தாக் கருதியே மகிழ்பதம் பரவியே
தினமும்வந் தனைகள் செய்ய
வானோர்க ளனுதினமு மாருமை னும்வந்து
வாழ்த்தியே போற்றி யேக
வந்தவர்கள் ஹாஜத் தனைத்தையு மக்பூலின்
மண்ணுமே வதுபோ லவே
யானொரு மக்கடிமை யானாகினே னெற்கும்
மாதரவு தான்புரித் திங்
கலிபுலா மீமென்னு முச்சுடரி னுச்சிக
வழிவையளித் தனுதி னத்தும்
கானேங்கு பூம்பொழி லுறைந்துமறை யோங்குதிரு
கஜியினஜ்ஜா பீறின் வாழ்வே
காதல்கொண் டடிமையைக் காத்திரட் சித்தருளுங்
காஜாமுஹீனுத் தீனே, ௰

காஜாமுஹீனுத்தீன்பேரில் பதிகம் - முற்றிற்று.

# ஞானோதய புஞ்சம்,

பதம்-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

## பல்லவி.

வாஞ்சையானதுவே வளர்மையலாகுதே
வந்தனைந்தந்தனம்—வாஞ்சையானதுவே

## அநுபல்லவி.

க. தேன்சொரிந்திலங்கும் பூஞ்சோலைவிளங்கும்
தேசஅஜ்மீர் காஜாமுஹீனுத்தீனே
சனிதபபமகரி சரிகமபதநித
தத்திமிதிமித்ததிமி ததிங்கிர்தத்தோமெனவே
தாஜுல் லவுலியாவான காஜாமுஹீனுத்தீனே. வாஞ்சை

## சரணங்கள்.

உ. மங்கையெர்ருதி பங்கப்பழிப்பாய்
மன்னர்க்குதுபுத்தீனைச் சொன்னதைமாத்ரம்பிரே. சனி,தப-வா

௩. மண்டல மீதெங்குங் கண்டறியா காட்சி
மகிமையருளுங் கவுது காஜாமுஹீனுத்தீனே. சனிதப-வாஞ்

௪. அழிவில்லாவக்கினித் தழலிடையிறங்கி
அதிசெயமாகவந்த காஜாமுஹீனுத்தீனே. சனிதப வாஞ்

௫. மிஞ்சுபுகழுறுஞ் சஞ்சரிநகர்வந்த
மேன்மைகுதுபாய்வந்த காஜாமுஹீனுத்தீனே, சனிதப-வாஞ்

௬. கத்தனருள்வள ருத்தகியாகுத்தீன்
கண்மணியாகவந்த காஜாமுஹீனுத்தீனே. சனிதப-வாஞ்

௭. சொந்தஅடிமையான ஷாகுல்ஹமீதுப்புலவன்
துன்பமகத்துமெங்கள் காஜாமுஹீனுத்தீனே, சனிதப-வாஞ்

பத - முற்றிற்று.

பதம்-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடியேனு னேனை யாண்டருள் நாயகமே

அநுபல்லவி.

படிமிசை விளங்கிடுங் கொடியெனுஞ் ஜிஸ்த்தியா
பதியஜூ மீரசே
கடிமலர்ப் பதத்தைத்து கண்பார்க்க வேணும்யா
காஜா முகீனுத்தீனே. (அடியே)

சரணங்கள்.

க. தாய்வயினிருந்து நாலாணமாதத்தினிற்
சன்னை தருங்கவியா
காயமுளங்கிட நேயமாயோதிடுங்
காஜா முகீனுத்தீனே. (அடியே)

உ. அழகான ரூபினி லெழில்கொண்ட ஒலிமார்க
ளன்றுடஞ் சொலிப்போகவே
எலக்க மில்லாமலிப் பூமியிற் பிறந்திடுங்
காஜா முகீனுத்தீனே. (அடியே)

௩. புடவியிற்பிறக்க வுடனிறையொளிவு
புரக்கவெங்குஞ் சிறக்க
கடனெனுமத்த ஹியாத்துடன்பிறந்திடுங்
காஜா முகீனுத்தீனே. (அடியே)

௪. பேரொளியதுவும் சோகவெங்கணும்
பெருகி யுளமமைந்து
கார்மானமாகிய அற்புதந்தரித்திடுங்
காஜா முகீனுத்தீனே. (அடியே)

௫. சொல்லரிதாகிய வல்லதிருட்டார்தாஞ்
சொருகுடனே வளர
கல்லாதமோடனாக் கல்வியுண்டாக்கிடுங்
காஜா முகீனுத்தீனே. (அடியே)

௬. சின்னஞ்சிறுவயதி லின்னிலத்தவருடன்
சேராமல் சுசூதானோரே
கன்னலமுதமொழி சொன்னயமுரைத்திடுங்
காஜா முஹீனுத்தீனே. (அடியே)

௭. ஈராறு வயதிபு றூஹீயில்மஜ்தூபி
இன்ப அனுஷ்டானம் பெற்றோ
காராருள்சிறந்த கல்விவளர்ந்திடுங்
காஜா முஹீனுத்தீனே. (அடியே)

௮. சைசுள்ளபதியான சைசாப்பூர்விளங்கிடுஞ்
செய்யிது உதுமான் ஹாறூனி
கைருணதீட்சைக ளுபதேசம் பெற்றிடுங்
காஜா முஹீனுத்தீனே. (அடியே)

௯. மக்கமதீனு வந்திக்கெண் டிசைகளு
மகிழுடனே செலுகால்
ஹக்கனருள் நபியிக்க பளாமருளுங்
காஜா முஹீனுத்தீனே. (அடியே)

௰. கொண்டல்குடைநபி கண்டறியப்பளாங்
கொடுப்பதைத் தானறிந்து
கண்டிடும் அஜ்மீறிற் சென்றவரேயெங்கள்
காஜா முஹீனுத்தீனே. (அடியே)

௰௧. அஜ்மீருண்டிடும் றஜனும்படைகளு
மனேகத்தொழில் புரிந்துங்
ஹாஜத்துப்போலவே அவ்வூரமைந்திடுங்
காஜா முஹீனுத்தீனே. (அடியே)

௧௨. அக்கினிக் கிடங்கில் புக்கி வெளிவந்து
அரசன்மற் றீனவர்களுங்
கைக்கொளும் பொருளான தீனவ ராக்கிடுங்
காஜா முகீனுத்தீனே. (அடியே)

௧௩. ஆறுபத் தாறெனு மட்சரத் தடங்கா
அருமெய்யத் தென்னுள்ளத்தே

கூறாய்விளக்கி யீடேறும்படிக்கருள்
கவுதா முகீனுத்தீனே, (அடியே)

௧௪. வஞ்சக மிஞ்சிய நெஞ்சின ளாயொரு
வஞ்சியும் படிறுரைக்க
கண்செவந்தேபூவு நிஞ்சிடச்செய்திடுங்
காஜா முகீனுத்தீனே. (அடியே)

௧௫. நாட்டம்வைத்தோதுவர் நாட்டங்கடரவே
நற்கருணை புரிவீர்
காட்டில்சுகூதான் கோட்டத்திலதிஜெய
காஜா முகீனுத்தீனே. (அடியே)

௧௬. ஆரணமுழங்கிய பூரணப்பொருளறி
யானந்த முடையவரே .
காரணக் கடலான தாரணி அஜுமீர்வாழ்
காஜா முகீனுத்தீனே, (அடியே)

௧௭. சஞ்சரி செய்யிதுஇ யாகுத்தின் கண்மணி
சங்கைமக வானோ
கஞ்சப்பதம்ஷாகுல் ஹமீதுப்புலவனுக்கருள்
காஜா முகீனுத்தீனே. (அடியே)

பத - முற்றிற்று.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

இஃது

குல்பறுக்கா

காஜாபந்தே நவாசு ஆண்டகைபேரில்

# முனாஜாத்து.

ஆஹதான ஆலம்சு கிறானதில்
அமல்கொண்ட அல்ஹம்து லில்லாஹிநீ
சுஹூதாம் ஷாகூதீனு மவுஜூதுநீ
துடரான செய்யிதுபந்தே நவாஸ். ௧

பகரான குதறத்து ஹலமத்திலே
பாசமா யெழுந்தேறு மகுமூதமோ

சகாவாக அவுலாது வழிவந்தோரே
தயவான செய்யிது பங்கேதகவாஸ்.
தாயார் வயற்றிற் பிறக்கு முனனுள்
தாயுடன் பஞ்சை விளக்கச்சொலி
மாயா வவுறத்தை மறைத்தேபிறந்த
மயமான செய்யிது பங்கேதகவாஸ்

தவாபுள்ள செயல்செய்திங் கருளெறலே
சலாம்ஷபா அத்துஞ்சலவாத்திலே
சவாதன்னில் வஸ்யாச தனை நீக்கியே
சயம்பெற்ற செய்யிது பங்கேதகவாஸ்.

ஜலால் ஜமாலான கமாலானநூரால்
நரிப்பாக வயல்செய்து அஹியானிலே
கனாமான புறாக்காளின் கனியுண்டவர்
கைர்செய்யுஞ் செய்யிது பங்கேதகவாஸ்.

ஹராமீமு தும்மது ஷபாஹத்திலே
கைரு யெனைச்சேர்க்கக் கடனுகுமே
நேமிக்கு ஜஹமார்பீர் கான்வாதாவில்
கிலேகண்ட செய்யிது பங்கேதகவாஸ்.

ஷைர்நோம்பு தொழுகைகலி மாஹஜ்ஜுடன்
கலப்பற்ற சகலசற் குருவானபீர்
உயர்கின்ற கிலேகண்ட வுயரவுலியா
வுதவிதருஞ் செய்யிது பங்கேதகவாஸ்.

தஸீலான தாஹா நபிமுஸ்த்தபா
ஷபாஅத்துச் செய்யுமெங்கள் சக்ருத்திலே
கலீயத்துக் கலிமாவின் பொருளானதைக
கைர்செய்யுஞ் செய்யிது பங்கேதகவாஸ்.

தாத்து மகுமியிற் செய்தேலஹூர்
தனமாகி மவுத்துமுன் மவுத்தாகிய
சேர்த்துப் பரிதிசெய்யு மானகாஜா
நிறப்பான செய்யிது பங்கேதகவாஸ்.

றகுமான ஆதருக்கும் வடிவானகோலே
றகுமத்தும டறக்கத்தும் வரிசைதரும்வாழ்வே
பகுமான குல்பறுக்கா வாழும்பீரே
பகவிதரும் செய்யிது பங்கேதகவாஸ்.

ஸமான் மநுஷரிற் கேள்விகேட்கின்றநாள்
தலைக்குமேற் கதிர்நின்று சுடும்வேளையில்
அமானமாம் அல்ஹம்து கொடிநிணலிலே
அருள்செய்யும் செய்யிது பந்தேநவாஸ். ௧௧

சலாம்ஷபா அத்தும் ஆகிறத்திலே
தஸீல்செய்த முஹம்மது றசூலுல்லா
விலாயத்து கைவச மானகாஜா
விதியுள்ள செய்யிது பந்தேநவாஸ், ௧௨

ஷாதுல்ஹ மீதானை நாகூரிலே
சந்தோச மாய்வந்த தெர்ப்பத்திலே
தாவித்து தன்கோல மறுகோலமாய்த்
தான்வந்த செய்யிது பந்தேநவாஸ். ௰௩

ஸிந்தீக்கு அபூபக்க ருமறுத்தாபு
செல்வ ருதுமானு ரலியாரையும்
முத்திபெற நினைவதுவு மாறுபலே
முறுதான செய்யிது பந்தேநவாஸ். ௰௪

ஸற்றான பாவங்கள் நாடாமலே
ஸயீபாம் புவியாசை கொள்ளாமலே
ஷற்றான துன்யாவைச் சாராமலே
தயவுசெயுஞ் செய்யிது பந்தேநவாஸ். ௰௫

தபகாத்தி ஜிஸ்த்தியா ஷஹர்வர்தியா
தரிப்பாணை காதிரி வழிநாலுக்கும்
சடக்கான போது சுவால்சொன்னவர்
தருமான செய்யிது பந்தேநவாஸ். ௰௬

ஸில்ஸில்லி வாயிக்கொடி நிணலிலே
நினைவாகத் தங்கள் முரீதீங்களை
சொல்லுங் கலிமா சுவாசத்திலே
துணைசெய்யுஞ் செய்யிது பந்தேநவாஸ். ௰௭

ஆஷிக்கு மநுஷருக்கு மில்முல்யெகின்
அருட்புடன் பீஜத்தி ஜனூல்யெக்கின்

மருஷருக்கு கலாவில் ஹக்குல்யெக்கீன
மனமூஹுஞ் செய்யிது பங்கேதகவாஸ். ௰

குற்றத்தூ ஐனுல் யெக்கீன்பதவியை
குதுபான முகியித்தீ னுதரவுடன்
ஷற்றத்து போக ஜமால்வடிவதால்
தயவான செய்யிது பங்கேதகவாஸ். ௰

பருமான லாகூத்துப் பதியானதில்
பகவிர வற்றிருந்த மைதானிலே
சுகமான குல்பறுக்கா கர்வாழும்பீர்
துணைச்செய்யுஞ் செய்யிது பங்கேதகவாஸ். ௨

குல்கூவல் லாவான குறத்திலே
குன்றொன்ற சொல்நின்ற கோலத்திலே
அல்லும் பகலற்ற மைதானிலே
அருள்செய்யுஞ் செய்யிது பங்கேதகவாஸ். ௨

காலக்கோள் நீர்க்கொப்பு சைத்தான்களை
கரைந்தோட வேவெட்டிக் கருவறுக்கவே
ஆலமேல் வந்த வொளிபாசவே
அமல்செய்த செய்யிது பங்கேதகவாஸ். ௨

லகுனத்துச் செய்கின்ற கன்னுஷ்டன்
லகுலுக்கு ளாகாமற் காத்தருள்வீர்
றகுமத்து நிறைவாக வரிசிக்கவே
றகீமாக்கும் செய்யிது பங்கேதகவாஸ். ௨

மகுமூது நபி மூஸ்த்த பாசல்லமும்
பகுதாது மீறான் முகியித்தீனுக்
தருமான ஷாகூர் ஷாதுல் ஹமீதும்
தயவான செய்யித்து பங்கேதகவாஸ். ௨

நபிமா ர்ணவர்கள் தங்களுடன்
நலமான குதுபுமார் தங்களுடன்
கவிசேரும் அவுலியா தங்களுடன்
[illegible]பீபான செய்யிது பங்கேதகவாஸ். ௨

வலியான செய்யிது மஸ்வூதொலி
வந்திடு கடையனூர் பதியானதில்
கலிமாப் பொருள்செய்கு உதுமானுடன்
கைர்செய்த செய்யிது பந்தேநவாஸ். ௨௬

ஹிம்மத்தாங் கிஜுறு அலைகிஸ்ஸலாம்
ஹிதாயத்துத் தந்தென்னை ரட்சிக்கவும்
உம்மத்து நபிமார்கள் கூட்டத்திலே
உதவிசெயுஞ் செய்யிது பந்தேநவாஸ். ௨௭

லாமலிபு நபிவான் லாகூத்திலே
லாயிலா இல்லல்லா கூவென்றசொல்
தாமதமி லாமலே கலிமாவைத்தான்
தாவேணுஞ் செய்யிது பந்தேநவாஸ். ௨௮

யாகூயா றகுமானே அடியார்செய்த
அமல்பிழைக ளெல்லாவற்றும் நீபொறுப்பாய்
வாகு பிழைகள்தாய் தகப்பன்செய்த
வன்மை யெலாம்பொறு அல்லா கூஆமீன். ௨௯

அஸ்த்தகுபி ரல்லா அனஸ்த்தகுபி ரல்லா
அஸ்த்தகுபி ரல்லாகு மிம்மாசி வல்லா
அஸ்த்த குபிரல்லா அனஸ்த்தகுபி ரல்லா
அஸ்த்த குபிரல்லா அனைவர்பிழை பொறல்லா. ௩௰

முனஜாத்து - முற்றிற்று,

——(*)——

இப்பாக்கள் பெரிய மகான்களின் பாவானதினாலும் அனேகரின் வேண்டுகோளின் வண்ணம் அச்சிட நேர்ந்தமையாலும் யானொன்றும் பேதஞ்செய்து இருந்தவாறே அச்சிடலாயினேன்.

# ஞானோதயபஞ்சம்,

## பதம் - இராகம்-உசேனி-ஆதிதாளம்.

### பல்லவி.

ஜெயநயச் சீறடி தருமென்பீரே
செய்யிது பங்தே நவாசொலி நயினாரே

### அநுபல்லவி.

நயந்தருங் குல்பறுக்கா நகர்செங்கோல்புரிந்தவா
நாதர்பங்தே நவாசொலியே மதியே நிதியே துதியே
காஜாபங்தேநவா சொலியிரு பதகதி தரவருவீரே
நாமங்கைசூதரா சனுதின மெனநிடங் தனதருள் புரிவீர். ()

### சரணங்கள்.

௧. கடலமளியை நிறுத்திடுங் கிந்தில்வலிபோர்
கருணைசெய்யிது முகம்மதொலியே மதியே நிதியே கதியே
காஜாபங்தேநவா சொலியிரு பதங்தரவருவீரே
நாமங்கை சூதரா சனுதின மெனநிடங் தனதருள்புரிவீர். ()

௨. தாய்வயிற் றிருந்தகாலே பஞ்சருந்தச்சொலி
தீங்குமவுறத்தைக் காட்டாதனியே மதியே நிதியே கதியே
காஜாபங்தேநவா சொலியிருபதகதி தரவருவீரே
நாமங்கை சூதரா சனுதின மெனநிடங் தனதருள் புரிவீர். ()

௩. சீர்தரு மவுரங்கபாத் ராஜசூதா புத்ரரே
செல்வர்பங்தே நவா சொலியே மதியே நிதியே கதியே
காஜாபங்தே,நவா சொலியிரு பதகதி தரவருவீரே
நாமங்கைசூதரா சனுதின மெனநிடங் தனதருள் புரிவீர். ()

௪. போற்றிடுஞ் ஷாகுல் ஹமீதுப் புலவனுக் கருள்புரியும்
புண்யபங்தே நவா சொலியே மதியே நிதியே கதியே
காஜா பங்தேநவா சொலியிரு பதகதி தரவருவீரே
நாமங்கை சூதரா சனுதின மெனநிடங் தனதருள் புரிவீர். ()

பத - முற்றிற்று.

பதம் - இராகம் - கமாசு - ஆதிதாளம்.

### பல்லவி.

ஞானஞ் சிறந்ததவமே - ஒலிநாயகமே
யாருந் துதிப்போர்க் கிதமே

### அநுபல்லவி.

வானக் கதிர்மதி விண்டானு மமைத்த வல்லோன்
வளர்கிருபை காஜாபந்தே நவா சொலியே. (ஞானஞ்)

### சரணங்கள்.

வாசமிகுந்தபதியாம் - குல்பறுக்காவினில்
வாழும்ப்ர சங்கத்துதியாம்
ராஜர்ராஜர்புகழும் காஜாமுயீனுத்தீன் பேர்
மாசிலாதீபமே காஜாபந்தே நவா சொலியே. (ஞானஞ்)

நாட்டப்படிக்கற்கருட்டி - சர்க்கரைநேர்ந்து
நாடா திருப்போர்க் கட்டி
நீட்டிஞ் சடைவளர்த்துக் கூட்டுமுரீதவரை
நிரையம்புக்காமற்காக்கும் பந்தேநவா சொலியே. (ஞானஞ்)

காளுந்துல்கரு கர்மரதம் - பதிஞாஞ்செய்தி
மீளு மரணம் நீதம்
ஆளுஞ்சொர்க்கப் பதவி வாளுமொலி யுல்லாமே
அன்னைஸ்ஸெய்யிதா முகம்மதுப் பந்தேநவாசொலியே. (ஞா)

வாழைக் கமுகுதெங்கும் - பிலாமரச்சோலை
சூழும்வற பாத்தங்கும்
ஆளும் ராஜா குதர்வின்றுமை மகலேல்சொந்த
அடியேன் ஷாகுல் ஹமீதுக்கருளும் பந்தேநவாசொலியே.

பத - முற்றிற்று.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

இஃது

செய்யிதுமசுஊதுசாகிபு அவர்களின்பேரில்

# முனாஜாத்து.

அவ்வலில ஹுதாயுஹு தாகியே அடுத்தவா கிதுவா யதுவாஹுக தாய், செவ்வி டாலமஜா ஸாமி தாலுமாய்ச் சேர்ந்த ஆலமின்சான் காமிலாகியே, டவ்வஞ்சூழ் புவியோர்கள் குதுபுமாய்ப் பாதைகாட்டுங் குருமணி யானவா, திவ்வியப் பதந்தந்தருள் ஹாதியே செய்யிது மசுஊதொலி சாகிபே. க

பாத்திலைப் பகர்ந்தோதுங் குதுபுமார் பாரமான ஒலிகளு மேவிய, எத்தமான தர்க்கத்து ஜிஸ்த்தியா வெங்குமே பிறசங்க மதானதால், காத்திருந்து கவிஹத்துப் பெற்றபேர் கணக்கிலே யடங்காதா மதிலென்னைக், சேர்த்தருள் புரிந்தாண்டருள் காமிலே செய்யிது மசுஊதொலி சாகிபே. உ

திங்கள்போ லொளிவீசிய நாயகர் ஷெய்குதாமா ஹெலிகுரு நாதர்க்கு, சங்கைமேவுங் குத்துபு முகியித்தீன் சைக்கிளைப் படிக்கேமுரீ தீந்துசேர், தங்கமான கிலாபத் துதவியைச் சார்ந்திடுங் குதுபே கௌதேயென்னை, செங்கமலக் கரத்தி னணைந்தருள் செய்யிது மசுஊதொலி சாகிபே, ங

தாபித்தான் ஹதுவைப் பிடித்தியான் றவம்புரிந்திடும் வேளையின் முன்னமே, திபமே கிசாத்தி பாஞ்கடர் தோற்றிடும்படி சேர்ந்தருள் ஆரிபே, ஆரியந் தடனேதற ஜாத்துமே அகுலாவான மக்காமும் பெறகிதஞ், சேவித்தேனென் முறுதை நிரப்பிடுஞ் செய்யிது மசுஊதொலி சாகிபே, ச

ஜாமியான இஸ்மைப் பொதிந்திடுஞ் சாத்தையல் ஹூப்பகலு நிறைத்திட, லாயக்கானி லிருந்தெழுஞ் சோதியை நல்லகந் தெரிசித்து மகிழ்ந்திட, நேயமா யுதவுங்கிரு பாகர நேசரே விசுவாசரே பையத்தே, தெய்யப் பெற்றிடச், செய்தருள் லாதிக்கே செய்யிது மசுஊதொலி சாகிபே, ரு

ஹகாயிக்கான கடலினில் மூழ்கியே ஹக்கெனுந் திருமுத்தினைக் கண்டிட, பகாவதான மக்காமிசை யேறிடப் பாவியாகிய வேழையைக் காருமே, வசாறைப் பெற்றிட வந்தமுரீதினை வல்லவன் ஹலறத்தினி லாக்கியே, சகாவத்தெல்லா மனுசவருள் தரும் செய்யிதேமசுவூதொலி சாகிபே, ௬

கபிபினைத்தெரிந் தானந்தங் கொண்டிடுங் காரணக் கடலான குருமணி, கபுலத்தன்றிய பந்தேநவாஸொலி கனதியான மரபிற் சிரோமணி, நபியுடனிதுபாத்து மறிந்தவா நாயினுங்கடை யாகிய வையலே, லிபத்தினைப் பெறவே அருள் ஆஷிக்கே செய்யிது மசுவூதொலி சாகிபே. ௭

ஞானிக்காமி பாயுந்ற திகுறினை தன்னிலேபழு தாக்கியமூட்டினை, வாயிலொன்று மனதிலொன் றெண்ணியே வம்புசெய்யும் வலுத்தசண்டாளனை, நோயுந்துன்பமுங் கொள்வசை கேட்டினை நோக்கிப்பார்த்திட வாரதென் னேரமோ, சியமொத்த இரத்தின் மருத்துவா செய்யிது மசுவூதொலிசாகிபே. ௮

தாக்கிரீன்களின் கூட்டத்திற்சேரவே தங்களாலுப காரங்கள் தேடினேன், பார்த்திருந்து பரதவித்தேகிதம் பண்புவைத்தென யாள்வது பாரமோ, காக்கவேணு மென்றேயுமைப் பாடினேன் காமிலான முகப்பிலே ஹாஜிபே, தீர்க்கமாக வென்னைரட்சித் தருள்வீர் செய்யிதுமசுவூதொலி சாகிபே. ௯

றப்பருள்புரி யேவலை நாளுமே நாட்டமில்லா வீணரைக் கூடினேன், ஹூப்புவைக்கு மஷாயிகுமார்களின் குணமெடாத குருநிந்தைத் தேடினேன், தப்பிதஞ்செய்யும் பாவியே னாகிலும் தங்கள்காமஞ் சொலும்பொருட் டாலுமே, செப்பமாயெனைத் தாண்டருள் வாலியே செய்யிது மசுவூதொலி சாகிபே. ௰

ஸாஹிதி ஜெலிமாருக்கும் ராஜரே செய்குமார்கள் சிரோமணி நேசரே, வாஹிதானவனைப்புகழ் போஜரே வானுடன்புவி யேத்துமுல்லாசரே, யாகுதாவென்று கூவுங்கி யாமத்தி லென்முன்வந்தே இரங்கும்ப்ரகாசரே, தேகநோய்பிணி தீர்த்தருள் வாசரே செய்யிதுமசுவூதொலி சாகிபே, ௰௧

சிற்றுமேவு முஷாஹிதாச் செய்வதில் சிற்றுமேவும் பலினை வெய்திடியே, சற்றுசெய்திடும் போதுமே காத்தருள் சாகிபேசகலோர்க்கு

மெனக்குமே, குற்றத்திலெயி றுய்வரும் நாதரே குருநபியின் குலம
ணிப் பேரரே, தற்றக்தாகிலும் பட்சம்வைத் தாள்குவீர்செய்யிது மசு
லூதொலி சாகிபே, ௰௨

ஷம்சுதாத்தெனு மேடையி லேவந்து தானடனம் புரிந்திடமே
விய, எம்சயந்தருந் குன்குதாத் தாகவு மிறைவன்வேதத் திறக்கிய
அல்ஹம்தில், கம்செழுத்திலொன் றுகஉதித்திடுங்கருவினை யறியாது
மயக்கினேன், ஜெம்சு ரூபத்தைக்காண வரமருள் செய்யிது மசலூ
தொலிசாகிபே. ௰௩

லாதிக்கான மூர்த்தினைப் போலெனைத் தள்ளிடாதுகை தாங்கிட
வேகடன், நீதமாக மஷாயிகு மாருடன் நீரும்வந்தென் சக்ராத்து வே
ளையில், போதமாறு மிபுலீசு கலவியைப் போக்கிநல்பாவுக் தெய்வி
லேவழி, சிதமுன்று உமறுவை யருள்புரி செய்யிது மசலூதொலி சா
கிபே. ௰௪

லாயிகத்கம லானதைச் செய்திறை நல்வழியைத் தொடர்ந்துந
டந்திலேன், தாயிஅத்தம லானதைச் செய்திலேன் சங்கைகந்நபி சு
ன்னத் தெடுத்திலேன், காயிமான நமாசு மிறுத்திலேன் ஹக்குபாத்
திலக் கண்டறி யேனெனைச், சேயனென்றுகை தாங்கிட வேணுமே
செய்யிது மசலூதொலி சாகிபே. ௰௫

தையிபுக் கலிமாவை யுணர்ந்திடுஞ் சாகிபாமுது மான்றனை நோ
க்கியும், கையும் பின்னும் வருங்கலி பாக்களின் கையுந் தொட்டுமுரீ
தாகும் பேர்களை, கையும்நாளை மருஷறென் றேன்பிசை நானெடுத்
துச் சுமந்துகொள் வேனென்று, செய்யும் வாக்கினி லெங்களைக் கூட்
டுவீர் செய்யிது மசலூதொலி சாகிபே, ௰௬

லாமிருகிய ஜிஸ்த்தியா நல்வழி நாடிவந்து கலீஹத்துபெற்றவர்,
காவலாகுந்தி குறைச்சு வாசத்தீல் கருதியேயொரு சாஅத்திறஞ்சி
னல், பூவினாறுவருடம்சி யும்பிழை புண்யநாயன் பொறுக்கவ ரம்
பெற, நீயமானத் தரீகத்திற் சேர்த்தருள் செய்யிது மசலூதொலி சா
கிபே. ௰௭

ஆரிபாகிய பந்தேநவாசொலி யண்ணலுஞ்சிர மீது சடைமுடி,
பாரமாக வளர்த்ததைக் கேட்கவே பாரிலென்றன் தரீக்கில்லுள் தோர்
சொர்க்கம், சேரில்லாது நரகம்பு குந்திடில் தீவரஞ்சடை கொண்
டெடுப்பேனென்ற, சீருலாவிய ஜிஸ்த்தியிற் சேர்த்தருள் செய்யிது
மசலூதொலி சாகிபே, ௰௮

ஹாசம்மத்தோடு சலிப்புமிகுந்திடு மூன்மையாகுங் கியாமத் தமனியி, லெம்மைக்காரென்று செஞ்சிடும்போதிலே யேசாங்கபி கை நளைத்தாங்கிய, உம்மத்தோரி லென்னையுமன்றுடவே யும்மைக்கொண்டுபகாரமுங்கேடினேன், செம்மையான ஷபா அத்திற் சேர்த்தருள் செய்யிது மசவூதொலி சாகிபே. ௰௯

பாத்திவுறான ஹலைபுக்கரெனும் பண்புசஞ்சரி யென்னுமவ் வூரிலே, ஏந்துமாகப் பிறந்தஜு மீறிலே யேகனுற்ற வாலேய டங்கிய, கோத்திரக்குரு காஜாமுயீனுத்தீன் குதுபுநாத ருவந்திடுஞ் ஜிஸ்த்தியிற், சேர்த்தபோர்களி லென்னையுஞ் சேர்த்தருள் செய்யிது மசவூதொலி சாகிபே. ௨௰

குதுபுநாஹறீனைக் கண்டுமகிழ்ந்திடக் கோட்டிகொள்புக் கூருக்களைச் சேர்ந்திட, அதிசயங்களைக் கண்டுபுகழ்ந்திட ஆனந்தச்சுடர்வந்துமி லங்கிட, இதுவுமன்றிக் கடாட்சமுங் கண்டியா னின்பம்பெற்றிட ஜிஸ்த்தியைப் போலுண்டோ, செகமீடாதிந்தப் பாதையிற்சேர்த்தருள் செய்யிது மசவூதொலி சாகிபே. ௨௧

காமிலீன்க ளனந்தமே ஜிஸ்த்தியில் கவுதுமா ரகுதாபு மனந்தமே, ஆமிலீன்களு மாரிபனந்தமே ஆவுலிக்கெ ளுலிமாருமனந்தமே, ஜாமிலான புகாருவனந்தமே ஸாலிகீனுல மாக்களனந்தமே, சேமஞ்சேர்ந்திடுங் கூட்டத்தி லாக்குவீர் செய்யிது மசவூதொலி சாகிபே. ௨௨

லாமக்கானி லெழுந்தருள சோதியை நல்லுறவு கொண்டாடிப் புகழ்க்கிடச், சேமமான வுறாஜூ றாகுலீனைச் சேர்ந்தெழுந்தருவாக்கியிறஞ்சிட, வாலிபத்தாச் சுருபம்வந்தென்னையு மருட்டிடா தமணங்கிடச்செய்குவீர், சிலமாகு மவுனவடிவமே செய்யிது மசவூதொலி சாகிபே.

மூமினுயகை மேயுங்க ளேவலீ மோசஞ்செய்தவ னந்தரமாய்நின்று, ஆமீனா விழுந்து வருந்தியே போதபாதிப் பயித்தியங் கொண்டவன், உண்மையாகின பின்னவன் வங்கிச மொக்கலோடு மொளிந்ததுவானதால், தீமைகோபமவை யாதருள் செய்குவீர் செய்யிது மசவூதொலிசாகிபே. ௨௪

நாசஞ்சேர்குபி ரோர்களினுலைய நண்ணியுற்றிடக் கண்டுசினந்துவை, மோசஞ்செய்யக் கருதிய போதொரு மூர்க்கவேங்கை யழைக்கவுமன்பாய்ந்ததால், சீர்பாதத்தில் வந்துவிளுந்தவர் தெண்டனிட்டிடக்காரணங் காட்டிய, தேசமேவுஞ்செழுஞ்சுடர் தீபமே செய்யிது மசவூதொலி சாகிபே. ௨௫

வஞ்சமிஞ்சிய நெஞ்சினனாகிலும் வாதுசூது வளர்த்தவனாகிலும், பஞ்சமாபாவி யாகிலும் வஞ்சியர் பாலிலாசை மிகுத்தவனாகிலும், கொஞ்சப் புத்தி யுடையவனாகிலுங் குருக்கள் நிந்தனைக் குடையவனாகிலுஞ், செஞ்சரணந்தனி லென்னைச் சேர்த்தருள் செய்பிறமசவூதொலி சாகிபே. உசு

ஹாதி செய்குதா மான்றுயர்ந் தேவரக் கண்டுதாமரைக் குட்டத்தினீர்மிசை, பாதமும்நனை யாமலே சென்றபின் பாரவேங்கை விலங்கினம் யாவையு, மோதிச்சென்றவர் வாரவஹ்தியெல்லா முன்மறி யென்னவிட்டிச்சோதித்தவர், சேதப்பாவத்தைத் தீர்த்தருளாலிமெய் செய்பிறமசவூதொலி சாகிபே. உஎ

ஸாலிமான முறைவழியின் ஞானரை நாளிலத்தில் லெனர்ந்தறி வித்திட, நேசமாயுமைக் கொண்டுப காரமு நித்தமித்தமுந் தேடி வருந்தினேன், ஆசைதீர வுமதுமலர் கூரவே யடிமைகாட்டப் படிக்கருள் வீரங்கள், சீசரிலென்னைச் சேர்த்தருள் நாயகே செய்பிறமசவூதொலி சாகிபே.

எவுமலாகிறில் வந்துமண் டாடியே யின்பமாஞ்சுவ னம்பெறச் செய்திடுங், கவுமிலென்றனைக் கூட்டுமவாக்குவீர் கனதியுங்கள் வழியைத் துயர்ந்ததால், நவமிலாநல் வந்தனை நாட்டத்தி னயம்பெறநிறவேற்றிட வுங்கடன், வைவுமுட்டனைசல வாத்துந் தவறிடா செய்பிறமசவூதொலி சாகிபே. உகூ

குலமுவந்த தரீக்கத்து ஜிஸ்த்தியா நல்லபாதையைச் சொல்லமுஹியித்தீன், குலமுவந்த தென்பேரர் மசவூதை நுப்புடன் கண்டபேர்க்குநயமென்றும், பலமுவந்த சொல் லாணடபடிக்கிந்த பாருள்ளோர் கட்குச்செய்திடும் வள்ளலே, திலதமாகச் சிறந்திடுஞ் சற்குரு செய்பிறமசவூதொலி சாகிபே. ௩௰

ஹக்கருள் திருத் தூதரின் பேரரே ஹாகியாகவே வந்த உல்லாசரே, இக்கு சர்க்கரைதே னயிர்தமொழி யியம்பிடுந்திரு வாய்க்கியமானேரோ, மிக்கநாளுநங் கனவிற் றெரிசிக்க விரும்பிநாடும் மையலின் முறுதபோற், சக்கிலாதருள் செய்திடு வீரெங்கள் செய்பிறமசவூதொலி சாகிபே. ௩௧

முஹ்ஜாத்து - முற்றிற்று.

## பதம்-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

### பல்லவி.

வாரீசப் பொற்பாதமே தரவருவீரோ
வள்ளல் செய்யிது மசவூதொலி யெந்தன்பீரே

### அநுபல்லவி.

பாரெங்குஞ் சிறந்த குல்பறுக் காககர் வந்த
பாக்கியரான மசகூது ஒலியே. (வாரீச)

### சரணங்கள்.

௧. காலாதி காலமெல்லாங் கருத்தி லெண்ணியே
கனவி னினவுமே தினமுஞ் சகியாதே
  தாலமதி லனுகூலம் புரிந்திடுவீர்
  தருமசெய்யிது மசவூ தொலியே. (வாரீச)

௨. நாட்ட முடையோர்க்குமே நஸீஹத்தளிக்க
நம்பிய ஷெய்குதுமான் சாஹிபை விளிக்க
  காட்டு மறைபொருளைத் தேட்டமறக் கொடுக்குங்
  காமில் செய்யிது மசவூ தொலியே. (வாரீச)

௩. கட்செவி கடித்திட அச்சிணந் துடிக்க
கண்டவனும் நம்பியே விண்டங்கு துதிக்க
  பட்சம்வைத் தவன்பா லெட்சித் தருளுவோரே
  பாக்கிய ரான மசவூ தொலியே. (வாரீச)

௪. அற்புத மிகுத்தோரே இப்போதெனைக் காப்பீரே
தப்பிய பாவந்தீருஞ் ஷாஹமதானி மகவே
  செப்பிய ஷாகுல் ஹமீதுப் புலவன்மீதிற்
  சேமந் தந்தருள்வீரோ மசவூ தொலியே. (வாரீச)

பத - முற்றிற்று.

இஃது

## பு. மீ. ஷாகுல்ஹமீதுப்புலவரவர்களியற்றிய

### ஆசிரியவிருத்தம்.

கங்கைகுருலகந் தனிற்சிறந் தோங்கிடுங்
  கருணைநபி மார்க்க முறையைக் -
காதலா யனுதினமு மோதுதீ னவர்கள்சேர்
  கடையநல் லூரா னதிற்
சங்கைசெய் குதுமா னொலியெனுங் கீர்த்தியருள்
  சார்ந்திடுங் காமி லானோர்
தருகலியி னகரவர் கரம்பற்றி ஞானமுறை
  சைகுபகீர் லெப்பை யவர்கள்
புங்கமுட னிருவர்சொல் லிடுமெய்ஞ் ஞானோதய
  புஞ்சமெனு நாமஞ் சூட்டிப்
புவியவர் மகிழ்ந்திடக் கவியவரு வந்திடப்
  புத்தக மஃதை ஹிஜ்ரி
துங்கமுட னாயிர முன்னூற்றி பதினெட்டு
  தோன்றிடு மாண்ட தனிலே
இலங்குறம லானிருபத் திருமூன்றி லச்சிட்டோங்
  துதிபெருகி வளர ஆமீன்.

ஞானோதயபுஞ்ச-முற்றிற்று.